தென்மொழி

ஓ! தமிழ் மாந்தனே!

அன்று தொடங்கி இன்றைய நாள்வரை
அடிமைத் தமிழனே! நீ,துயில் எழுந்திட
நின்று கதறிய தொண்டைகள் எத்தனை?
நினைத்துப் புழுங்கிய நெஞ்சமும் எத்தனை?
ஒன்றும் பயனிலை; ஒருசிறு மாற்றமும்
உணர்விலும் அறிவிலும் உருப்பெற வில்லைகாண்!
என்று விடியுமோ, இணையிலா விடுதலை
ஏதுங் கெட்ட, யிவ் விருள்நிறை நாட்டிலே?

நேற்றுப் பிறந்தவர் நிலைநின் றெழுந்து,இந்
நீணிலம் முழுவதும் நிறுத்தினர் ஆட்சியே!
ஆற்றுப் படுகையில் அமர்ந்திருந் தார்பலர்
அக்கரை ஏறினர்; அவர்நடை தொடங்கையில்
வேற்றுப் புலத்திடை வெற்றிகள் குவித்த,நீ—
விண்ணிலும் மண்ணிலும் விழாப்பல வெடுத்த,நீ
சோற்றுப் பருக்கையிற் சுவைநலங் காண்பதோ?
சூம்பிய மறத்தனம் சூடேறல் என்றையோ?

ஓட்டைக் குடில்களும் உயர்ந்தன மாடமாய்!
உன்னை இரந்தவர் உரிமையைப் பறித்தனர்!
கோட்டை விடுத்தனை; கொள்கையைத் துறந்தனை!
குரலொலி குறைந்தது; குலைந்ததுன் குடிநலம்!
நாட்டை, மொழியினை, மக்களை நலஞ்செயும்
நாட்டமும் கொள்கிலை நடுத்தெரு நின்றனை!
ஈட்டும் விடுதலை எண்ணமும் இன்றி,நீ
இருந்தனை யேல்,உனை இழப்பதும் உறுதியே!

பட்டம், பதவிகள் பாடழித் தன,உனை!
பார்ப்பனப் பதடிகள் பழிசெயுந் துணிவுடன்
கொட்டம் அடித்தன, துறைதொறும் துறைதொறும்!
கூற்றை விளிப்பதோ அவர்துணை கூடியே?
மட்டந் தட்டுவர்; ஓ!தமிழ் மாந்தனே!
மற்றுநின் நிலையிலோர் மாற்றமும் காண்கிலேன்!
திட்டங் கொள்ளடா, விடுதலைத் தீர்ப்புநாள்
தெரிந்தது பார்;அதன் திகழ்ஒளி மூழ்கவே!

சுவடி: 8.

ஓலை: 3.

விலை

75காசு.

னித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

www.thamizham.net - Free E book No 7423

நமக்கு வந்த மடல்கள்

0 191: அன்புடையீர், வணக்கம். தூய தமிழ் நிலைத்துவாழத் தொண்டாற்றிவரும் தென்மொழியில் புதிய பணிப்பொறுப்பறிந்து மகிழ்ச்சி தெரிவித்தமைக்கும், எதிர்நோக்கும் பணியொன்றை எய்த வாழ்த்தியமைக்கும் என் உளமார்ந்த நன்றியை இருவர்க்கும் (தலைவர்—பொதுச்செயலாளர் உ. த. க.) அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பர். சி. இலக்குவனார், முதல்வர், இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

0 192: தமிழார்ந்த தனித்தமிழ் நெஞ்சமே! வணக்கம். தங்களின் தமிழ்த்தொண்டைப் போற்றுகின்ற அளவுக்கு எனக்குத் தகுதியில்லை. உயர்ந்த உளப்பாங்கும் ஓங்கிய சிறப்பும் கொண்ட தங்களது பணி சிறக்க என்றுமுள தென்றமிழை வாழ்த்தி வணங்குகின்றேன்.

—சி. மாரியப்பன், சென்னை-20.

0 193: "ஒரு தமிழன் தமிழர்க்கே உயிர்வாழ்கின்றான்; உயிர்வாழ்வோன் தமிழர்க்கே தனை ஈகின்றான்!" என்ற பாவேந்தரின் பாடலுக்கே இலக்கியமாய் இலங்கும் தண்டமிழ்த் தலைவா! நீவிர் வாழிய நீடுழி! வந்த வந்த மொழியினர்க்கெல்லாம்-வழிவிட்டு, வாழ்வளித்து அடிமைப்பட்டுத் தாமே தம்மருமை தெரியாது கெட்டு நின்ற, தமிழரை—தமிழ்க்கடல்-மறைமலை யடிகளார் வழிநின்று எழுச்சிப் பண் பாடி, எதையும் தாங்கும் உள்ளத்துடன் "தென்மொழி" வாயிலாக அல்லும் பகலும் கண்துஞ்சாது, பசிநோக்காது, ஓயாது, ஒழியாது, மெய்வருத்தம் பாராது, பாவேந்தரின் உறுதியுடன் செந்தமிழ் செழித்து வளரத் தாங்கள் செய்யும் எல்லா முயற்சிகளும் விரைவில் வெற்றிபெற, விடுதலைப்படை அமைத்திட அன்புடன் வேண்டுகின்றேன். "தமிழருக்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத் தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்"

—ஆ. ப. தொல்காப்பியன், பள்ளப்பட்டி, கரூர்.

0 194: நறுந்தமிழுக்கு நாடொறும் பாடாற்றும் நற்றமிழ்ப் பாவல, வணக்கம். இதழ்கள்தொறும் தனித்தமிழ்ச்செய்தித்தாள் திட்டத்தின் அறிக்கையினைக் காணும்பொழுதெல்லாம் உள்ளபடியே உள்ளம் உவகையெய்தத்தான் செய்தது. இத்தகைய சீரிய, நேரிய, செப்பமான பணியினுக்கு எந்தமிழ் மக்களின் ஒத்துழைப்பு எவ்வளவில் அமையும் என்ற எண்ணம் உள்ளத்தில் எழுந்தது. தாமரை மலர் போன்று விரிந்த என் உள்ளம், அரும்புபோன்று கூம்பவும் செய்தது.

நூற்றுக்கு மூன்று பெயராக இருக்கும் பிராமணர்கள், தொண்ணூற்றேழு பெயர்களின் உயர்வையும், பெருமையையும், நற்பண்புகளையும், நம்மவர்களின் வாயிலாகவே, பாழ்படுத்தியும் கீழ்ப்படுத்தவும், அடிமைப்படுத்தவும் ஏந்தாகப் பயன் படுபவை அவர்களின் அக்கிரகாரத்து நடையில் அம்மாமி அக்கப்போர்களின் வாடையோடுவரும் அன்னாரின் ஏடுகளேயாம். இத்தகு கேடர்களின்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்)

www.thamizham.net - Free E book No 7423

தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி:8 ஓலை: 3.
(மேழம், தி. பி. உ00க- ஏப்பிரல், மே.-1970)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1

யாருக்கும் வெட்கமில்லை....!

கடந்த சூலை 15, 16, 17-ஆம் பக்கல்களில் பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசில் நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடு வழக்கம்போலவே கூடிக் கலைந்தது. மலைநாட்டில் 1966-இல் நடைபெற்ற முதல் மாநாட்டிலும், சென்னையில் 1968-இல் நடந்த இரண்டாவது மாநாட்டிலும் என்னென்னவோ பயன் விளைந்ததாக எப்படி யெப்படியெல்லாம் நம்மில் பலர் தருக்கிப்பேசி மகிழ்ந்தார்களோ அப்படி அப்படியே இப்பொழுதும் தருக்கிப் பேசிக் கொள்ளலாம்; மகிழலாம்; தம் முதுகிலும் தாமே தட்டிக்கொள்ளலாம். ஆனால் உண்மையாக விளைந்த பயன்...? சென்றவர்களுக்கும் கண்டவர்களுக்கும் உண்டவர்களுக்குந்தான் தெரியும்! அதைப்பற்றியெல்லாம் கவலைப்படும் அளவிற்குத் தமிழர்களுக்கு உணர்ச்சியும் இல்லை; ஈடு

www.thamizham.net - Free E book No 7423

பாடும் இல்லை. ஏதோ ஒவ்வொரு நாளும் உண்ணுவதற்கும் உடுப்பதற்குமே அவர்கள் வாழ்க்கை சரியாகப் போய்விடுகின்றது. மக்களுக்கு ஓய்வாகக் கிடைக்கும் சில மணிநேரத்தையும் திரைப்படம், அரசியல் கூட்டங்கள், வம்பு வழக்குகள் முதலியன ஆட்கொண்டு விடுகின்றன. எனவே இத்தகைய தமிழ் ஆராய்ச்சி போன்ற துறைகளில் போய் வழுக்கி விழுந்தவர்களும் வாய்ப்புக் கிடைத்தவர்களும் தட்டிக்கேட்க ஆளில்லாத் தம்பிரான்மார்களாக ஆகிவிடுவதில் வியப்பில்லை.

நம் நாட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் அரசியல் என்ற பெயரை வைத்துக்கொண்டு என்னென்ன செய்யலாமோ அத்தனையும் சிறப்பாகவே செய்யப்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் எழுதக் கூடாது என்று எத்தனையோ முறை மென்றிருக்கின்றோம்; சொல்லக் கூடாது என்று பலமுறைகள் விழுங்கியிருக்கின்றோம்; 'நம்மவர்கள்' என்பதால் எட்டிக்காய் போன்ற எத்தனையோ உண்மைகளைச் செரித்திருக்கின்றோம். ஆனால் எத்தனை நாட்களுக்குத்தாம் புண்களை மூடிப் பொதிந்து வைத்துவிட முடியும்? மேலும் மேலும் புரையோடி அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமன்றி, தங்களுக்குத் தங்கள் புண்களே தீநாற்றம் வீசத்தொடங்கும் பொழுது கருவியிட்டாற்றுமல் என்ன செய்வது? இந்த உலகத்தமிழ் மாநாடும் இத்தகைய அரசியல் அரங்காட்டத்தில் உருட்டப்படும் ஒரு காயாகவே எல்லாருக்கும் பயன்பட்டு வந்திருக்கின்றதல்லாமல், அறிஞர்கள் பரிமாறிக் கொள்ளும் ஒரு கருத்தாய்வுக்கூடமாக இன்றுவரை அமையவோ தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவோ இல்லை.

பார்ப்பன மெய்யடிமை திரு. பக்தவத்சலம் முதல் அமைச்சர் என்ற முறையில் மலேயாவில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ளச்சென்ற பொழுது கடுமையாகவும் ஏளனமாகவும் வக்கணை பேசியவர்கள், இப்பொழுது அதே நாற்காலியில் அமர்ந்திருக்க வாய்ப்புக் கிடைத்த காரணியத்தால் தன்மூப்பாக நடந்து கொள்வதை அரசியல் என்பதா? போட்டி போட்டுக்கொண்டு தமிழைக் கெடுக்கும் புன்செயல் என்பதா? முதலமைச்சர் என்ற தகுதியைவிட ஆராய்ச்சிக் கருத்தரங்கில் கலந்துகொள்ளும்படி திரு. பக்தவத்சலத்திற்கு என்ன தகுதி யிருந்ததோ, அதைவிட மிகுதியான தகுதி இப்பொழுது நடந்த பாரிசு மாநாட்டிற்குச் சென்றவர்களுக்கு இருந்தது என்று எவராவது விளக்கிச் சொல்ல முடியுமா? கதைகள் எழுதுவதும் நாடகங்கள் அமைப்பதும், எதுகைமோனை நயந்தெறிக்குமாறு பொருளில்லாப் புரை மொழிகளில் உரையாற்றுவதும் அரசியல்பதவி தாங்குவதுமே தமிழறிவாகிவிடாது. இனி, தமிழறிவே ஆகாத அச்செயல்களைத்தமிழாராய்ச்சி என்று கூறுவதும், அக்கலைத்துறைகளில் இயங்கு

கின்ற தங்களைத் தமிழாராய்ச்சியாளர்கள் என்று கூறிக்கொள்வதும் அறிவிழந்த செயல்மட்டுமன்று; வெட்கக்கேடான செயலுமாகும். கலைத்துறைகளில் ஈடுபடுவோர் அனைவரும் மொழியாராய்ச்சியாளர்களும் இலக்கண இலக்கிய ஆய்வாளர்களுமானால் நாட்டில் மொழிக் கல்வியும் தேவையில்லை; பல்கலைக்கழகங்களும் தேவையில்லை. வெறும் நாடக மேடையும் பேச்சுமேடையும் ஏறுகின்ற அனைவரும் தங்களை மொழியறிஞர்களாகவும் பேராசிரியர்களாகவும் கருதிக்கொள்ளும் ஓர் அவலநிலை, இழிநிலை இந்த நாட்டில் அறிவுத்துறையைப்பற்றிய கடுமையான ஒரு நோய். இந்த நோய் மேனாடுகளில் தோன்றியதுமில்லை; பரவியதுமில்லை. நம்நாட்டின் சாவக்கேடு இது.

ஆங்கில இலக்கியப் பெரும்புலவரான சேக்சுபியர் சிறந்த ஒரு நாடக ஆசிரியர் ஆகலாம். அவர் நாடகங்கள் அனைத்தும் மொழிப் புலவர்களுக்குப் பாடமும் ஆகலாம். ஆனாலும் அவரை ஒரு மொழி ஆராய்ச்சியாளர் என்று மேனாடுகளில் அழைப்பதில்லை. அவருக்குரிய திறமை எந்த இடத்தில் பாராட்டப் பெறவேண்டுமோ அந்த இடத்தில் பாராட்டப் பெறுவதில் தவறில்லை. இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துத்தான் அன்று பக்தவத்சலம் மலைநாடு போனதை நாம் கண்டித்தோம். இன்று ஆட்சியில் உள்ளவர்களும் அன்று கண்டித்தார்கள். ஆனால் இன்று இவர்களும் அதே பிழையைச் செய்திருக்கின்றார்கள். பிறர்க்குச் சுட்டிச் சொல்லுகின்ற பிழையைத் தானே செய்கின்றவனை, 'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையுள் பேதை' என்றார் திருவள்ளுவர். பக்தவத்சலத்தைப் பேதை என்று நாம் கொண்டால், இவர்களை என்ன சொல்வது?

தமிழ் ஆராய்ச்சி என்பது அரசியலுக்குப் புறம்பான ஒருதுறை. இதில் ஈடுபடுபவர்கள் கட்சியரசியலுக்கு அடிமையாவதும், அப்படியாகவேண்டும் என்று கட்சித்தலைவர்கள் சிலர் எதிர்பார்ப்பதும் மிகக் கொடுமையான செயல்கள். தங்களைத்தாங்களே குலைத்துக்கொள்ளும் இந்நடுநிலையற்ற போக்கால் ஆராய்ச்சியும் கெடும்; அரசியலும் கெடும். அரசியலில் ஈடுபடவேண்டியவர்கள் தமிழ் ஆராய்ச்சிக்குத் துணையாக இருக்கவேண்டுமே தவிர, "எல்லாத் துறைகளுக்கும் நாங்கள்தாம் அதிகாரிகள்; அதனால் நாங்கள்தாம் எல்லாவற்றிலும் புகுந்து குட்டையைக் குழப்புவோம்" என்பதுபோல் நடந்து கொள்வது அறிவு வளர்ச்சிக்கே கேடு பயப்பதாகும். நோயாளிக்கு உறவினர்கள், உரிமையுடையவர்கள் நிறையப்பேர் இருக்கலாம். அதனால் "நாங்கள் எல்லாருந்தாம் அந்த நோயாளிக்கு மருத்துவம் பார்ப்போம்" என்று அடம்பிடித்து, உண்மையான மருத்துவர்களை அந் நோயைத் தீர்க்க

www.thamizham.net - Free E book No 7423

நெருங்கவிடாமல் தடுப்பார்களானால், நோயாளிக்குத் தீங்கு செய்தவர்கள் ஆவார்களே தவிர, நோயைத் தீர்ப்பவர்களாக முடியாது.

உலகத்தமிழ் மாநாடு எனத் தமிழில் சொல்லப்பெறும் இம்மாநாட்டைக் கூட்டுபவர்களின் நோக்கம், இஃது ஓர் ஆராய்ச்சிக் கருத்தரங்காக இருக்கவேண்டும் என்பதே. International Seminar of Tamil Studies—எனும் இதன் ஆங்கிலப் பெயரமைப்பே இதனை வலியுறுத்தும். கட்சி அரசியலுக்கும் நாட்டு அரசியலுக்கும் பிற மொழி, இன, நிற வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டு நின்று, உலகத்தின் முதுபழம் பெருமொழியாகிய தமிழ்மொழியை அமைப்பு, ஆக்கம், பரப்பு, தொன்மை, மாற்றம் முதலிய நாட்டியல், குமுகாயவியல் வளர்ச்சி வேறுபாடுகளை ஆய்வதும், ஆய்ந்த கருத்துகளை உலகின் நடுநிலையான அறிஞர் பலர் முன் வைப்பதும், அவர்கள் அவற்றை அறிவியல் தருக்க வழியில் நின்று கொள்ளுவதும் அல்லது தள்ளுவதும், அவ்வாறு கொண்டவற்றை உலகிற்கறிவிப்பதுமே இக்கருத்தரங்கைத் தோற்றுவித்தவர்களின் நோக்கமாக இருத்தல் வேண்டும். இதுவன்றி, ஈராண்டுக்கு ஒரு முறை இவர்கள் கூடுவதும் கலைவதும், இக்கூட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு அந்தந்த நாட்டு அரசியலாளர்கள் ஊதியம் பெற வழி வகுப்பதும் இவர்கள் நோக்கமாக இருக்க முடியாது. இவர்கள் கூட்டம் ஒரு நாட்டில் உள்ள எந்தக் கட்சிக்கோ, அரசியலுக்கோ எவ்வாறு ஊதியமாக இருக்கக் கூடாதோ, அப்படியே பிறிதொரு கட்சிக்கோ அக்கட்சியின் அரசியலுக்கோ இழப்பாகவும் இருத்தல் கூடாது. இப்படிப்பட்ட விளைவைத் தவிர வேறு விளைவுகளையோ உணர்ச்சிகளையோ இவ்வாராய்ச்சிக் கருத்தரங்கு விளைவிக்குமானால், அக்கூட்டம் தன் கொள்கைகளை நெகிழ விட்டுவிட்டதென்றே கூறிவிட்லாம். அத்தகையதொரு நிலைக்கு அது விரும்பியோ விரும்பாமலோ வந்து விடுமானால், அது தன் கொள்கையில் குன்றிமணி யளவும் வெற்றி பெற முடியாது. மாறாக அக்கருத்தரங்கம் ஆரவாரமிக்க சந்தைக்கடையில் ஆடிய கூத்துப்போலாகுமே அன்றி அறிஞர்கள் கூடிக் கொள்கைகளை ஆய்ந்த அறிவவை கழகமாக ஆகாது. கடந்த இரண்டு மாநாடுகளும் இத்தகைய சந்தைக்கடைக் கூத்தாகவே நடந்தன என்பதை காசுக்குப் புல் தின்னும் கடைநிலையோர் தவிர, நடுநிலை யறிஞர் எவரும் மறுக்க முடியாது.

கடந்த மாநாடுகள்தாம் இவ்வாறு இரங்கத்தக்க நிலையில் முடிந்தன என்றால், சென்ற மாதம் நடந்த பாரிசு மாநாடோ அவற்றினும் இரங்கத்தக்க நிலையில் முடிந்துள்ளது. இம்முடிவு தமிழர் இன்னும் முனைத்தெழவேண்டும் என்பதையே காட்டுவதாக இருக்கின்றது.

www.thamizham.net - Free E book No 7423

கருத்தரங்கின் பொதுச் செயலாளர் திரு. தனிநாயகம் அவர்கள் மாநாட்டு முடிவில் கூறிய ஒரு கருத்து மிகவும் கவனிக்கத்தக்கது. "இக் கருத்தரங்கம் புலமை வாய்ந்தவர்களுக்காகக் கூட்டப் பெற்றதேயன்றிப் பொதுமக்களுக்காக அன்று; இது தமிழைப் பரப்பு வதற்கான ஒரு கூட்டம் அன்று; தமிழ் மொழியை ஆராய்ச்சி செய்வதே இதன் நோக்கம்"—என்பது அவர் கருத்து. இக்கருத்துக்குப் பின்னணியாக அமைந்த சூழல்கள் என்னவென்பது நமக்குத் தெரியாது. ஆனால் இக்கூற்றில் இம்மாநாட்டைக் கூட்டியவர்களுக்கு இருக்கும் தவிர்க்கவியலாத சில அழுத்தங்கள் தெரிகின்றன; அவற்றால் அவர்கள் கொண்ட துயரமும் ஆற்றாமையும் வெளிப்படுகின்றன. தங்கள் முயற்சியை எவரெவரோ தம்தம் சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் நிலையை அவர் மறைமுகமாக உணர்த்துவதாகவே நமக்குப் புலப்படுகின்றது. இத் தொல்லைகளிலிருந்தும் அழுத்தங்களிலிருந்தும் விடுபட்டு அறிஞர்கள் தாமாக எண்ணி இயங்கும் நிலையில்தான் இம் மாநாட்டைக் கூட்டியவர்களின் நோக்கப்படி தமிழ் மொழிக்கு ஏதாவது பயன்கள் விளையமுடியும். அதுவரை பயன் பெறுபவர்கள் கருத்தரங்கைக் கூட்டுவோரும், அதில் கலந்து கொள்வோருமே யாவர்.

இம்மாநாட்டிற்குத் தமிழகத்திலிருந்து சென்றவர்களின் பட்டியலில் மொழிப் பேரறிஞர் திரு. தேவநேயப் பாவாணர் அவர்களும், பேராசிரியர் திரு. இலக்குவனார், பேராசிரியர் திரு. ஒளவை. சு. துரைசாமி, பேராசிரியர் சொக்கப்பனார் முதலியோரும் விடுபட்டிருப்பதும், இலக்கண அறிவும், எள்ளளவும் ஆராய்ச்சியுமில்லாத ஏமாற்றிகள், பச்சை ஆரியப் பார்ப்பன அடிமைகள், தமிழைக் காட்டிக்கொடுக்கும் தந்நலப் புலவர்கள் ஆகியோர் சேர்க்கப் பெற்றிருப்பதும், திரு. பக்தவத்சலத்தின் கண்களைவிட, திரு. கருணாநிதியின் கண்கள் உண்மைத் தமிழ்நலக் கண்ணோட்டம் மிக்கவை என்று கூறப்பெறுவதற்கு எள்ளளவும் சான்றாக இல்லை. தொடக்கத்தில் அவர் கூறியது தமிழறிஞர் ஒருவரின் தலைமையில் தமிழகக்குழு செல்லும் என்பதே. ஆனால் இறுதியில் தலைமைக்கென அவர் கண்களுக்குப் பட்டவர் தம் கட்சி அமைச்சரவையுள் ஒருவரும், தம் கருத்துக் கிசைந்தவரும் ஆகிய திரு. மதியழகனே! இவர் தலைமையில் சென்ற பதினெட்டுப் பெயர்களையும் முதலமைச்சரின் ஏடான 'முரசொலி' "பைந்தமிழறிஞர்கள் பதினெண்மர்" என்றும், "நிதியமைச்சர் மதியழகன் அவர்கள் தலைமையில் 18 பேர் அடங்கிய குழுவினர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து மழைபொழியத் தமிழகத்திலிருந்து'பாரீஸ் மாநகர் நோக்கிப் பயண மாகின்றனர்" என்றும், "திக்கெட்டும் பூவின் நறுமண மேந்திச்

www.thamizham.net - Free E book No 7423

செல்லும் தென்றலைப்போல் தமிழ் மணமதனை நெஞ்சிலேந்திச் செல்லும் தென்றலாக—தூதுக் குழுவினர் செல்கின்றனர்"—என்றும் பலவாறு சொல்லடுக்கும் கருத்தடுக்குமிட்டு, அவர்களை, "சென்று வருக! செந்தமிழை—சுழலுலகமெல்லாம் பரவச் செய்திடும் சீர்மிகு பணியினில் வென்று வருக!"—என்று வாழ்த்தி வழியனுப்பி வைத்திருக்கின்றது. இத்தகைய ஆரவாரப் புனைவுரைகளாலேயே, கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்றவர்கள் அனைவரும் ஆராய்ச்சி மிக்க பைந்தமிழ் ஆராய்ச்சியாளர்கள் ஆகிவிடார். திரு. கருத்திருமன் அவர்களும், சா. கணேசன் அவர்களும், ம. பொ. சி. அவர்களும், இலக்கியச் சொற்பொழிவாளர்களாக மதிக்கத் தக்கவர்கள் ஆவார்களே தவிர, மொழி ஆராய்ச்சிக்கு உரியவர்கள் ஆகிவிடார். உயர்நெறி மன்ற நடுவர் திரு. மகராசன் சென்ற முதல் மாநாட்டில் கலந்துகொண்டு ஆராய்ச்சி செய்தது என்ன? வடபாதிமங்கலம் தியாகராசர் ஒரு முதலாளியாகலாமே தவிர ஓர் ஆராய்ச்சியாளர் ஆவாரோ? திரு. வி. ஐ. சுப்பிரமணியமும், திரு. தெ. பொ. மீ. யும் ஒவ்வொரு முறையும் போய்த்தான் ஆகவேண்டுமோ? திரு. கி. வா. செகந்நாதன், திரு. நாகசாமி, திரு. ஐ. மகாதேவன், திரு. கே. வேங்கடசுப்பிரமணியம் ஆகிய நான்கு ஆரியப் பார்ப்பனர்களுக்கும் ஈடான தமிழறிஞர் ஒருவர்கூடக் கலைஞர் கருணாநிதியின் கண்களுக்குப் படவில்லையோ? திரு. பாரூக் அவர்கள் புதுவையின் முதல்வர்.—தி. மு. க. வைச் சேர்ந்தவர் என்பதால் மட்டுமே அங்குள்ள தமிழறிஞர் சிலரைவிட, பாரிசுக் கருத்தரங்கில் கலந்துகொள்ளத் தகுதிவாய்ந்தவர் ஆகி விட்டாரா? அவர் கருத்தரங்கில் படித்த கட்டுரைகள் அவர் எழுதியனதாம் என்பதைக் கலைஞர் உறுதிசெய்து கொண்டாரா? பட்டம், பதவி, அதிகாரம் முதலியவற்றின் வல்லாண்மையால் உண்மை யறிவு மறைக்கப்படவும் வீழ்த்தப்படவும் முடியுமானால், தமிழகம் அறிவு நிலையில் என்றுமே உயரப்போவதில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளலாம். அதிகாரத் தன்மூப்பால் மேலே கண்டவர்களை வைத்துக்கொண்டுதான் தமிழ்மொழியை வளர்க்க முடியும் என்றால் திரு. பக்தவத்சலத்தோடு இவரை எப்படி வேறுபடுத்திப் பேச முடியும்? பக்தவத்சலம் மலைநாட்டிற்குக் கூட்டிச் சென்றவர்களுள் பன்னிரண்டுபேர், திரு. கருணாநிதி பாரிசுக்கு அனுப்பிவைத்த பதினெட்டுப் பேர்களுள் அடங்குவர் என்றால், பக்தவத்சலம் செய்தவை பதினெட்டுக்குப் பன்னிரண்டு சரி என்பதுதானே பொருள்? இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மொழிப் பேரறிஞரும், தன்னிகரற்ற திரவிட மொழி ஆராய்ச்சியாளருமான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களையும், எந்தத் தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பை அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் ஏல் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச் சென்

ருரோ, அந்த நூலின் ஆசிரியர் பண்டாரகர் திரு. இலக்குவனாரையும் திரு. பக்தவத்சலம் மலேயாக் கருத்தரங்கிற்கு அழைத்துச் செல்லாதது நமக்கு அன்று வியப்பைத் தரவில்லை. ஏனெனில் அவர் முதல்தர ஆரிய அடிமை; தலையாய தமிழ்ப்பகைவர்; இந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் இருநூற்றுக்கும் மிகுதியான மாணவச் செல்வங்களையும், தமிழிளைஞர் களையும் கொன்று குவித்த கொடுங்கோலர். ஆனால் தமிழுக்காகவே தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்ததாகத் தருக்கிக்கொள்ளும் திரு. கருணாநிதியவர்கள் பாவாணரையும், இலக்குவனாரையும் பாரிசு மாநாட்டிற்குக் கூட்டிச்செல்லாதது ஏன்? அவர்களின் தமிழறிவிலும், நுண்ணிய ஆராய்ச்சியிலும் கலைஞர் கண்ட மஞ்சள்நிறம் என்ன? மொழிஞாயிறு பாவாணரையாகிலும் தம் கட்சிக்குத் துணையாக இருக்க வில்லை—அல்லது இயங்கவில்லை—பாவாணராக இருந்துகொண்டு தம் மைப் பாராட்டி ஒருபாட்டாவது பாடவில்லை என்று கலைஞர் குறைப் பட்டுக்கொள்ளலாம். ஆனால் பேராசிரியர் திரு. இலக்குவனார் செய்த தீங்கு என்ன? உலகத் தமிழ்க்கழகத்திற்குத் துணைவந்த நிலைகூட திசை மாறிப் போய்விட்டதே! அவரை ஏன் நம்பி அழைத்துக்கொண்டு போயிருக்கக் கூடாது?

உண்மையான தமிழ் வளர்ச்சி என்பது வெறும் சொல்லாரவாரங் களிலோ, கருத்துச் சிலம்பங்களிலோ இல்லை. அப்படியிருப்பது உண் மையானால் கம்பனை விடவும், காளமேகத்தை விடவும் சொற்களை உருட்டியவனும், கருத்துகளைப் புரட்டியவனும் எவனுமில்லை. அப்படிப் பட்ட அவர்கள் காலத்திலேயன்றோ தமிழ் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்? பின் ஏன் தமிழன் இன்னும் பார்ப்பனனுக்கு அடிமையாகக் கிடக்கின்றான்? தமிழ்மொழி ஏன் இன்னும் சமசுக்கிருத நச்சுப்பிடியி னின்று விடுபட முடியாமல் திக்கித் திணறுகின்றது? இதற்கு ஒரே யொரு விடைதான் இருக்க முடியும். தமிழின் சிறப்பும், பெருமையும், பழைய வரலாறும், உலக மொழிமுதன்மையும் இன்னும் மேனாட்டறி ஞர்களின் கண்களுக்குப் படாமல் மறைக்கப்பட்டு வருகின்றன. தமிழ னின் பெருமையைச் சிறுமைப்படுத்திக் காட்டவும், ஆயிரமாயிர மாண்டுகளாகவே அவன் ஆரியனுக்கு அடிமையாக இருந்தவனே என்று பொய் வரலாற்றைப் புனைந்து காட்டவுமே இங்குள்ள ஆரிய அடிமைத் தமிழ்ப் பேராசிரியர்களும், தந்நலப் பார்ப்பனப் பகைவர் களும் உள்ளார்களே தவிர, ஆராய்ச்சியால் தாம் கண்ட உண்மை வரலாற்றைத் தம் வாழ்வு நலன், இன நலன் முதலியவற்றைத்துறந்து, கட்சிப் புரட்டுகளுக்கும் அரசியல் அதிகாரங்களுக்கும் அஞ்சாது கூற வல்ல பேராசிரியர்கள் இல்லையென்றே கூறிவிடலாம். பதவியையும், பட்டத்தையும், பணத்தையும் நாடாத திரு. மறைமலையடிகளைப் போன்

www.thamizham.net - Free E book No 7423

றும், திரு. சோமசுந்தர பாரதியார் போன்றும், பாவேந்தர் பாரதிதாச னைப்போன்றும், பாவாணரைப் போன்றும் உள்ளவுரனும், உரைத்துணி வும், செயல் மறமும் கொண்டவர்கள் இனிமேல் தோன்றி முனைந்தா லொழிய தமிழை அதன் அடிமைத்தளையினின்று எவராலும் மீட்க முடி யாது.

இக்கால் ஆட்சியில் உள்ள நம் தமிழர்கள் தமிழுக்காகவும் தமி ழர்க்காகவும் செய்த செயல்கள் ஏதோ ஒரு சில இருக்கலாம். அவற் றிற்காக நாமும் பாராட்டலாம். ஆனால் அதற்காக அவர்கள் "தமிழ் வளர்ச்சி என்பது நாங்கள் செய்வதுதான்; இதைத் தவிர செய்வ தற்கு வேறு எதுவுமே-எவருமே இல்லை" என்பதுபோல் நடந்துகொள் வார்களானால், அவர்களுக்காக இரங்குவதைத் தவிர வேறு வழி யில்லை. வீணான பாராட்டுரைகளும் புகழ்ச்சி மொழிகளும் அரசியல் விளம்பரத்திற்கும் தங்களை வளப்படுத்திக் கொள்வதற்கும் பயன் பட லாம். ஆனால் அறிவுத்துறைகளுக்கு அவை எள்ளளவும் பயன்படா. தமிழ்வளர்ச்சிக் கருத்தரங்கு ஓர் அறிவியல் முயற்சியே! அஃது ஓர் இலக்கியக் கூட்டமுமன்று; பாட்டரங்கமுமன்று; பட்டிமன்றமும் அன்று. முழுக்க முழுக்க அஃது ஓர் ஆய்வுக்கூடம். எனவே அரசியல் சொற்பொழிவுக்காரர்களுக்கும் இலக்கியக் கதையாசிரியர்களுக்கும் அங்கு வேலையே இல்லை.

முதலில் தமிழ் மொழியின் மெய்வரலாறு அக் கருத்தரங்கில் தெளிவாக்கப்படல் வேண்டும். தமிழனின் தொல்குடிப் பிறப்பும் பழமை யும் அவ்வாறே ஆய்வு செய்து நிலைநாட்டப்பெறல் வேண்டும். தமிழ் மொழி ஆரியத்தின் கிளைமொழி யன்று, உலகமொழிகள் யாவற்றினும் மூத்த முதுமொழி யென்பதும். செம்மொழி யென்பதும், இம்மொழியே அனைத்து மொழிகளிலும் பல்கிப் படர்ந்து, விரிந்து, பல்வேறு கிளை மொழிகளையும், சேய்மொழிகளையும் தோற்றுவித்துள்ளது என்னும் மொழி யியல் வரலாற்றுண்மை நிலைநாட்டப் பெறுதல் வேண்டும். இத்தகைய அடிப்படைகளை உறுதிப்படுத்திக் கொண்டுதான் கழக இலக்கியங்களை யும் இலக்கணங்களையும் ஆய்தல் வேண்டும். இவற்றையெல்லாம் மேனாட்டறிஞர்களுக்குத் தெளிவாக்கிய பின்னரே, பிற்காலத் தற்கால இலக்கியங்களைப் பேசத் தொடங்குதல் வேண்டும். இவ்வாராய்ச்சிகள் உறுதிப்படுமுன் அவற்றைப் பேசுவது பழைய உண்மை வரலாற்றை மறைத்து மண்ணோடு மண்ணாகச் செய்யத்தான் பயன்படுமே யன்றி, மறைக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டும் கிடக்கின்ற அவ் வர லாற்றை வெளிக்கொணரத் துணை செய்யாது. அந்நிலை தமிழைத் தாழ்த்தும் நிலையே யன்றி உயர்த்தும் நிலையாகாது. தமிழ் ஏற்கனவே உயர்ந்துவிட்டது என்று தழுக்கடித்துத் திரியும் பேதைகளுக்கும்,

www.thamizham.net - Free E book No 7423

தமிழ் இனிப்பெற வேண்டுவது அறிவியல் வளர்ச்சியே *என்று முழங்கித்திரியும் மூங்கைகளுக்கும் தமிழைப் பற்றிய உண்மை நிலைகள் என்றும் விளங்கப் போவதில்லை. இவற்றை எல்லாம் முன்னின்று ஆராய்ந்து உறுதிப்படுத்தவல்ல தனிப்பேரறிஞர் பாவாணரினும் விஞ்சிய மொழிமுதறிஞர் இற்றைத் தமிழகத்தில் எவருமில்லை. இவ்வுண்மை இன்று விளங்காது. இக்கூற்றுக்கு மதிப்பளிக்கும் எதிர்காலம் ஒன்று வரத்தான் போகின்றது. அக்காலம் இக்காலத்துப் போலிகளையும், கூலிகளையும். கொண்டான்மார்களையும் அடையாளம் கண்டு கொள்ளத்தான் போகின்றது. இத்தகைய உண்மையான அடிப்படைக் கருத்தாய்வுகளுக்கு இடமளிக்காத கருத்தரங்கால் தமிழுக்கோ தமிழர்களுக்கோ இவ்வுலகுக்கோ எள்ளளவும் பயனில்லை.*

ஆரியப் பார்ப்பனர்கள் வேண்டுமென்றே இவ்வாராய்ச்சிகளுக்கு இடமளிக்காத வகையில் உலகத் தமிழ்க் கருத்தரங்கில், பிற்காலச் சிற்றிலக்கியங்களையும், தற்காலப் பாரதியார் பாடல்களையும் வானளாவப் பாராட்டிப் பேசுவதும், அவற்றையே தமிழென்றும் பண்பாடென்றும் விதந்துரைப்பதும், நாம் அத்தகைய புரட்டுப் புலவர்களுக்கே இடந்தந்து வருவதும் நம்மையும் நம் வரலாற்றையும் இருட்டடித்துக் கொள்ளும் மடமைச் செயல்களாகும் என்பதை எவரும் மறந்துவிட வேண்டா. மற்றப்படி பாரதியார் பாட்டோடும், சிலப்பதிகாரச் சொற்பொழிவோடும் கருத்தரங்கு தொடர்பு கொண்டதன்று. ஒருவருடைய தனிப்பட்ட கற்பனைகளையோ சொற்சிலம்பங்களையோ கொட்டித்தீர்க்கும் மேடையாக அதைக் கருதக்கூடாது. பாராட்டுரை வேறு; ஆய்வுரை வேறு. தமிழர்கள் அனைவரையும் தமிழறிந்தவர்களென்றோ, தமிழறிந்தவர்கள் எல்லாரையும் தமிழாராய்ச்சியாளர்களென்றோ கருதிவிடக்கூடாது. கருத்தரங்கின் முடிவில் அதன் பொதுச் செயலாளர் திரு தனிநாயகம் கூறிய கூற்றுக்கு இதுவே பொருளாக இருக்கமுடியும். எனவே உலகத் தமிழ்க் கருத்தரங்கில் கலந்துகொள்பவர்களைக் கட்சிக் கண்ணோட்டத்திலோ, அரசியல் கண்ணோட்டத்திலோ தம்மைப் பாராட்டிப் பாப்புனைபவரென்றோ, சொல்லும் பொருளும் கூறித் தூக்கித் தலைமேல் வைத்துக் கொள்பவரென்றோ பாராமல், மிகவும் நடுநிலை நோக்குடனும் பெருந்தன்மையோடும் தெரிவு செய்தல் வேண்டும். அந்த நிலை தமிழகத்து அரசியல் தலைவனுக்கு என்று வாய்க்கின்றதோ அன்றுதான் தமிழ் உண்மையாகவே வளரும். அன்றுதான் தமிழ்த்தாய் உண்மையாகவே மகிழ்வாள். அதுவரை, தமிழைப் பொறுத்த அளவில் நமக்குவரும் பாராட்டுரைகளையும், புகழுரைகளையும் பெற்றுக் கொள்வதில் உண்மையாகவே நாம் வெட்கப்பட வேண்டும்.

–பெருஞ்சித்திரன்.

www.thamizham.net - Free E book No 7423

தென்மொழிக்கு நன்கொடை.

(1—5—69 முதல் 30—7—69 முடிய)

தென்மொழி வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

			உருபா.	காசு.
1.	திரு.	அ. சந்தியாகு, தி. அத்திப்பாக்கம்.	1	00
2.	,,	மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	5	00
3.	,,	நா. இளமாறன். பெரும்பகல்லா.	5	00
4.	,,	ஆர். சிவானந்தம், சேலம்-1.	1	00
5.	,,	இரா. பாலகுருமூர்த்தி, செயலர்-தமிழ்ச்சுற்றம், பழைய ஆயக்குடி.	1	00
6.	,,	இரா. தங்கராசன், மாரம்பாடி.	11	00
7.	,,	மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	5	00
8.	,,	திருராமுலு, ஏ. பி. இ. ஆமத்துநகர்.	1	00
9.	,,	தோமசு, ஷை	1	00
10.	,,	சுப்பிரமணியம், ஷை	1	00
11.	,,	முத்துசாமி, ஷை	1	00
12.	,,	உலூார்துசாமி, ஷை	1	00
13.	,,	மாணிக்கம், ஷை	1	00
14.	,,	கங்கையா, ஷை	1	00
15.	,,	மதலைமுத்து, ஷை	1	00
16.	,,	சுப்பராயன், ஷை	2	00
17.	,,	கருப்பையா, ஷை	2	00
18.	,,	த. சின்னத்துரை, ஷை	2	00
19.	,,	இராகவன், ஷை	1	00
20.	,,	ஏழுமலை, ஷை	1	00
21.		காரைக்கால் தென்மொழி அன்பர் ஒருவர்	5	00
22.	Thiru.	CPL. Rex. A, c/o 56 A. P. O.	10	00
23.	,,	Naa. Thennavan, Bangalore-1.	5	00
24.	,,	சி. இராசு, சென்னை-14.	2	00
25.	,,	மூ. கணபதி, கெ. கல்லுப்பட்டி.	1	00

அமைச்சர், தென்மொழி.

www.thamizham.net - Free E book No 7423

தென்மொழி அன்பர் திருமணம்.

தென்மொழி அன்பரும், சேலம் மாநிலத் தொழிலாளர் நல மருந்தகத்தின் உதவி மருத்துவரும் ஆகிய திரு. சி. இராமச்சந்திரன், எம். பி. பி. எசு. அவர்கட்கும், செல்வி: திருமதி. பார்வதி அவர்கட்கும், தி. பி. உ00௧ விடைத்திங்கள் 24-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (7—6—70) காலை முழுத்தம் 6½ முதல் 7½-க்குள், கரூர் தெற்கு மடவளாகத் தெருவில் அமைந்த மணமகள் இல்லத்தில் சிறப்புறத் திருமணம் நிகழ்வுற்றது. திருமண நினைவாக மணமக்கள் தென்மொழிக்கு உரு. 50/- நன்கொடை வழங்கியுள்ளனர். மணமக்கள் நீடு வாழ்க.

அமைச்சர்,
"தென்மொழி"

தமிழர் இல்லங்கள், கல்லூரிகள், கலைக்கூடங்கள் ஆகிய இடங்களில் இருக்கவேண்டிய தனித்தமிழ்த் திங்கள் வெளியீடு.

செந்தமிழ்ச் செல்வி

(ஆசிரியர்: தாமரைத் திரு. வ. சுப்பையா)

50 ஆண்டுகளாக நடைபெற்று வருவது.

நுண்மாண் நுழைபுல மிக்க அறிஞர் பெருமக்களின் இலக்கண இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் சமயம், வரலாறு, மொழி பற்றிய செய்திகளையும், கருத்துக்கினிய பாடல்களையும் தாங்கி, திங்கள் தோறும் வெளிவரும் தீந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டுக் கையொப்பம்: உள்நாடு: ரூ. 6-00. வெளிநாடு: ரூ. 8-00

வாழ்நாள் கையொப்பம்: (உள்நாடு) ரூ. 100—00.

விளக்கங்கட்கு:

ஆசிரியர், "செந்தமிழ்ச்செல்வி"
1/140, பெருவழிச்சாலை (பிராட்வே), சென்னை-1.

www.thamizham.net - Free E book No 7423

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்.

பாட்டு—உ௬.

அங்கா வெனுமங் காந்தமுக மேந்தி,
உங்கா வெனவமிழ் துறிஞ்ச வூட்டிப்,
பால்வாய் மோந்து பனிமுகம் நீந்தி,
மாலுறக் குழைவுடல் அணைந்தகங் குளிர்ந்து,
புன்றலை அளைந்து பொன்னுடற் கழுவி,
தென்றல் சிதர்புகு மிளமயி ரார்த்தி,
கதைபல குழைந்து காகஞ் சுட்டி,
இதழுடை மாட்டி, மணிக்கண் ணெழுதி
உள்ளார்ந் தெழூஉம் உவகை பொலியக்
கள்ளா ரிதழ்கள் கனிய முத்தி,
கொட்டிய பூங்கை வட்டித் தெடுத்து
மொட்டுடல் தாங்கித் தொட்டிற் கிடத்தி,
நீலக் கொழுங்கண் நனையிதழ் பொருந்தக்
கோலச் செழுந்தமிழ்த் தாலம் பயிற்றி
ஆர்தல் அயர அசைதல் சோர்வுற
ஈர்வாய்க் குதலை யிழிதரக் கிறங்கும்
இளமென் பூவுடல் இடையிடை பேணி
அருள்விழி மூடும் அன்னைக்கு
இருள்கழி உலகம் ஈடிறந் தன்றே!

பொழிப்பு:

அங்காவென அரற்றி, அங்காந்த வாயினதாகிய குழவியின் முகத்தை இருகையால் ஏந்தி எடுத்தும், உங்காவெனக் கூறி அமிழ்தத்தை உறிஞ்சிக் குடிக்குமாறு ஊட்டி, அப்பாலுண்ட வாயினைத் தூய்மையால் முகர்ந்தும், குளிர்ச்சி பொருந்திய அம் முகத்தோடு முகம் வைத்து நீந்துதல்போல் அளாவி, மயங்குதலுறுமாறு, சந்தனக் குழைவுபோலும் உடலை அணைந்து, நெஞ்சங் குளிர்தலுற்றும்,

www.thamizham.net - Free E book No 7423

இளந்தலையைக் கோதிப் பொன்போன்ற உடலை நறுநீரால் கழுவியும், தென்றல் சிதர்ந்து புகும் இளமயிரைக் காற்றிலும் இளவெயிலிலும் உலரச் செய்தும், கதைபல குழைந்து கூறிக் காகத்தை விளித்து வேடிக்கை காட்டி, மலரிதழ்ப் போலும் மெல்லிய உடையை உடல் நலுங்காது மாட்டியும், மணிபோலும் ஒளிபொருந்திய கண்களுக்கு மையெழுதியும், உள்ளத்தே எழுந்து பொங்கும் உவகை மிகுமாறு கள்ளூறும் வாயிதழ்களைக் கனியும்படி முத்தமிட்டும், கொட்டி விளையாடிய குழவியின் பூங்கைகளைச் சுழன்று எடுத்து, மலரின் மொட்டுப் போன்ற உடலைத்தாங்கித் தொட்டிலிற் கிடத்தியும், நீல நிறமான கொழுமைசேர் கண்களைப் போர்த்துள்ள இதழ்ப்போலும் நனைந்த இமைகள் பொருந்தும்படி சொல்லழகும் பொருளழகும் வாய்ந்து செழுமையுற்ற தமிழில் தாலாட்டுப் பாடியும், அவ்வாறு பாடிய ஓசை மெல்ல அடங்கவும், தொட்டிலை அசைத்த கைகள் சோர்வுறவும் அழுது அரற்றிய ஈரவாயினின்று குதலை நீர் இருபுறமும் வழியுமாறு உறக்க மயக்கங் கொள்ளுகின்ற குழந்தையின் இளமையும் மென்மையும் பொருந்திய பூப்போன்ற உடலை இடையிடையே காணித்துப் பேணியும் தன் அருள் பொருந்திய விழிகளை ஆழ்ந்து உறக்கங்கொள்ளாது முடிக்கிடக்கும் அக்குழவியின் அன்னைக்கு, போர்த்துண்ட இருளை மெதுவாகக் கழிக்கின்ற இவ்வுலகமும் இணையற்றதே.!

விரிப்பு:

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

புதல்வனைப் பயந்து பாராட்டும் தலைவியின் தாய்மைத்திறம் நோக்கித் தலைவன் அவளின் தாய்மை யுணர்வுக்கு இவ்வுலகமும் ஈடாகாது என வியந்து கூறுவதாக அமைந்ததிப் பாட்டு.

தலைவியிடத்து இதுகாறும் பெண்மை நலத்தையே கண்டும் உண்டும் வந்த தலைவன், இக்கால் தாய்மை நலத்தைக்கண்டு மதித்துப் போற்றுகின்றான். அருள்சான்ற அவளின் தாய்மைச் செவ்விக்கு இவ்வுலகம் ஈடிறந்தது எனப் போற்றும் அவன் கூற்றில், ஒரு தாய் தன் குழந்தையின்பாற் காட்டுகின்ற அன்பும் அருளும் அக்கறையும் புலப்படுவதோடு, தலைவன் தலைவியிடத்தும் தன் குழந்தையிடத்தும் செலுத்தும் ஈடுபாடும் பின்னியிருப்பதைப் பாடல் உணர்த்தும்.

அங்கா: பசிவந்து அழுமிடத்துப் புனிற்றிளங்குழவி மிழற்றும் ஓர் ஒலிக்குறிப்பு மழலைச் சொல்.

www.thamizham.net - Free E book No 7423

அங்காத்தல்: அண்ணுத்தல்-வாயை முற்றும் திறத்தல்.

குழவி தன் பசிக்குறிப்பைத் தாய்க்கு உணர்த்த 'அங்கா' எனும் ஒலி மிழற்றித் தன் வாயை அங்காத்தல் செய்கின்றது. அங்ஙன் வாயை அங்காத்தவாறு அழும் குழவியை-இரு கைகளாலும் ஏந்தி எடுத்து 'உங்கா' என ஆறுதல் மொழிகூறித் தன் மார்பை ஊட்டக் கொடுக்கின்றாள் தாயாகிய தலைவி.

'உங்கா': பாலுக்குத் தாய்கூறும் ஓர் ஒலிக்குறிப்புச் சொல்.

அமிழ்து உறிஞ்ச ஊட்டி: தன் மார்பினின் றூறும் பாலைக் குழவி உறிஞ்சி அருந்துமாறு ஊட்டுதல் செய்து.

பால்வாய்: பாலுண்ட வாய்-இளமென் வாய்

பனிமுகம் நீந்தி: பால்வாயை மோந்த தாய் குழந்தையின் குளிர்ந்த முகத்தில் தன் முகத்தை வைத்து ஒட்டி உரசுதல். நீரில் உடம்பு உரசி அளாவுதல்போல் குழவியின் மென்மையான முகத்தொடு தாய்முகம் அளாவுதலால் முகம் நீந்துதல் என ஒருபுடை உருவகமாகக் கூறப்பெற்றது.

மாலுற: மயக்கமுற.

குழைவுடல்: சந்தனச் சாந்துபோலும் வண்ணமும் மென்மையும் குளிர்ச்சியும் தோய்ந்த உடல்.

அணைந்தகங் குளிர்ந்து: குழந்தையோடு தாய்போய் அதன் உடல் நலுங்காது பொருந்துதலால் அணைத்து என்னாது அணைந்து எனலாயிற்று. அணைந்து அகங்குளிர்ந்தாள் என்றபடி.

புன்றலை அளைந்து: இளமையும் மென்மையும் சான்ற தலையின் முடி நலுங்கலுறாது நீரான் அளைந்து.

பொன்னுடற் கழுவி: பொன்னிறம் போன்ற உடலைக் கழுவி யெடுத்து.

தென்றல் சிதர்புகும் இளமயிர் ஆர்த்தி: தென்றல் சிதர்ந்து புகுமளவில் மென்மை சான்ற தலைமுடியைக் காற்றிலும் இளவெயிலி லும் ஆர்த்தல் செய்து. ஆர்த்தல்-ஒளிபெறச் செய்தல். ஈரமாயிருந்த முடி உலர்ந்தபின் ஒளிபெறுமாறு செய்தல்.

கதைபல குழைந்து காகஞ் சுட்டி: குழவி, கதைகேட்கும் அறிவு பெற்றிலதேனும் தாய்க்கிருக்கும் உணர்த்துதல் உணர்வால்

தானறிந்த கதைகளை அதன்பால் குழைந்துகூறி; குழைந்து கூறுதல் என்பது மழலையிற் சொல்லுதல். சொற்குழைதல் மழலை. காகஞ் சுட்டுதல்–குழந்தைக்கு "அதுகாண் குருவி; இதுகாண் கிளி; உது காண் காகம்" என வேடிக்கைகாட்டி அமைவுறச் செய்யுமொரு விரகு. குழந்தை அமைவுறுங்காலன்றித் தாய் அதற்கு இதழுடை மாட்டலும் மணிக்கண் எழுதலும் போலப் புனைவு செய்தல் இயலாது. ஆகையால் கதை குழைந்து காகஞ் சுட்டினுள் என்க.

இதழுடை மாட்டி: மலரிதழ்ப் போலும் மென்மையான உடையைக் குழந்தையின் உடல் நலுங்காது அணிவித்து. உடுத்தி என்னுது மாட்டி என்றது உடல் நலுக்கமுறாது அணிவித்ததை என்க.

மணிக்கண் எழுதி: மணியைப் போலும் ஒளி பொருந்திய கண்களில் மையெழுதி. பொதுப்படத் தீட்டாது அழகுபட எழுதி என்றது கருதத்தக்கது

உள்ளார்ந் தெழூஉம் உவகை பொலிய: உள்ளத்தினின்று புடையளாவி எழுதரும் மகிழ்வு முகத்திலே மலர்ந்து விளங்கும்படி.

கள்ளாரிதழ்கள் கனிய முத்தி: கள் ஊறுகின்ற இதழ்கள் கன்றிச் சிவக்கும்படி முத்தந் தந்து.

கொட்டிய பூங்கை: கொட்டி விளையாடிய குழந்தையினது கை..

வட்டித் தெடுத்து: நலுங்காமல் எடுத்து வட்டித்தல்–வடித்தல் –வடிவம் செய்தல். வடிவம் செய்த ஒன்றை அது குலையாது எடுத்தல் –களிமண்ணால் ஆக்கிய கலம் ஒன்றினை வடிவம் குலையாமல் கைப் பழக்கமாக எடுத்து வைப்பது போல், பசுங்குழவியையும் நலுக்கமுறாது கைநயமாக எடுத்தாள் என்க.

மொட்டுடல் தாங்கி: தாமரை மொட்டுப் போலும் இளந்தலையும், தண்டுபோல் நிமிர்பற்ற உடலும் இரு கைகளாலும் தாங்கி.

தொட்டிற்கிடத்தி: தொட்டிலில் இடலும், போடலும் இல்லாது கிடத்துதல் என்றது, குழந்தையை மெதுவாகக் கிடக்கும்படி செய்தாள் என்றற்காம். கிடத்துதல்–கிடையாக வைத்தல்.

நீலக் கொழுங்கண்: நீலநிறம் பொருந்திய கொழுமையான கண்கள்.

நனையிதழ்: கண்ணீரால் நனைந்த, மலர் இதழ்ப்போலும் இமை

www.thamizham.net - Free E book No 7423

பொருந்த: பொருந்தும்படி-மூடி உறங்கும்படி.

கோலச் செழுந்தமிழ்த் தாலம் பயிற்றி: உரை அழகும், சொற் செழுமையும் கொண்ட தமிழ் மொழியில் தாலாட்டுக்கூறி. தாலம்-தாலப்பாட்டு-தாலாட்டு. பயிற்றுதல்- பயில்வித்தல். தாலாட்டு வழித் தாய்மொழிப் பயிற்சியையும் உறக்கவின்பத்தையும் ஊட்டுதலால் பயிற்றுதல் எனலாயிற்று.

ஆர்தல் அயர: பாடல்ஒலி அயரும்படி.

அசைதல் சோர்வுற: குழந்தையை ஆட்டுவிக்கும் அசைவு சோர்வுறும்படி.-அசைவு சோர்வுறுதல்-அசைகின்ற கை சோர்வுறுதல்.

ஈர்வாய்: ஈரமுடைய வாய்.

குதலை இழிதர: குழந்தையின் வாயினின்று 'குதலை' என்னும் ஒருவகை நீர் இழிய.

கிறங்கும்: உறக்க மயக்கத்திலாழும்.

இளமென் பூவுடல் இடையிடை பேணி: இளமையும் மென்மையும் வாய்ந்த பூப்போன்ற குழவியின் மெல்லுடலைத் தாய் தன் உறக்கத்திலும் இடையிடையே விழித்துப் பேணி,

குழவியின் மேற் போர்த்திய துணி உறக்கத்தின் இடையிடை விலகுவதைச் சரிசெய்வதும், உடலுறுப்புகள் அழுந்துமாறு உறங்கும் குழந்தையை அடிக்கடி புரட்டிச் சரிவரப் படுக்கவைப்பதும், வாயைத் திறந்துகொண்டோ, விரலைச்சப்பிக் கொண்டோ உறங்குமாறுல் அதன் முகத்தை உயரப்படுத்தியோ, வாயிலுள்ள விரலை அப்புறப்படுத்தியோ விடுவதும், கழிவுகளால் ஈரப்படும் படுக்கைத் துணிகளை அடிக்கடி மாற்றுவதும் பிறவும் குழந்தையைத் தாய் இரவில் பேணும் வகைகளாகும். இவ்வாறு பேணுகின்ற உணர்வு ஒரு தாய்க்கு இயல்பாகவே அமையுமெனினும், இயல்பு திரிந்த இக்காலத்துக் குழந்தை தொட்டிலினின்று விழுந்து, அழுது கிடந்தாலும், தன்னுறக்கத்தினின்று விழியாத தாயரும் உளர். அன்னவர் போலன்றித் தன் தலைவி "இளமென் பூவுடல் இடையிடை பேணும்" பெற்றியளாயிருத்தல் தலைவற்கு வியப்பினை யூட்டிற்றென்க. இவ்வாறு இரவில் தான் தொடர்ந்து உறங்காது இடையிடையெழுந்து தன் குழந்தையைப் பேணும் பெற்றி வாய்ந்தாள் அருளுடையளாதல் வேண்

டும் என்பது பற்றி அருள்விழி மூடும் அன்னை என்றான் என்க. விழிகள் மூடுவதல்லது உறங்குதல் செய்யா என்னும் குறிப்பினை அறிக.

இத்தகையளாகிய அன்னைக்கு, இருள்கழியும் தன்மை வாய்ந்த இவ்வுலகம் ஈடிறந்தது என்பது தலைவன் கூற்றாகும்.

ஈடிறந்தன்று: இணையற்றது.

குழவியின் பசியறிந்து பாலூட்டியும், உடல் நலுங்காது குளிப்பித்தும், புனைவித்தும், உறங்குவித்தும், பகலிற் பேணியவள் இரவிலும் தான் முழுமை உறக்கம் கொள்ளாது இடை இடை எழுந்து அதனைப் பேணும் அருள் வாய்ந்த தன்மைக்கு, இவ்வுலகமும் ஈடாகாது என, அண்மையில் தாய்மைப் பேறுற்ற தன் தலைவியைப் பார்த்துத் தலைவன் கூறியதாகும் இப்பாடல்.

இது, முல்லை யென் திணையும், புதல்வற் பயந்த தலைவியின் தாய்மைத்திறம் வியந்தென் துறையுமாகும்.

மொழிப்பேரறிஞர். தேவநேயப் பாவாணரின்

திருக்குறள் தமிழ் மரபுரை

விலை உரு. 15-00

கிடைக்குமிடம்- திரு. தே. மணி,
ஆ-1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

பாவலர். பெருஞ்சித்திரனாரின்
அரிய தமிழ் நூல்கள்

			உரு. காசு.
1.	பாவியக்கொத்து	விலை	2 — 50
2.	எண்சுவை எண்பது	,,	1 — 50
3.	புரட்சிப்பாவலர் பாரதிதாசன்	,,	0 — 50

அஞ்சற் செலவு தனி.

கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

www.thamizham.net - Free E book No 7423

தற்காலக் கல்வி நிலை.

-புலவர். ந. இராமநாதன், கீ. க. தே. (B. O. L.)
தலைவர், பாவேந்தர் பைந்தமிழ்க் கல்லூரி, சேலம்-1.

தமிழகத்தின் கல்வித்துறை பன்னெடுங்காலமாகவே சீரழிந்து கிடக்கின்றது. அதன் பயனை அறுவடை செய்யும் காலத்தில் இப்போது நாமுள்ளோம். மேலெழுந்த வாரியாக நோக்குவோருக்கு உண்மை தெரியாது. மாணவர்கள் ஆண்டுதோறும் தொடக்கக்கல்வி இடைநிலைக்கல்வி, உயர்கல்வி போன்ற நிலைகளில் பெருமளவிற்கு ஈடுபடுகின்றார்கள். ஆண்டுதோறும் கல்வித்துறைக்கென அரசியலார் செலவிடும் தொகையும் பெருகிக் கொண்டுள்ளது. கல்வித்துறைக்கென அமைக்கப்படும் கட்டிடங்களும் பல நூறாயிரக் கணக்கில் செலவிடப்பட்டு அமைக்கப்படுகின்றன. எல்லாம் நிகழ்ந்தும் விளையும் பயன் என்ன? துறைதோறும் அறிவுப் பஞ்சம் தலைவிரித்தாடுவதையே காண்கின்றோம். ஆண்டுதோறும் அறிவு பெற்றுவிட்டோமென்று பல்கலைக்கழகங்களின் சான்றிதழைப் பெறுவோர் தொகை மிகுதி. அவர்கள் பெற்ற சான்றிதழோடு ஒத்த அறிவடைந்தார்களா என்றால் இல்லையென்றுதான் கூறவேண்டும். "விலைபோட்டு வாங்கவா முடியும்–கல்வி வேளைதோறும் கற்று வருவதால் படியும்." இது பழைய பேச்சு. வாணிகத்துறை போன்று கல்விப் பொருளை விலை போட்டு வாங்குவாரும் விற்பாரும் பல்கியுள்ள காலம் இக்காலம். மக்கள் வாழ்வில் அக்கறையுடையோரும் அரசியலாரும் எண்ணிப் பார்க்கவேண்டிய காலம். என்னுடைய பிள்ளைகள் பல துறைகளில் படிக்கின்றார்களென்று பெற்றோரும், கல்வித்துறைக்கென இவ்வளவு செலவிடுகின்றோமென்று அரசியலாரும் பெருமையடித்துக் கொள்ளும் காலம் மலையேறிவிட்டது. அறிவுப் பயிர் வளரவேண்டிய இடங்களில் அறியாமைக் களைகள் துறைதோறும் மண்டிப் பெருகும் காட்சியை நடைமுறையிற் காணுகின்றோம். நம்மில் பலருக்கு நடைமுறைக் கண்ணோட்டமில்லை. பாவிய ஓவிய ஆசிரியர்கள் போன்ற கற்பனையாளர்களாகவே யுள்ளோம். சீருடை பூண்டு மாணவர்களும் ஆசிரியர்களும் அணி அணியாகச் செல்லுகின்றனர். இது கண்கட்கு விருந்தாகவேயுள்ளது. கருத்துக்கும் விருந்தாக அமைய வேண்டுமே! உடைச் சிறப்பிலும் கட்டிடச் சிறப்பிலும் கல்விப் பயனில்லை. கல்விப் பயனென்பது மாணவர் துறைதோறும் அடையும் அறிவுப் பயனைப் பொறுத்தே இருக்கின்றது. கல்வி வாயிலாக அறிவைப்பெற ஆசிரியர் மாணவர் ஆய இருசாராரின் ஒருமித்த உள்ள உணர்ச்சியோடு

www.thamizham.net - Free E book No 7423

கூடிய உழைப்புத் தேவை. அத்தகைய உழைப்புக்கு இருசாராரும் இப்போது அணியமாக இல்லை. பயிற்றுவிக்கப் போவார் போன்று செல்லும் ஆசிரியரும் பயிலப்போவார் போன்று செல்லும் மாணவரும் பலராகவுள்ளனர். இவ்விரு சாராரும் செய்யும் கூட்டுத் தவறால் கல்வித்துறை எப்பயனையும் தாராத களர்நிலத்தைப் போன்று காட்சியளிக்கின்றது. கல்வித்துறையில் இப்போக்கு பெரிய குறையாகும்.

நம் நாட்டில் ஆசிரியர் தொழில் கவர்ச்சியுடையதாக இல்லை. வருவாய் வழியிலும் பதவி உயர்வு நிலையிலும் விரைந்த முன்னேற்றம் எதுவும் இல்லை. படிப்பின் திறமை, மாணவர்க்குச் சொல்லிக் கொடுக்கும் திறமை இரண்டையும்கூட இத்துறையில் யாரும் சட்டை செய்வதில்லை. ஆசிரியராகச் சேரும்போது இவற்றைத் தகுதியாகச் சிறிது எண்ணுகின்றனர். உள்ளே சேர்ந்த பிறகு இவற்றை எண்ணிப் பார்த்துத் தக்க வருவாயும் பதவி உயர்வும் கிடைக்க வழி செய்யும் திட்டம் எதுவும் கல்வித்துறையில் இல்லை. 'வந்தோம்; போனோம்' என்று வருகைப் பதிவில் நோக்கமும்; மாதம் முடிந்ததும் ஊதியம் பெறுவதில் அக்கறையும் கொண்டு வாழ்வோரும், எடுத்துக்கொண்ட துறையை நன்கு கற்று, மேலும் மேலும் இத்துறையைப் பற்றிய அறிவினை நாளும் தேடிக்கொண்டு, மாணவர்க்குப் பயன்பட வாழும் ஆசிரியரும் ஒரே நிலையில் எப்போதுமே தொடர்ந்து உள்ளனர். இக் கொடுமையான சூழ்நிலை நல்லாசிரியரையும் மன வூக்கம் குன்றச் செய்கின்றது. அவர்களும் காலப்போக்கில் செக்குமாடுகள் போல உணர்ச்சியோ எழுச்சியோ இன்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கின்றனர். தம்முடன் பயின்றவர்கள் தமக்குத் தெரிந்தவர்கள் பிற பிற துறைகளில் திடுமென அடையும் முன்னேற்றம் எத்தகைய ஈக வுணர்வுடைய ஆசிரியரையும் மனம் குழம்பச் செய்கின்றது. ஆசிரியத் துறையிலும் விரைந்த முன்னேற்றம் வேண்டும். இதற்கெனப் பெரிய அதிகாரிகளைக் கொண்ட குழுவை வைத்துக் கணிக்கவேண்டுவதில்லை. இதற்கு நான் சொல்லுகின்ற முறை புதுமையாகவும் வியப்பாகவும் கூடத்தோன்றலாம். ஆனால் என்னுடைய இருபதாண்டுக் கல்வித்துறைத் துய்ப்புணர்வால் இதனைக் கூறுகின்றேன். நல்லாசிரியர்களைக் கணிப்பதில் மாணவர்கள் ஒப்பற்றவர்கள் என்று கூறுவேன். அவர்கள் படித்தாலும் படிக்காவிட்டாலும் நல்ல ஆசிரியர்களைக் கண்டுபிடிக்கும் திறன் மாணவர்கட்கு எளிமையாக இயல்பாக அமைந்திருக்கின்றது. நல்ல மாணவரை ஆசிரியர் தேர்ந்தெடுப்பதில் தவறு நேரலாம். ஆனால் மாணவர் கணிப்பு ஒருபோதும் தவறாது.

www.thamizham.net - Free E book No 7423

ஆசிரியர் வளர்ந்தவர், பெரியவர், உலகப்பற்று விருப்பங்கட்கு ஆட்பட்டவர். மாணவர் பருவம் அத்தகையன்று. அவர்கள் முடிபு படடாங்கு அமைவது. இந்த வகையில் நல்லாசிரியரைத் தேர்ந்து நல்ல ஊதியமும், பதவி உயர்வும் அளித்துப் போற்றினால் கல்வித்துறையில் பெரிய மாற்றத்தைக் காணலாம். இன்று கல்வித்துறையில் காணப்படும் குறை, பெரிதும் ஆசிரியர் உலகைப் பற்றியதென்று கூறலாம். மாணவர் அறிவுப்பசிக்கு ஏற்ப அவர்கட்கு அறிவு உணவு வழங்கும் திறமை யற்றவர்களே இன்று துறைதோறும் மிகுந்துள்ளனர்.

நாமறிந்து கொள்ளுவதற்குள்ள திறமை வேறு—அறிந்த தொன்றைச் சொல்லிக் கொடுப்பதற்குள்ள திறமை வேறு. ஆசிரியத் துறையில் இரண்டும் ஒன்றாகவே கருதப்படுகின்றது. சொல்லிக் கொடுக்கும் திறம் இயற்கையாக இல்லாதவர்களை ஆராய்ச்சித் துறையில் பயன்படுத்தலாம். சொல்லிக் கொடுக்கும் திறமுடையவர் ஆய்வுத்துறையிலும், அத்திறமையில்லாத ஆய்வுணர்வுடையவர் சொல்லிக் கொடுப்பதிலும் ஈடுபட்டு அறிவுபெறத் தடைகளாக வுள்ளனர். இத்தகைய இயல்புகளை யெல்லாம் ஆசிரியர் தொழிற்படும் திறமையைத் தொடர்ந்து கண்காணித்து வருவதால் தெரியும். உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுத்து அவர்கள் பயன்படும் முறையை மேற்கொள்ளச் செய்தல் வேண்டும்.

தற்போது கல்வி நிலையங்களில் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர் கட்கமைந்த புலமை போதியதாக இல்லை யென்பது என்னுடைய கருத்து. பள்ளியிறுதி வகுப்புவரையிலும் (S. S. L. C.) எல்லாப் பாடங்களைப் பற்றிய பொது அறிவை ஏற்படுத்தும் வகையில் அமைத்துக் கொள்ளலாம். இன்றுள்ளமுறை அப்படியே இருக்கலாம். கல்லூரிக்குச் சென்று உயர்படிப்புப் படிக்கும்போது எந்தத் துறையை விரும்பி மாணவன் எடுத்துக் கொள்ளுகின்றானோ அத்துறை பற்றிய பாடங்களையே கலை இளைஞர் (B. A.) வகுப்பு வரையிலும் நான்காண்டுகள் தொடர்ந்து பயிலச் செய்யலாம். இன்னும் ஆழமாக முதுகலைஞர் (M. A.) வகுப்பு வரையிலும் ஆறு ஆண்டுகள் தொடர்ந்து ஒரு துறையையே பயிலச்செய்யலாம். இவ்வாறு பயின்று வரும் ஆசிரியர்கள் அந்தந்தத் துறையை ஓரளவு சிறப்பாக அறிந்து கற்பிக்க முடியுமென்று கருதுகின்றேன். இதற்கு மாறாகப் புகுமுகத் (P. U. C.)தில் பலதுறைப் பாடங்கள்; இளங்கலை (B. A.) யிலும்

www.thamizham.net - Free E book No 7423

அப்படியே. இப்படிப் படித்துவிட்டு இவர்கள் படித்த துறைகளில் ஏதாவதொன்றை அல்லது சிறப்பாக எடுத்த ஒன்றைக் கற்பிக்க வருகின்றனர். பலவற்றைப் படிப்பதால் கற்பிக்கும் அளவிற்கு அத்துறைப் புலமைபோதாது என்று பொதுவாக எண்ணிப்பார்த்தால் கூடத் தெரியும். இளங்கலை (B. A.) வரையில் எதையெதையோ படித்துவிட்டுத் திடுமென முதுகலை (M. A.)யில் தமிழை எடுத்துக் கொண்டு M. A. பயின்று தமிழைக் கல்லூரிகளில் கற்பிக்கப் புறப்பட்டு விடுகின்றனர். இவர்கள் பயிற்சி எவ்வளவு? இவர்களால் கல்லூரி அளவில் வளர்ந்துள்ள அறிவைப் பெற்றவர்கட்கு எவ்வாறு சொல்லிக்கொடுக்க இயலும்? இளங்கலை வரையில் பல பாடங்களைப் படித்துவிட்டு உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலப்பாடம் நடத்தும் ஆசிரியருக்கு ஆங்கில மொழிப்புலமை சொல்லிக்கொடுக்கும் அளவிற்கு இருக்காது என்பது வெள்ளிடைமலை. இவர்களிடம் பயின்ற மாணவர்கள் ஆங்கிலத்தை எவ்வாறு நன்கு கற்றுக்கொள்ள இயலும்? நான் B. O. L. படித்தபோது Minor என்ற ஒரு பகுதியை வைத்திருந்தனர் (History of Science and Biology). இதனால் எனக்கு என்ன பயன் என்று இன்னும் விளங்கவில்லை. இதனைப்பற்றிய செய்திகளில் பலவற்றை நெட்டுருச் செய்து அப்படியே எழுதிவிட்டு வந்தேன். எல்லோருக்கும் செய்யாவிட்டாலும் சொல்லிக் கொடுக்க வருகின்றவர் கட்காவது சொல்லிக்கொடுக்கும் துறைபற்றிய நீண்ட காலப் பயிற்சியைக் கொடுக்க வேண்டும்.

கல்வித்துறையில் மொழிச்சுமை ஒருபக்கம் அறிவடையத் தடையாக இருக்கின்றது. கல்விக்கூடங்கள் பொருளுணர்ந்து உண்மையில் ஈடுபட்டுத் திளைக்கும் அறிவுக்கூடங்களாக இல்லை. பொருள் புரியாமல் திகைக்க வைக்கும் பலமொழிக் கூச்சல் கேட்கும் இடமாக இன்னும் விளங்குகின்றது. மொழித்துறையைப் பயில்கின்றவர் தாம் பயிலுகின்ற மொழியில் பேசி அதன் தூய்மையைப் பேணி அதன் வாயிலாகக் கருத்துகளை உணர்ந்து வாழ்விற் கடைப்பிடிக்கும் கடப்பாடுடையர்.

அறிவியலையும் தொழிலியலையும் பயில்வோர் மொழியை முன்னிறுத்திச் சிக்கலை விளைத்துக்கொள்ளத் தேவையில்லை இவைபோன்ற பிரிவுகளில் English medium அல்லது Tamil medium என்ற பிரிவோ எண்ணமோ வேண்டியதில்லை. உலகில் மாந்தன் கண்டும் கேட்டும் உற்றும் உணர்ந்தும் துய்க்கும் பல்வேறு வகையான

www.thamizham.net - Free E book No 7423

பொருள்கள் பற்றிய நுட்பக் கூறுகளுடன் தோய்ந்த தெளிந்த அறிவு அறிவியல் பயில்வோருக்கு வேண்டும். தொழிலியல் பயில்வோருக்குப் பல்வேறு வகையான தொழில்கள் பற்றிய இயலறிவும் அறிந்தவண்ணம் செய்யும் திறமும் வேண்டும். எல்லாக் கல்வியின் அடிப்படையும் அறிதலிலும் செய்தலிலும்தான் அமைந்திருக்கின்றது. அறிவியலில் பொருட் கூறுபாடுகளை நன்கு புரிந்து கொள்ளுவது தான் இன்றியமையாதது. இவற்றை அடைய எம்மொழியை எவ்வாறு கையாண்டால் முடியும் என்பதுதான் வினு. தாய்மொழி இத்துறையில் பெரிய அளவில் பயன்படும் என்பதை மறுக்க முடியாது. இதனுல் பிறமொழி பயன்படாது என்பதும் இல்லை. இங்குள்ள சிக்கல் எல்லாம் தாய்மொழியால்தான் என்பதிலும் பிறமொழியால்தான் என்பதிலுமே இருக்கின்றன. இயன்ற அளவு தாய்மொழியைப் பயன்படுத்தி இயலாதபோது பிறமொழியைப் பயன்படுத்துவதில் குற்றம் இல்லை. நீர்வேட்கையுடைய ஒருவனுக்குத் தண்ணீர் என்ற பொருள் தான் உடனடியாகத் தேவை அதனைக் குறிக்கும் Water ஜலம்- பானி என்று பலமொழிச் சொற்களை அடுக்கினுல் வேட்கை தீருமா? அதுபோல அறிவியல் தொழிலியல் போன்ற துறைகளில் பொருள்கள் தொடர்பான அறிவும் செய்திறமுந்தான் உடனடித் தேவை. இத் துறையில் எந்தத் தனிமொழியின் துணையுடனும் நின்றுவிடவேண்டு மென்பதில்லை. உலகம் தழுவிய குறியீட்டுச் சொற்களுடன் கூடிய கலப்பு மொழியாகக்கூட இருக்கலாம்.

ஆங்கிலத்தின்மீது என்றுமில்லா ஒரு புது வேட்கை நாட்டில் பரவலாக எல்லாரிடத்திலும் இப்போது இருக்கின்றது. அந்த அளவிற்கு அதனைப் பயிற்றுவிக்கும் ஆசிரியரும் இல்லை. பயிலும் மாணவரும் இல்லை. இதனை நடுவுநிலைமையோடு கூடிய நடைமுறைக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும். ஆங்கில மொழியின் உரை நடை செய்யுள் இலக்கியங்களோடு ஒத்தும் உறழ்ந்தும் செல்லும் அளவில் கருத்து வளமுள்ளதாக வளர்ந்துள்ளது. ஆங்கில விரிவுரையாளர்களில் பலருக்கு ஆங்கிலேயர் எழுதிய நல்ல தரமான உரை நடை நூலை விளக்கிச் சொல்லத் தெரியாது. ஏழு எட்டு ஆண்டுகட்கு முன்னர் யான் வகுப்பில் சேர்ந்து பயின்றபோது இவ்வுண்மையை நன்கு தெரிந்து கொண்டேன். ஆங்கில மொழித்துறையின் முடிந்த முடிபான M. A. பட்டம் வழங்கும் துறையிலுள்ள விரிவுரையாளர் நிலை இதுவானுல் மற்றவர்களை இத்துறையில் எவ்வாறு நம்புவது?

www.thamizham.net - Free E book No 7423

இவர்கள் ஆங்கிலமொழிப் பாடத்தை ஒரு பிரிவில் மட்டும் (I part or II part) பயின்று வெளிவந்தவர்கள். இவர்கள் ஆங்கிலத்தைச் சொல்லிக்கொடுக்க மாணவர்கள் ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசுவார்கள் எழுதுவார்கள் என்று நம்புவோமானால் கானல்நீரைத் தண்ணீரென எண்ணி அதனைக் குடிக்க முயல்வதையே ஒக்கும். எல்லா மாணவர்களும் ஆசிரியர்களும் பெருமளவில் முயன்று படிப்பதால் விளையும் பயன் சிறிதும் இல்லை. இதனைப் பயன்படுத்தும் வாய்ப்பு நம்மில் பலருக்கு இல்லை. யாரோ சிலருக்கு அது தேவையாக இருக்கலாம். அதற்காகப் பலர் பலகாலம் தொல்லையுற வேண்டுமா? தமிழர்களாக வுள்ளவர்கள் அயல் மாநிலத்தில் சென்று அலுவல் பார்ப்பது எதிர்காலத்தில் எந்த அளவிற்கு இயலும்? இதனை நன்கு எண்ணியே பார்க்கவேண்டும். ஆங்கிலம் படித்தாலும் இந்தி படித்தாலும் அயல் மாநிலங்களில் பரவலாக இன்றுள்ளதுபோல அலுவல் பார்க்க இயலாது. உலகம் தழுவிய சில துறைகளைப் பயில்வோர் நல்ல முறையில் பலமொழி பயிலட்டும். எல்லாரும் பலமொழிக் கூச்சலில் மயங்கிக் கல்வியால் பெறவேண்டிய அறிவினை இழந்து அல்லலுற வேண்டியதில்லை யென்பதே நம் கருத்து. ○

மற்றொரு மகிழ்ச்சிச் செய்தி

பண்டாரகர் பட்டம் பெற்ற பெருந்தமிழ்ப் புலவருள் பிறவியிலேயே தமிழ்ப்பற்றுத் ததும்பப்பெற்ற மூவருள் ஒருவரும், காரைக்குடி அழகப்பனார் கலைக்கல்லூரி முதல்வரும் ஆகிய, பேரா. வ. சுப. மாணிக்கனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக அமர்த்தப் பெற்றமை, இதுவரை அங்கு தமிழுக்கு நிகழ்ந்த தீங்குகட்கெல்லாம் கழுவாய் என்றும், தமிழுக்கு நற்காலம் வருதற்கு முற்குறி என்றும், அறிந்து மட்டிலா மகிழ்ச்சி கொள்கின்றோம்.

அப்பல்கலைக் கழக நிறுவனர் போன்று இளமையில் அண்ணாமலை யென்று பெயர் வழங்கப்பெற்று, இன்று தில்லைக் கூத்தன் போல் மாணிக்கம் என்று பெயர் பூண்டுள்ள, இவர்தம் கல்விப் பரப்பும், பட்டச்சிறப்பும், பேராசிரிய ஊழியமும், முதற்றரக் கல்லூரி முதல்வர் பதவிப் பட்டறிவும், பணித் திறமையும், ஆள்வினை யாற்றலும், தமிழ்த்தொண்டும், ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மையும் நோக்கின், நாளடைவில் அப்பல்கலைக் கழகத் துணைக்கண்காணகராகக் கிளர்வதற்கே இறைவனால் அமர்த்தப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

தமிழ்ப் பகைவரால் தடைப்பட்டுள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல். அகர முதலியைத் தக்காரைக் கொண்டு தொகுப்பித்தும், பல்கலைக் கழக முன்னை வகுப்பையும் (P. U C.) கலையிளைஞன் பட்ட வகுப்பையும் (B A) ஆங்கிலர் காலத்திற் போன்றே ஈராட்டைக் கடவைகளாக மாற்றியும், தமிழ்நாட்டு ஏனையிரு பல்கலைக்கழகங்களும் பின்பற்றும் வகையில் சீர் திருத்தத் திட்டங்களை வகுத்து வழி காட்டுமாறு, எல்லாம் வல்ல இறைவன் இவர்க்கு நீடிய வாழ்வும் கூடிய நலமும் அருள்வானாக.

— ஞா. தேவநேயன்.

www.thamizham.net - Free E book No 7423

தமிழ்ப்பொழில்

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு.

ஆசிரியர்:

திரு. செ. தனக்கோடி, பி. ஏ.

கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாகத் தமிழிலக்கியத் துறையில் சீரிய பணியாற்றித் தமிழகத்தை உயர்த்திவரும் நற்றமிழ்த் தாளிகை. மொழியியல், இலக்கியம், சமயம், வரலாறு, கல்வெட்டு, மற்றும்பல பயன்மிகு பொருள்பற்றிய அரிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகிறது.

தமிழன்பர்கள் உடனே உறுப்பினராகி உறுபயன் பெறுக.

	உள்நாடு	வெளிநாடு.
ஆண்டுக்கட்டணம்	உரு. 5-00	6-00

தொடர்புகொள்க:— ஆசிரியர், "தமிழ்ப்பொழில்"
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-2.

மருத்துவத் துறையில் அரிய முயற்சி!

"முதல் சித்தன்"

(உடல் நலத் திங்கள் ஏடு)

பதிப்பாசிரியர்:

திரு பண்டித. முத்துக்கருப்பப் பிள்ளை.

கடந்த நான்காண்டுகளாகத் தமிழ் மருத்துவச் சிறப்பினை அனைவர்க்கும் உணர்த்தும் வகையில் பெரும்பணி புரிந்து வருகிறது. மருத்துவம், கணியம், சமயம், குமுகாயம், அறிவியல் பற்றிய பல அரிய கட்டுரைகளையும் அரசினரால் அவ்வப்போது வெளியிடப்பெறும் மருத்துவச் சார்பான சட்டதிட்டங்களையும் தாங்கி வெளிவரும் உயரிய தமிழ்த் தாளிகையாகும்.

நல்வாழ்வை விரும்பும் அனைவரும் வாங்கிப் பயன்பெறத்தக்க சிறந்த கருவூலம். உடனே உறுப்பினர் ஆகுங்கள்.

தனிப்படி 50 காசு. ஆண்டுக்கட்டணம் உரு. 5-00

தொடர்புகொள்க:— ஆசிரியர், "முதல் சித்தன்"
36, காசிமார் தெரு,
மதுரை-1. (தெ. இ.)

(விளம்பரப் பக்கம்.)

www.thamizham.net - Free E book No 7423

தமிழ் மேன்மையுற......!

[6—2—'70-இல் மதுரைத் தியாகராசர் பொறியியற் கல்லூரி முத்தமிழ் விழாப் பாட்டரங்கத் தலைமையுரை]

பெருஞ்சித்திரன்.

முன்னுரை:

தாய்மொழிமேல் பற்றும் தமிழ்நிலத்தின் மேல்பற்றும்
வாய்மொழியாய் மட்டுமன்றி வல்ல வினைவழியும்
காட்டிவரும் மாணவரீர்! கல்வி வளர்குலத்தீர்!
ஊட்டிவரும் தாய்ப்பால் உணர்வால் உயர்ந்துவரும்
நல்லிளைஞர் கூட்டமே! நாளைத் தமிழுலகே!
அற்றைப் பிறப்பை, அனைத்துக்கும் தாயான
ஒற்றைத் தமிழை, உலகத் தனிமுதலை
இற்றைக்கும் நாளைக்கும் ஏந்துகின்ற தோள்களே!

"விற்றுண்ணாற் கன்று; விளைத்துண்ணற் கேதமிழைப்
பேணுவோம்; யாமும் பிழைத்திருப்போம்; வல்லுறுதி
பூணுவோம்" என்றடிமைப் பூட்டறுக்கும் காளையரே!

"ஒட்டாத 'சாதி'ப் பிரிவை உடைத்தெறிவோம்!
வெட்டாத நம்பகையை வெட்டிச் சிதைத்திடுவோம்!
பாவேந்தர் நற்கனவை, பாவாணர் எண்ணத்தைச்
சாவேந்தி னாலும் சழக்கர் தடுத்தாலும்
மெய்ப்பித்துக் காட்டுவோம்; மேலும் விளைவிப்போம்!
பொய்ப்பித்துக் கொண்டன்று; புகழ்ப்பித்துக் கொண்டுரைப்
என்று முழக்கி எழுந்த களிறுகளே! [போம்'

நின்று நிமிர்ந்தநடை நீட்டும் வரிப்புலிகாள்!
கண்கள் அனலுமிழக் காட்டுகின்ற வல்லரிகாள்!
"புண்களல்ல; வெற்றிப் புகழ்குறிக்கும் பூண்களிவை;
செங்குருதி யன்று; செருக்களத்துச் சேறு" என்று
வல்லமறம் கூறியொரு வாகைப்பண் பாடுகின்ற
கொல்லேற்றுக் கூட்டமே! குன்றன்ன தோள்மறவீர்!

அன்றிருந்த முத்தமிழ்க்கே ஆன விழாவெடுத்தீர்;
நின்றிருந்த தீமைகொல்ல நேரம் பிறந்ததுவோ?
ஏற்றிருந்த பேரிழிவை எற்றும் பொழுதிதுவோ?
வீற்றிருந்த நீள்பகையை வெட்டுகின்ற காலமிதோ?

www.thamizham.net - Free E book No 7423

பாசி பிடித்த பழங்குப்பை கூளங்கள்
மாசு விளைவிக்கும் 'சாத்' மதப்புனைகள்
பொல்லாப் புராணங்கள், பூழ்க்கை இழிகதைகள்
எல்லாமும் தீயிட் டெரிக்கின்ற நாளிதுவோ?

முந்தைப் பிரமன் முகத்தொருவன், தோளொருவன்,
அந்தப் பிரமன் அடித்தொடையி னின்றொருவன்,
பீக்காலி னின்றொருவ னுக்கப் பிறப்பெடுத்தார்!
–கேட்க அருவருப்பு! கேளுங்கள் மாணவரே!
மூக்கில் முகத்தில் முளைத்தொருவன் தோன்றுவனேல்
மூக்கா கருவாய்? முகமா கருப்பை?
மயிர்முளைக்கும் மாந்த முகத்திலென்றால் உண்மை;
உயிர்முளைக்கும் என்றால் உலகத்தார் ஒப்புவரா?
தோளில், தொடையில், காலிலெல்லாம் தோற்றமென்றால்
மூளையில்லா மக்களாநாம்? முக்காலும் நம்பிவிட!
அங்கெல்லாம் தோன்றியதும் ஓரிருவர் அல்லராம்!
உங்கள் பகுத்தறிவை ஓட்டிவிட்டுக் கேளுங்கள்!
ஓரினமே தோன்றிற்றாம்! என்ன,உயிர் நூலறிவு!
ஓரிடமே வாயாய் இருந்துபிறக் கும்பொழுதே,
காற்றாய்ப் பறந்து கருக்குழியை மூடென்போம்!
ஊற்றுப் பெருக்காய் உடம்பெல்லாம் தோற்றமென்றால்
நாமென்ன செய்வோம்? நடுவணரசென்செய்யும்?
ஆமென்றால் சொல்லுங்கள்; அப்படியே விட்டிடுவோம்!

இன்னொன்றே செய்தி; எதுவென்று கேளுங்கள்.
அன்ன முகந்தோள் அடித்தொடை காலிலெல்லாம்
பெற்றுப் பிறப்பிப்ப தாரென்று பார்த்தீரா?
அற்றைப் பிரமன்தான்; ஆணாய்ப் பிறந்தவன்தான்!
தேவப் பிறவியிலே ஆண்,இத் திறம்படைத்தால்
தேவியரும் தாம்முனைந்தால்...! தீர்ந்த துலகெல்லாம்!
செவ்வாய் உலகம், நிலாவுலகம் எல்லாமும்
ஒவ்வுமிவ் வேலையாம் ஒன்றால் நிரம்பிவிடும்!

தார்வினது கொள்கையெல்லாம் ஓபாரின் கொள்கையெலாம்
யார்நினைத்துப் பார்த்தார்கள்? யார்விரும்பி யேற்றார்கள்?
ஒப்புமா இந்த உலகமென்பீர்? ஒப்பியதே.
இப்பொழுது மா?–என்பீர். ஆமென்பேன்! என்னசொல்வீர்
ஓரிரண்டு பொய்யையன்று; ஓரா யிரம்பொய்யை!
ஓரிரண்டு நாளன்று; நான்கா யிரமாண்டு!

www.thamizham.net - Free E book No 7423

நம்தந்தை, பாட்டன், அவன்தந்தை தந்தையெல்லாம்
தம்தந்தை சொன்னதென்று தாம்நம்பி வந்தார்கள்!
ஏனென்று யார்கேட்டார்? எப்படியென் றார்எதிர்த்தார்?
நானென்று வந்தவரை நாலினத்தா ரும்கடிந்தார்!

எந்தமிழர் மூளை இருளில் புதைந்தகதை,
வந்தார் அவர்தம்மை வாழாமல் செய்தகதை,
செந்தமிழை விற்றகதை, செத்தொழிந்து போனகதை,
எந்தமிழர் அந்நாள் இடுப்பொடிக்கப் பட்டகதை,
—என்ற கதையெல்லாம் என்றைக் கொழியுமோ
அன்றன்றோ முத்தமிழ்க்கே ஆன்ற விழாநாளாம்!
அந்தநாள் வந்ததுவோ? ஆர்த்தனரா எந்தமிழர்?
இந்தநாள் தானதுவோ? ஏற்றதிரு நாளிதுவோ?
மாணவரோ? அற்றை மறக்குலமோ! இல்லையிவர்
வீணவரோ? இன்னும் விழிபுலராப் பேதையரோ?
—என்று பலவாறாய் எண்ணியுளம் மாழ்குகின்றேன்.
"அன்றன்று, நாங்கள் அடிமைத் தமிழரல்லர்!
வேல்மறவர் கூட்டம்! விறல்பாண்டி யக்கூட்டம்!
ஆல்போற் பரந்துயர்ந்த அற்றைத் தமிழ்க்கூட்டம்!
ஒக்கூர்மா சாத்தி உரைத்த மறக்கூட்டம்!
நற்காவற் பெண்டு நவின்றசோ ழக்கூட்டம்!
நக்கண்ணை வேண்டிநின்ற நாஞ்சிச்சே ரர்கூட்டம்!
இக்கூட்டம் தன்னை எவர்வெல்வார்?"—என்பீரால்
அக்கூட்டந் தன்னை அடிவணங்கி வாழ்த்துரைப்பேன்.

நல்லறிவு தோன்றிவிடின் நல்லுணர்வு வீறாதோ?
நல்லுணர்வு வீறிவரின் நாமுயர்வு காணோமா?
நம்முயர்வு கண்டுவிடின் நன்முயற்சி முங்காதோ?
நன்முயற்சி முங்கிவிடின் நம்மிழிவும் நீங்காதோ?
நம்மிழிவு நீங்கிவிடின் நம்மடிமை சாகாதோ?
நம்மடிமை செத்துவிடின் நந்தமிழும் மேன்மையுறும்!
நந்தமிழும் மேன்மையுறின் நந்தமிழர் ஒன்றாரோ?
நந்தமிழர் ஒன்றியபின் நந்நாட்டை வெல்லோமா?
நந்நாட்டை வென்றுவிடின் நம்வாழ்வும் பூக்காதோ?
நம்வாழ்வு பூத்துவிடின் நல்வளமும் காய்க்காதோ?
நம்வளமும் காய்ப்பின் பொதுமை கனியாதோ?
ஆகவே மாணவரீர்! ஆர்த்து நடையிடுவீர்!
ஏகுகின்ற போக்கில் இடர்வந்தால் தூள்! தூள்! தூள்!
எந்தமிழின் மேன்மைக் கெழுவரிங்கு பாடுகின்றார்!
அந்தமொழி கேட்போம் அமர்ந்து.

www.thamizham.net - Free E book No 7423

பின்னுரை:

எந்தமிழின் மேன்மைக் கெழுவரிங்கு பாடிவிட்டார்.
சிந்துமிழும் பாட்டாகச் சிற்றருவித் தண்சிலிர்ப்பாய்
வெள்ளப் பெருக்காய் விரிந்தது செந்தமிழ்ப்பா!
உள்ளங் குளிர்ந்தோம்! உலகம் மறந்துவிட்டோம்!
பாட்டரங்கம் கூடிப் பலர்பாடி நிற்பதுவும்
கேட்டு,அரங்கக் கூரை கிடுகிடுக்கக் கைகொட்டிப்
பாராட்டிப் போவதுமே பார்க்கின்றோம் நாட்டிடையில்!
பாராட்டல் தீதன்று! பாராட்டால் என்னபயன்?

நாமணந்து கொண்டபெண்ணை நான்குபேர் முன்னிறுத்தி
நாமணக்க வாய்மணக்க நல்லோர் செவிமணக்கப்
பாராட்டிப் பேசிப் பலவாய்ப் புகழ்ந்துரைத்துச்
சீராட்டிக் கொண்டிருப்ப தொன்றே சிறப்பாமோ?
இல்லறம்மேற் கொண்டொழுக வேண்டாவா? இவ்வறமும்
நல்லறவோர் கண்டு நயந்துரைக்க வேண்டாவா?

அவ்வுரைக்குப் பின்னும் அனைத்துலகும் தாமகிழ
ஒவ்விப் பொதுத்தொண்டால் ஓங்குயர வேண்டாவா?
இந்தப் பயன்தானே எல்லாரும் கண்டபயன்!
அந்தப் பயன்தான் அனைத்துக்கும் வேரென்பேன்!

செந்தமிழும் மேன்மையுறச் செப்பினார் பல்வழிகள்.
அந்தவழி கேட்டபின்னும் அப்படியே நின்றமெனில்
பாட்டரங்கால் கண்ட பயனென்ன? மாணவர்கள்!
கூட்டுக்குள் ஆவி குடிகொண்ட நாள்தொடங்கி
நாம்தமிழர் என்றே நவியுரைத்துக் கொள்கின்றோம்!
ஆம்தமிழர் தாம்;அதற்கே அட்டியில்லை; ஆனாலும்
எப்படிநாம் வாழ்கின்றோம்? எப்படிநாம் வாழ்ந்திருந்தோம்?
அப்படிக்கு மேலே அரைப்படியைத் தாண்டினமா?

மாணவர் தம்பணி சொன்னார்ஓர் மாண்புலவர்!
மாணவர் தம்மின் மனத்துள் தமிழ்உளதா?
மாணவர் வாயில் மணப்பதுவும் செந்தமிழா?
நாணவேண் டாவா? நடப்பதென்ன? சொல்வதென்ன?
அற்றைத் தமிழை அறிந்துணர வேண்டாவா?
கற்றை உருபாத்தாள் கண்டுவிட்டால் நாம்தமிழை
முன்னர் இழப்போம்! முழுமனமும் பின்னிழப்போம்!
இன்னுயிராம் மானம் இழப்போம்;நம் வாழ்விழப்போம்!

www.thamizham.net - Free E book No 7423

எண்ணுங்கள்! எண்ணி இழிவுயர்வு காணுங்கள்!
மண்உங்கள் மண்!மற்றும் மாத்தமிழும் உங்களது!
தாய்மொழியைப் பேணினமா? பேணத் தவறினமே!
காய்மொழியைக் கொண்டோம்; கனிமொழியைவிட்டுவிட்டோம்!
எந்த அறிவியலிங் கேற்காது செந்தமிழ்க்கே!
அந்த அறிவியலைச் செய்யஅறி வற்றேமா?

கூறுங்கள்; என்னுடைய கூற்றில் குறையிருந்தால்
மீறுங்கள்; நீங்கள் மிதித்தவழி யான்நடப்பேன்!

மாணவரைச் சொன்னேன்;நம் மாணவரைத் தோற்றுவிக்கும்
பூணவராம் ஆசிரியர்! அன்னார் புகல்வதென்ன?

பேரா சிரியப் பெருமக்கள் எல்லாரும்
சீராகச் செந்தமிழ்க்குச் சீர்செய்ய எண்ணுவரேல்
இன்பத் தமிழ்மொழிதான் மேன்மையினை எய்தாதா?
முன்பிருந்த வாழ்க்கை முழுவாழ்க்கை இல்லையா?
இன்று தமிழன் எழத்தொடங்கி நிற்கின்றான்?
ஒன்று இரண்டா? உயர்நூற்கள் எத்தனையோ?
அன்னவற்றில் எல்லாம் அருந்தமிழன் வாழ்விலையா?
சொன்னவற்றில் என்ன பிழைகண்டீர் சொல்லுங்கள்.

ஆசிரியன் மாரை அறைகூவிக் கேட்கின்றேன்.
காசிற் குழைத்தீர்; கருத்திற் குழைத்தீரா?
தாய்தமிழ் என்ன தரங்குறைந்து விட்டதென்பீர்!
வாய்மொழிப்போ ராட்டம் நடத்த வருவீரா?
ஆங்கிலமே நல்ல அறிவியலைச் செய்யுமெனில்
ஈங்கிருக்கும் சப்பான், எதிரிருக்கும் சீனம்,
உருசியா போன்ற உலகநா டெல்லாம்
பெருமை அறிவியலை ஆங்கிலத்தா பேசுகின்றார்?
தாய்மொழியில் அன்றோ அறிவியலைத் தாங்கற்பர்!
தாய்மொழி யன்றோ உள்ளுணர்(வு) தாங்கொளுத்தும்!
ஆகவே கல்விசொல் ஆசிரியர் எல்லாரும்
ஈகை உளத்தாலே எந்தமிழ்க்கு மேன்மைசெய்தால்
நாமும் உயர்ந்திடலாம்; நாடும் உயர்ந்துவிடும்!
ஊமைக்கும் கல்விசொல்லும் காலமிது; ஓர்ந்துணர்வீர்!

மற்றுந் தொழிலாளர் மாப்பணியில் ஒன்று—தமிழ்
கற்றுப் பெருமையுறல்! காற்றைக் கடந்துசெல்லும்
காலத்தில் வாழ்கின்றோம்! வெண்ணிலவில் கால்வைத்தோம்!

www.thamizham.net - Free E book No 7423

ஞால உருண்டையினை நாளொன்றில் சுற்றுகின்றோம்!
ஆனாலும் உள்ளத் தமைதியிலை; மக்களுக்குள்
ஏனோ ஒழுங்கில்லை; ஏப்படியோ வாழ்கின்றோம்!
மேற்புறத்தை வென்றோம்; அகப்புறத்தை வெல்லவில்லை!
நாற்புறத்தைக் கண்டோம்; நமதுளத்தைக் காணவில்லை.
உள்ளந் திரிந்தும் உடல்திரிந்தும் வாழுகின்றோம்!
வெள்ளப் பெருக்கேபோல் விஞ்ஞா நாகரிகம்!
ஊர்திகளின் ஓலங்கள். ஓசையெழும் கூட்டங்கள்!
நேர்கின்ற முன்னேற்றம் யாவும் நிழல்போல!
இல்லறத்துப் பாங்கில்லை; எங்கணுமே இன்பமில்லை!
சொல்வதற் கோஅச்சம்; செய்வதற்கோ பேரச்சம்!
காசுபணம் தந்தால் கயமை செயத்தயங்கார்!
பேசுவது வேறு! பிழைக்கும் வழிவேறே!
இந்த நிலையில் தொழிலாளர் என்செய்வார்?
தந்தம் மொழியன்றோ தம்மினத்தைக் கூட்டுவிக்கும்!
கூட்டுவிக்கப் பெற்ற இனத்தன்றோ கூடும்இன்பம்!
நாட்டின் நலமுழுதும் நாட்டாரே துய்ப்பதெனில்
அன்னவர்பால் நாமிங் கனைவோரும் ஒன்றென்னும்
பொன்னுணர்வு முற்படவும் பூத்துவரல் வேண்டாவோ!
தாய்மொழியொன் றன்றோ தமையிணைத்துக் கட்டுவது!
தாய்மொழியைத் தள்ளுவது தாய்மை தவிர்ப்பதுவே!
இற்றைத் தொழிலாளர் இஃதுணர்ந்தால் செந்தமிழும்
அற்றைப் பொலிவை அடைந்து சிறக்காதோ
ஊர்காக்கும் நல்லுழவர் வாழ்க்கையிலும் ஒண்தமிழே
சீர்காக்கும்! அன்புச் செறிவை உணர்த்துவிக்கும்!
பண்டைத் தமிழில் உழவுப் பயன்மிகுதி!
கெண்டை புரளும் வயலில் கிடந்துழலும்
பெண்டிர்தம் பாட்டால் பெறும்விளைவு கோடிபெறும்!
கண்டன்ன தென்பாங்கு காற்றில் மிதந்துவரின்
ஏற்றம் இறைப்போர் இடுப்புவலி போகாதா?
மாற்றம் இருந்தால் மனமகிழ்ச்சி கூடாதா?
மக்கள் உழவில் மனம்புகுதல் இன்றில்லை!
ஒக்க தமிழென் உணர்ச்சி தளர்ந்ததுவே!
தக்கபடி அன்றோர் தமிழில் உணர்வுபெறில்
மிக்க பயனிருக்கும்! மேன்மை யுறுந்தமிழும்!

தாய்தமிழைப் பேணுவது தாயர் கடனாகும்!
வாய்வைத்தே யுண்ணும் வளர்குழவிக் கின்னமுதோ

www.thamizham.net - Free E book No 7423

டெந்தமிழை ஊட்டுவதே எப்பணிக்கும் மேற்பணியாம்!
செந்தமிழின் சொற்கள் செழுந்தாய்மைச் சொற்களன்றோ!
பெற்றுயிர்க்கும் மக்களிடை பெற்றி குலைவதெலாம்
வெற்றொலியாய் வேறுமொழி வேண்டிப் பயிற்றுவதே!
தாய்மை உயர்ந்ததெனில் தாய்மொழியும் தாழ்ந்திடுமோ?
தாய்ப்பால் தவிர்த்தொருதாய் தன்குழவி வாயிலொரு
நாய்ப்பால் புகட்டியதை நாள்தோறும் பேணட்டும்!
தாயுடலின் மேலாகத் தன்னுடலைக் கண்டாலும்,
நற்றாய் குணம்வருமா? நாயின் குணம்வருமா?
கற்றோர்கள் ஆய்ந்து கருத்தைத் தெரிவியுங்கள்!
ஆகவே தாய்மாரை அன்பாலே வேண்டுகின்றேன்.
வேக உலகின் விழல்நா கரிகத்தை
மேலென்றே எண்ணற்க! மேன்மையுறச் செந்தமிழ்த்தாய்ப்
பாலைப் புகட்டுக! பைந்தமிழைக் காத்திடுக!
பேசும் மொழிக்கன்று, பேசாத எத்துறைக்கும்
மாசு விலக்கி மலர்ச்சியுறச் செய்வதெலாம்
நல்லரசின் மெய்க்கடனாம்! நாட்டு வரலாற்றில்
வல்ல மொழிவளர்க்கா வல்லரசு வாய்த்ததுண்டா?
தாய்மொழியிற் கல்வி தருகின்ற எவ்வரசும்
ஆயமிக நல்லரசாய் மக்கள் அகப்படுக்கும்!
செந்தமிழின் மேன்மை செழிப்பதெனில் நம்மரசும்
எந்தமிழைப் பல்துறைக்கும் ஏற்றுக் கொளல்வேண்டும்!

பல்துறையில் நூலெழுதும் பன்னூல் அறிஞர்க்கும்
ஒல்லும் வகையில் உதவிதந்தே, அந்நூற்கள்
எல்லாமும் அச்சேற்றி யாவருக்கும் போக்குவிக்கும்
நல்லறத்தைச் செய்தற்கு நாட்ட முறல்வேண்டும்!
எத்துறையில் யாவர் இறங்கியுழைக் கின்றனரோ
அத்துறையில் அன்னார் அறிவுரைகள் மேற்கொண்டு
நல்லபடி ஆய்ந்து நடுநின்று பின்பற்றி
மெல்லப் படிப்படியாய்ச் செந்தமிழை மேலேற்றல்
தம்மின் கடனாய்த் தமிழ்அரசு கொண்டிடுமேல்
எம்மருங்கும் நற்பண் பெளிதே இலங்குமென்பேன்!
எம்மொழிக்கும் தம்மொழியில் ஏற்ற மொழிநூற்கள்
செம்மையாய்ச் செய்வித்தல் ஆளுநர்க்குச் செய்கடனாம்!
செந்தமிழ்க்கும் அன்ன சிறப்பிழைத்தல் மேன்மையன்றோ?
எந்தமிழ நல்லரசும் இத்துறையில் எண்ணிடுக!

www.thamizham.net - Free E book No 7423

பாவலர்கள் செந்தமிழில் பாடல் குவித்திடுக!
தூவல் எடுத்தெதையும் தூவிவிடல் பாட்டாகா!
தந்தம் உணர்வுக்குத் தக்கதெல்லாம் பாட்டென்றால்
இந்த உலகில் இலக்கியமென் றென்றேது?
முட்டை சுமக்கும் முழுக்கழுதை நெட்டுயிர்ப்பும்,
சாட்டையடி தாளாத சண்டிக் குதிரையதும்,
கல்பட்ட நாயின் கடிந்த குரைப்பொலியும்,
வில்பட்ட வேங்கை வெருவுதலும் பாட்டன்றோ?
வேற்று மொழிவிலக்கி, வெல்லுகின்ற சொல்லடுக்கி
நாற்று நடுதல்போல் நல்யாப்பில் கட்டுவிக்கும்
பாட்டன்றோ பாட்டு! பயன்விளைக்கும் மெய்ப்பாட்டு!
தீட்டுதீட் டென்று திசைபோன பக்கமெல்லாம்
போவதுபோல் கல்லாப் புரைதமிழை வைத்தடுக்கி,
ஆவதா கட்டுமென அல்லாரும் பாட்டுரைத்தால்,
தெய்வத் திருக்குறளும் வல்லதிரு மந்திரமும்
செய்யரிதாம் சாத்தன் சிலம்பும்நன் மேகலையும்,
பாட்டுந் தொகையும் பயனுள்ள நூற்பிறவும்
நாட்டில் உலாவருமா? நல்லோர்கள் எண்ணிடுக!
பைந்தமிழில் வல்லாரே பாட்டியற்ற எண்ணிடுக!
உய்ந்த பிறரோ உரைநூல் வரைந்திடுக!
பாடித் தமிழுயர்த்த எண்ணுகின்ற பாவலர்கள்
நாடித் தமிழ்கற்க! நல்லறிவு பெற்றிடுக!
நல்ல தொருகருத்தை நல்லமொழி, நல்லநடை,
நல்ல முறைப்பாவால் நாட்டுவித்தல் பாட்டாகும்!
செந்தமிழும் பாவலரால் சீர்பெறுதல் வேண்டுமெனில்
சந்தப்பா மட்டுமன்று; சாற்ற விரும்புகின்ற
எந்தப்பா வானாலும் ஏதுந்தப் பாவகையில்
சொந்தப்பா வாகச்சொற் சோர்வின்றிச் செய்திடுக!
முந்தப்பா வில்சிலசொல் மூலப்பா வில்சிலசொல்
கந்தப்பா வில்சிலசொல் காட்டிப்பா பாரென்றே
எந்தப்பா சொன்னாலும் ஏலாதப் பாவென்பேன்!
இந்தப்பா தோன்றுவதால் எந்தமிழ்ப்பா வாழாதே!
ஆகவே மாணவரும் ஆசிரிய நல்லாரும்
வாகாய்த் தொழில்புரியும் வன்மை மறவோரும்,
ஏருழவர் யாவரும் எந்தாய் மகளிரும்
ஆர்கொடி தாங்கும் அரசரும் பாவலரும்
செந்தமிழும் மேன்மையுறச் செய்க;பணி செய்கவென்றே
இந்த வுரைமுடிப்பேன் ஈண்டு!

www.thamizham.net - Free E book No 7423

முன்னிதழ்த் தொடர்ச்சி.

சிலந்தியோ சிலந்தி!

த. சலாவுத்தீன், அறி. இ; ஆ. ப.

"குடுவைச்செடி நண்டுச்சிலந்தி:-இஃது ஒரு தனிவகைச் சிலந்தியாகும். குடுவைச்செடி என்பதொரு செடியாகும். இது புலாலுண் வகையைச் சார்ந்தது. இதனுள் ஒருவகைச் செரிப்பு நீர்மம்[Digestive liquid] இருக்கின்றது. இதன் மணம் மிகவும் இனிமையாக இருக்கும். இந்த இனிமையான மணத்தால் கவரப்பட்ட பூச்சிகள் இதனுள் சென்று செரிப்பு நீர்மத்தில் வீழ்ந்து விடுகின்றன. இப்படி வீழ்ந்த பூச்சியை இந்நீர் கரைத்து விடுகின்றது. இது குடுவைச் செடிக்கு உணவாகின்றது. இச் செடிக்குள் 'நண்டுச்சிலந்தி' சென்று செரிப்பு நீர்மத்திற்கு மேல் வலையைப் பின்னிக்கொண்டு இருக்கும். பூச்சிகள் உள்ளே வந்து அதன் வலையில் வீழ்ந்து விடுகின்றன. சிலந்தி தனக்கு வேண்டியதை உண்டுவிட்டு மீதியைக் கீழேயுள்ள நீர்மத்தில் போட்டு விடுகின்றது. இது செடிக்கு உணவாக மாறிவிடுகின்றது.

சில நேரங்களில் இச் சிலந்தியின் எதிரிகள் குடுவைச் செடிக்குள் வருவதுண்டு. இந்நேரத்தில் பட்டுநூலின் உதவியால் இது செரிப்பு நீர்மத்தில் இறங்கி விடுகின்றது. இதனுடைய உறுதியான மேலுறை இதைச் சில மணித்துளிகளுக்கு செரிப்பு நீர்மத்தில் கரைந்து போகா வண்ணம் காக்கின்றது. இதன் எதிரி நீர்மத்தில் வீழ்ந்ததும் இது தன் பட்டுநூலின் உதவியால் தன் வலைக்குச்சென்று தன் வாயைக் குடுவைச்செடியின் ஓரத்தில் தேய்த்துத் துடைத்துக்கொள்கின்றது.

நண்டுச் சிலந்திப்பெண் தன் முட்டையுள்ள கூட்டை மிகவும் உன்னிப்பாகக் காக்கின்றது. இதுவும் ஓநாய்ச் சிலந்தியைப்போல் ஏமாறுவதுண்டு. இது தன் முட்டைகளைக் காக்கும்போது உணவிற் காகக்கூடக் கவலைப்படுவதில்லை.

ஆறு கிழமைகளுக்குப் பிறகு சிறிய சிலந்திகள் முட்டையிலிருந்து வெளிவந்து கூட்டிற்குள் இங்குமங்கும் செல்வதால் ஓசை உண்டாகின்றது. கூட்டின் மேலோடு உறுதியாக இருப்பதால் பிரித்துக் கொண்டுவா அவற்றால் இயலுவதில்லை. இந்நேரத்தில் இறுதியாகத் தாய்ச் சிலந்தி கூட்டில் சிறு தொளையைச் செய்துவிட்டு இறந்துவிடுகின்றது. இஃது இயற்கையின் கொடுமையேயாகும்.

www.thamizham.net - Free E book No 7423

(சிலந்தித் தச்சர்கள்)

கள்ளக்கதவுச் சிலந்தி: மாந்தன் கள்ளக் கதவுகளைப் பற்றி எண்ணாத காலந்தொட்டே பொறிக்கதவுகளை இச் சிலந்திகள் பயன் படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இது மண்ணுக்கடியில் குழாய்போல ஒரு தொளை செய்கின்றது. இத்தொளை ஏறத்தாழ ஓர் அடி ஆழமும், சிலந்தி உள்ளே பக்கவாட்டில் திரும்பும் அளவிற்கு அகலமும் கொண்டிருக்கும். தொளை செய்தபின் மண்ணையும் தன் உமிழ்நீரையும் சேர்த்துச் சாந்துபோல் குழப்பித் தொளையின் உட்புறத்தை நன்றாகப் பூசிவிடுகின்றது. இது காய்ந்து கெட்டியானதும் நீர் உட்செல்லாத அறையாக [Water proof] மாறிவிடுகின்றது. அதன்பிறகு இச்சிலந்தி தன் பட்டால் தன் வீட்டின் உட்புறத்தை முழுவதும் மூடிவிடுகின்றது. இறுதியாகத் தன் தொளையின் வாயிலில் ஒரு கதவைச் செய்து மூடிக்கொள்ளுகின்றது.

இந்தக் கதவுகளில் இருவகை உண்டு. ஒன்று தக்கை[புட்டில் மூடி]யைப்போல் அமைந்தது. மேல்பாகம் அகன்றும் கீழ்ப்பாகம் குறுகியும் புட்டில் அடைப்பான்போல் அமைந்தது. இந்த மூடி அடுத்தடுத்த பட்டு, மண் அமைப்பால் செய்யப்பட்டது. இந்த மூடியின் ஒரு புறத்தில் ஒரு கீழ் அமைப்பு இருக்கும். இந்த மூடி தெரியா வண்ணம், மேல் சுற்றுப்புறத்திற்கு ஏற்றாற்போல் அடைக்கப்பட்டிருக்கும். புல்லுள்ள இடத்தில் கதவின்மேல் புல்லிருக்கும். யாரும் இதைக் கதவு என்று தெரிந்துகொள்ள முடியாது. சிலந்தி வளைக்குள் இருக்கும்போது கதவின்மேல் யாராவது எதிரிகள் இருப்பதாகத் தெரிந்தால் சிலந்தி உள்ளே தன் பட்டால் கதவைக் கீழ்இழுத்துத் தொங்கிக் கொண்டிருக்கும்.

மற்றவகை, மெல்லிய மேல் உறைபோன்று இருக்கும். இது மிகவும் மென்மையாக இருப்பதால் இதன் எதிரிகள் எளிதில் உள்ளேவர வாய்ப்புண்டு. இப்படிப்பட்ட கதவுள்ள வளைகளில் சிலந்தி பல வழிகளைச் செய்திருக்கும். ஏதாவது ஒரு தொளையில் தனிக்கதவு கொண்டு சிலந்தி, அதைத் தன் இருப்பிடமாகக் கொண்டிருக்கும். இதனுள் யாராவது எதிரிகள் புகுந்துவிட்டால், அவர்கள் வெளியே வரமுடிவதில்லை. மாந்தர்கள் கடன் என்ற வகையில் வீழ்ந்துவிட்டால் எவ்வாறு மீள முடியாமல் அதிலேயே கிடந்து மாண்டு விடுகிறார்களோ அதேபோல் அந்தச் சிலந்தியின் எதிரி, சிலந்திக்கு உணவாகி விடுகின்றது.

www.thamizham.net - Free E book No 7423

கள்ளக்கதவுச் சிலந்திகள் நாள் முழுவதும் கூட்டிற்குள்ளேயே அடைபட்டிருக்கும். இரவு நேரங்களில் உணவிற்கு வேட்டையாடும். பக்கத்தே ஏதாவது பூச்சி சென்றால் அதை உடனே கூட்டிற்குள் இழுத்துக்கொள்ளும்; அதை உணவாகக் கொள்ளும்.

முடுபொறிக்கதவுச் சிலந்தி தன் கூட்டின் வெளியே அருகில் ஒரு வலையைப் பின்னி அமைத்துவிட்டு, அதிலிருந்து ஒரு நூலைக் கட்டித் தன் கூட்டிற்குள் கொண்டு சென்று அமர்ந்துவிடும். நாம் மீன் பிடிக்கும்போது நீரின்மேல் மிதக்கும் தக்கை உள்ளிழுக்கப் பட்டதும் தூண்டிலை நீருக்கு வெளியே எடுத்து மீனைப் பிடித்துக்கொள்கிறோமில்லையா, அதேபோல் வலையில் பூச்சி மாட்டிக்கொண்டதும் நூலின் அசைவினால் அதைச் சிலந்தி தெரிந்துகொண்டு உடனே வெளிவந்து உணவைப் பற்றிக்கொள்ளும். காலையில் தன் வலையை மடித்து எடுத்துச்சென்று தன் கதவின்கீழ்ப்பாகத்தில் அதைப் பொருத்திக் கதவை வலியுள்ளதாக்கிக் கொள்கின்றது.

நீர்ச்சிலந்தி: இது நீரோடைகளின் அருகே வாழ்கின்றது. தன் உணவிற்காகக் கரையோரமாகச் செல்லுகின்றது. இது மிகவும் இலேசாக இருப்பதால் நீரின்மேல் நடந்து செல்லுகின்றது. உணவு தென்பட்டால் உடனே நீரில் மூழ்கி எடுத்துக்கொள்கின்றது.

தெப்பச்சிலந்தி [Raft Spider]: இஃது இலையைத் தெப்பம்போல் செய்து அதில் அமர்ந்து நீரின்மேல் செல்லுகின்றது. உணவு தென்பட்டால் அதை எடுத்துத்தெப்பத்தில் போட்டுக்கொள்கின்றது.

உண்மையான நீர்ச்சிலந்தி நீருக்குள்ளேயே இருக்கின்றது. உயிர்ப்பதற்கு இதற்குச் செவுள்கள் இல்லை. ஆகையால் இது நீரின் மேற்பரப்பிற்கு வந்து வயிற்றைச் சற்றுத் தூக்கி, காற்றுக் குமிழியை இடைவெளியில் அகப்படும்படி செய்துகொண்டு நீருக்கடியில் சென்று விடுகின்றது. அக்காற்று பயன்படுத்தப் பட்டவுடன் மீண்டும் மேலெழும்பி முன் செய்ததுபோல் செய்கின்றது.

திருவாட்டி நீர்ச்சிலந்தி தன் வீட்டைக்கட்டி தன் குடும்பத்தை நீருக்கடியிலேயே வளர்க்கின்றது. கோடைக்காலத்தில் நீருக்கடியிலுள்ள நிலைத்திணைகளில் தன் பட்டினால் சிறிய கூட்டை அமைக்கின்றது. பிறகு பலமுறை நீருக்குமேல்வந்து காற்றுக் குமிழிகளை எடுத்துச் சென்று கூட்டில் சேகரித்து வைத்துக்கொண்டு வாழ்கின்றது. குளிர்காலத்தில் நீரில் மிகுந்த ஆழத்தில் சென்று உறுதியான

www.thamizham.net - Free E book No 7423

கூட்டைக் கட்டிக்கொள்கின்றது. சிறிது காற்றைக்கொண்டு கோடைக்காலம் வரும்வரை உள்ளிருக்கும். இந்நேரத்தில் இஃது ஒரு நீண்ட தூக்கத்தில் [Hiberoates] ஆழ்ந்து விடுகின்றது. கூட்டின் மேற்புறத்தில் முட்டைகள் தொங்கவிடப்படுகின்றன. இவை மூன்று கிழமைகளில் பொரித்துக் குஞ்சுகள் வெளி வருகின்றன. இப் பருவத்திலேயே இவை சிறந்த நீச்சலடிப்பவையாக இருக்கின்றன.

தற்காப்பு: வல்லவனுக்கு வல்லவன் ஒருவன் இருக்கின்றான் என்பதைச் சிலந்திகள் மறப்பதில்லை. சிலந்தி வேட்டையாடித் தன் உணவைப் பெறுகின்றது. இதேபோல் சிலந்தியை வேட்டையாடும் பூச்சியும் உண்டு. இது குளவியாகும். குளவி பெரிதாகி முட்டையிடும் பருவத்தில் தன் குஞ்சிற்காகத் தனி வளையைச் செய்கின்றது. முட்டையிலிருந்து புழு வந்ததும் அதன் உணவுக்காக ஒரு பூச்சியைப் பிடித்து வைக்கின்றது. இப்பூச்சி இறக்காமல் அப்படியே இருந்தால் தான் புழு வெளிவரும் வரை கெடாமல் இருக்கும். இதற்காக, குளவி சிலந்தியைத் தேர்ந்தெடுக்கின்றது. சிலந்திமேல் அமர்ந்து அதன் நரம்பு மையத்தில் ஒரு நச்சைப் பாய்ச்சி அதை மயக்கமடையும்படி செய்து, தன் கூட்டிற்குள் இட்டு, முட்டையை அதன்மேல் இட்டு கூட்டை மூடிவிடுகின்றது. சில நாட்களில் முட்டையிலிருந்து புழு வெளிவந்து சிலந்தியைச் சிறிது சிறிதாக உண்டு வளர்கின்றது. இறுதியில் முழுச் சிலந்தியையும் உண்டு விடுகின்றது.

ஒரு வகையான பூச்சி தன் புழுக்களுக்குச் சிலந்தியின் முட்டைகளை உணவாகக் கொள்கின்றது. சிலந்தியின முட்டைக் கூட்டில் தன் முட்டைகளையிட்டு விடுகின்றது. முட்டையிலிருந்து வெளிவரும் இப்புழுக்கள் சிலந்தியின் முட்டைகளை உண்டு வளர்கின்றன. தவளைகள், பறவைகள், மீன்கள், குரங்குகள், எலிகள் ஆகியவை சிலந்தியை உணவாகக் கொள்கின்றன. இத்தனை எதிரிகள் இவற்றிற்கு இருந்தும் சிலந்திகள் வாழ்ந்து வருகின்றன.

சிலந்திகள் தங்களைத் தற்காப்பு வண்ணத்தால் காத்துக்கொள்கின்றன என்பதை முதலிலேயே பார்த்தோம். சிலந்திகள் தற்காப்பு வண்ணத்தால் மட்டும் அல்லாமல் வேறுபல முறைகளிலும் தற்காத்துக்கொள்ளுகின்றன. சில எறும்புகள்போல் நடித்துத்தப்பித்துக் கொள்ளுகின்றன. ஏனென்றால் சிலந்திகளை உண்ணும் பூச்சிகள் எறும்புகளை உண்பதில்லை. இன்னும் சில சிலந்திகள் எறும்புகளின் மேலோட்டைத் தங்கள்மேல் அமைத்துக்கொண்டு தங்கள் எதிரிகளை

www.thamizham.net - Free E book No 7423

ஏமாற்றி விடுகின்றன. மிகவும் சிறந்த இயற்கையியல் வல்லுநர் களும் சிலந்தியை எறும்பு என்று ஏமாறியிருக்கின்றார்கள்.

இறக்கையில்லாத குளவிகளுள்ள இடங்களில் சில சிலந்திகள் அக்குளவிகள் போலவே நடித்துத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளு கின்றன. இவ்வாறாக, பலவகைகளில் சிலந்திகள் தங்களைக் காப்பாற் றிக் கொள்ளுகின்றன.

சிலந்திகளின் களியாட்டம்: இளங்காளையொருவன் ஓர் அழகுக் கன்னியிடம் பேசும்போது, அவனையறியாமல் அவனுக்கு ஒருவகை அச்சமும் பேச்சில் தடுமாற்றமும், வெட்கமும் உண்டாவது இயற்கை. உண்மையில் பெண்ணைக்கண்டு அஞ்சுவதற்கான காரணம் ஏது மில்லை. ஆனால் ஆண் சிலந்தி பெண் சிலந்தியைக் காதல் செய்யும் போது அச்சப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஏனென்றால் இக்காதல் விளையாட்டில் ஆண் சிலந்தியின் உயிருக்கே கேடுவருவதுண்டு.

பெண் சிலந்தி உணர்ச்சி வயப்பட்டது. ஆண் சிலந்தியின் பார்வை பெண் சிலந்திக்குப் பிடிக்கவில்லை என்றால் அதே இடத்தில் பெண், ஆணைத்தின்றுவிடும். பெண்ணுக்கு ஆணைப்பிடித்துவிட்டால் மணப்பெண்ணாக மாறி, சில நாட்களுக்குப்பிறகு ஆணைத்தின்று விடும்.

இனப்பெருக்கம்: ஆண் சிலந்திக்கு இனப் பெருக்கத்திற்காகத் தனி உறுப்புகள் இல்லை. இதற்காக ஆண் சிலந்தி ஒரு பாயை நெய்து அதில் ஒருதுளி ஆண் விந்தைவிட்டு, அதைத் தன் உறிஞ்சித்தூம் பால் இழுத்துக்கொண்டபின், ஒரு குமரிச்சிலந்தியைத்தேடிச்செல்லும். அதைக்கண்டு கொண்டபின் அவ்விந்துத்துளியை அதனிடம் தரும். தன் இனத்தைச் சேர்ந்த பெண்சிலந்தியைத் தேடி மிகவும் எச்சரிக் கையாகப் பக்கத்தில் சென்று, தான் அதற்கு உணவன்று, துணை வன் என்று தெரிவிக்கும். பெண் ஆணை ஏற்றுக்கொண்டால் இரண் டும் இணையும் [Intercourse]. இணைந்தபின் ஆண் சிலந்தி தப்பிச் செல்வதும் உண்டு. சில பெண் சிலந்திகள் சில நாட்களுக்கு ஆண் சிலந்திகளைத் தம் கூட்டில் இருக்கச் செய்து, நல்லபடி நடந்து கொள் வதும் உண்டு.

ஓநாய்ச் சிலந்தி பெண்ணைக் கவருவது ஒரு புதுமுறையான காட்சியாகும். தொலைவில் நின்று காலைத்தூக்கிச் செய்கை காட்டும். இச் செய்கையைப் பார்த்துச் செல்விச் சிலந்தி செல்வனை நோக்கி

www.thamizham.net - Free E book No 7423

வரும். இதைக்கண்டதும் செல்வன் சிலந்தி பெண்ணின் கையில் அகப்படாமல் மிக விரைவாக ஓடுவார். [கையில் அகப்பட்டால் செல்விச் சிலந்திக்கு உணவாக ஆகிவிட வேண்டியதாகுமே!!] தொலைவிலிருந்து மீண்டும் செய்கை காண்பிக்கும். இதேபோல் மணிக்கணக்கில் ஆண்சிலந்தி செய்கை காண்பிப்பதும் பெண் அதனை நோக்கி ஓடுவதும் நடைபெறும். சில ஓநாய்ச் சிலந்தி புதிதாகப் பிடித்த பூச்சியைப் பட்டால் போர்த்திப் பெண்ணுக்குப் பரிசாகக் கொடுக்கும். தாவும் சிலந்தி பெண்சிலந்தி முன் நடனமாடிக் கவரும். நடனம் பல வகையாக இருக்கும். சில இனச் சிலந்திகள் மெதுவாக நடனமாடும். சில விரைவாக நடனமாடும். ஆடும்போது சுற்றிச் சுற்றி ஆடும். 'பெக்கம்' [peckhams] என்னும் ஆய்வாளர் ஒருமுறை இந் நடனத்தைப் பார்த்து எண்ணியதில், ஓர் ஆண் சிலந்தி 111 முறை சுற்றி நடனமாடியதாகத் தெரியவந்தது.

பெண்ணுக்கு நடனம் பிடிக்கவில்லை யென்றால் தாவி ஆணைப் பிடித்துத் தின்றுவிடும். நடனம் பிடித்து விட்டால் அதிலே மயங்கி விடும். மயங்கி ஆண் ஆடுவது போலவே ஆடவும் தொடங்கிவிடும். பெண் சிலந்தி மயங்கிய நேரம் பார்த்து ஆண் சிலந்தி அதை மருவும். இணைப்பு முடிந்ததும் ஆண் ஓடிவிடும்.

சிலந்திக்குஞ்சுகள்: இனத்திற்கு இனம் முட்டைகள் வேறுபடும். ஆனால் எல்லாம் பட்டால் ஆன கூட்டிற்குள் இருக்கும். ஒரு கூட்டிற்குள் மூவாயிரம் வரை முட்டைகள் இருக்கும். சிலந்தித் தாய்கள் குஞ்சுகள் வெளிவருவதற்கு முன் இறந்து விடும். சில உயிர்வாழும். சில நல்ல தாய்களாக இருந்து, தங்கள் குஞ்சுகளைப் பார்த்துக்கொள்ளும்.

ஓநாய்ச் சிலந்தி தன் குஞ்சுகளைத் தன் முதுகின்மீது எடுத்துக் கொண்டு [ஏறத்தாழ 200-க்கு மேல்] இங்கும் அங்கும் அலையும். இவ்வாறு செல்லும்போது இலைகளில் தட்டுப்பட்டு, சில குஞ்சுகள் கீழே விழுவதுண்டு. இதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அக் குஞ்சுகளே, நாம் ஒரு பேருந்து வண்டியை விட்டுவிட்டால் மற்றொன்று வரும்வரை நின்று மற்றதில் ஏறிச்செல்வது போல, இன்னொரு சிலந்தி தன் குஞ்சுகளைச் சுமந்துகொண்டு வரும்போது அதன் முதுகின்மேல் ஏறிக்கொள்ளும். இவ்வாறு தன் முதுகில் ஏறிக்கொள்ளும் மற்ற தாய்க்குஞ்சுகளையும் அந்தப் புதிய தாய் நன்றாகக் கவனித்துக்கொள்ளும் [மாந்தர்களுக்கு இந்தக் குணமிருந்தால் எத்தனை தாயற்ற

www.thamizham.net - Free E book No 7423

பிள்ளைகள் நல்ல நிலைக்கு வரலாம். சிலந்தித் தாய்களிடமிருந்து இதை நாம் கற்றுக்கொள்ளலாம்]

சில நேரங்களில் இரண்டு தாய்ச்சிலந்திகளும் சண்டையிட்டுக் கொள்ளும். இச்சண்டையில் தோற்ற தாயின் குழந்தைகளை வெற்றி கண்ட தாய் எடுத்துக்கொண்டு, அத் தாயை உண்டுவிடும்.

முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் மிகவும் சிறியனவாகவும், மிகவும் இலேசாகவும் இருப்பதால் இவை காற்றில் மிதப்பதுண்டு. இவை தங்களால் இயன்றவரை செடியின் மிக உயரமான பகுதிக்குச் செல்லும். செல்லும்போது வெண்பட்டை உண்டாக்கிக் கொண்டே போகும். மிக உயரத்திற்குச் சென்றதும் அப்படியே காற்றில் மிதக்கும். ஒரே நேரத்தில் சில நூறு சிலந்திக் குஞ்சுகள் காற்றிலே மிதக்கும் காட்சி மிக அழகான காட்சியாகும். இவ்வாறு மிதக்கும்போது அவற்றின் வெண்பட்டு இறங்குகுடை [பாராசூட்] போல் பயன்படுகின்றது. இவ்வாறு காற்றில் மிதந்து பல கற்கள் தொலைவிற்கும் இவை சென்று விடுவதுண்டு. கடலில் 200 கற்கள் தொலைவிலுள்ள கப்பல்களிலும் இவை வந்து இறங்கி இருக்கின்றன.

சிலந்திகள் வளரும்போது தங்கள் மேல் உறையை நீக்கிக்கொள்ளும். சிறியவை சிலமுறையும் பெரியவை பலமுறையும் மேல் உறையை நீக்கும். நீண்டநாட்கள் வாழும் பெரிய "டிரென்குலா"ச் சிலந்திகள் ஏறத்தாழ 40 முறைக்குமேல் உறையை நீக்கிக்கொள்கின்றன. மேல் உறை நீக்குவது நின்றுவிட்டால் சிலந்தி நன்றாக வளர்ந்து விட்டது என்பது பொருளாகும். இதன் பிறகு அது தன் பெற்றோர்கள் செய்த வேலைகளைச் செய்யத் தொடங்கி விடுகின்றது. இவ்வாறாக உலகில் புதிய சிலந்திகள் உண்டாகிக்கொண்டே இருக்கின்றன. பூச்சிகளைத் தின்று மாந்த இனத்திற்குப் பயனை அளித்துக் கொண்டே இருக்கின்றன. O

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	9 உருபா.	10-50 உருபா	13 உருபா.
அரையாண்டுக் கட்டணம்	5 உருபா.	6 உருபா.	7 உருபா.
தனி இதழ்:	75 காசு	90 காசு.	1 உருபா.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7423

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

சேனாவரையர் உரைத்திறன்

பேராசிரியர். க. ப. அறவாணன்.

சேனாவரையர் பொருள்கோள் முறைகள்:

1. சொற்பொருள் விளக்கம்:

நூற்பாவில் பெய்யப்பட்ட சொற்களின் பயன் சேனாவரையர் விளக்கத்தால் முழுமை அடைவதைப் பல இடங்களிற் பார்க்கிறோம். 'பெண்மை சுட்டிய' என்பதற்கு அவர் தரும் விளக்கம் இது.

'ஆடூஉப் பெயரின் நீக்குதற்குப் பெண்மை சுட்டிய' என்றும், 'மகடூஉப் பெயரின் நீக்குதற்கு, ஆண்மை திரிந்த' என்றும் கூறினார். –நூற்-4.

இயல்பாவது- பொருட்டுப் பின் தோன்றாது உடன் நிகழுந் தன்மை-நூ–19.

இனமாவது– ஒரு சாதிக்கணைந்த சாதி.

சார்பாவது– அணைந்த சாதியன்றி ஒருவாற்றான் இயைபுடை [யது.நூ–53.

செய்யுள் (397), சுண்ணம் (406), தொகை (412): தகுதி வழக்கு (17), ஆகுபெயர் (56), முற்று, எச்சம் (235) ஆகிய சொற்கட்கும் அழகான விளக்கம் அளிக்கிறார்.

2. அதிகாரத்தால் பொருள் கோடல்:

நூற்பாவில் உள்ள சொல்லுக்குச்சொல் பொருள் உரைத்தல் நச்சினார்க்கினியர் முறை. சேனாவரையர் சொல்லுக்குச்சொல் பொருள் கூற முயல்வதில்லை. நூற்பாவின் பிண்டப்பொருளை எடுத்துரைப் பார். அன்றியும் அந்தச் சூழ்நிலைக்குத் தகுமாறு பொருள் உரைப் பார்.

எடுத்துக்காட்டாக: "அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்" என்பது நூற்பா- 'அந்தப் பொருளைக் கூறும்போது சுட்டிச்சொல்ல வேண்டும்'. இந்தப் பொருளுக்கு மட்டுந்தான் இந் நூற்பாவில் சொற்கள் உள்ளன. ஆனால் சேனாவரையர், 'அல்லதில் என்பான், பிறிது பொருள் கூறாது அப்பொருள் தன்னையே கூறுமாயின், இப் பயறு அல்லதில்லை எனச் சுட்டிக்கூறுக' என உரை எழுதுகிறார். இதனுள் உரைகாரர்,

www.thamizham.net - Free E book No 7423

1. அல்லதில் என்பான்
2. பிறிது பொருள் கூறுது
3. இப்பயறு அல்லதில்லை

என்ற மூன்றையும் வருவித்துக் கொண்டுள்ளார். 2-ஆவது பொருள் விளக்கத்திற்காகச்சேர்த்துள்ளார்; 3-ஆவது தாம் முன்நூற்பாவிற்குப் பொருள் கொள்ளும் முறையால் 'இப்பயறு' என வருவித்தார். 1-ஆவது தாம் வாவழைத்ததற்கான காரணத்தை அவரே கூறுகிறார்.

'அல்லதில் என்பது அதிகாரத்தாற் பெற்றும்' என்கிறார். ஒரு பொருள் நுதலி வரும் சில ஓத்தினது தொகுதியும் அதிகாரம் எனப் படும். இங்கும் 35, 36, 37-ஆம் நூற்பாக்கள் 'அல்லது' பெற்றுவரும் அதிகாரமாகும். அதற்கு இயையத்தான் வருவித்துக் கொண்டுள் ளார். இதுபோன்றே "உருபென மொழியினும்" என்ற நூற்பா விளக் கத்திலும் 'ஐயக்கிளவி என்பது அதிகாரத்தால் பெற்றும்" என் றெழுதுகிறார்.

3. முழுநூற் புலமையால் பொருள் கோடல்:

நச்சினார்க்கினியர் உரையில் அவருடைய பரந்த இலக்கியப் புலமை புலனாகும்; அவருடைய அந்தத் "தமிழ் நூற்கடல்"–கடந்த நூற் புலமை, தொல்காப்பியத்தை இலக்கியவழி நிறுவத் துணை செய் தது; இலக்கியங்களின் சுவையை உற்றறிவதற்கு இலக்கணம் ஒரு வழித்துணை என்பதையும் உறுதிப்படுத்தியது; தொல்காப்பிய நெறிகள் முற்றப் பிற்காலத்தில் மாண்டுவிடவில்லை என்பதை எடுத் துக்காட்டியது; நச்சினார்க்கினியர் இத்துறையில் வெற்றி பெற்றார் எனினும், அவர் சில இடங்களில் இலக்கிய வழக்காறுகளைத் தொல் காப்பியத்துள் அடக்குவதற்காக, மிக நலிந்து பொருள் செய்கிறார் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இது போன்று 'தடிகொண்டு கனி பழுக்க வைக்கும் முறை' மிகக் குறைவு இளம் பூரணத்தில்; அவருக்கு அடுத்தபடியாகச் சேனாவரையரைச் சொல்ல வேண்டும். சேனாவரையரிடம் இப் பண்பின்றி நூலின் முழுப்போக்கை மனத்துட்கொண்டே உரை செய்துள்ளார் என்பது ஆங்காங்கே விளக்கமாகிறது. எழுத்து, சொல், பொருள் கூறப்பட்ட மொத்த நூற்பாக்களுக்கு முரண்விளையாமல் பொருள் உரைக்க வேண்டியது அவரது கடமையாயிற்று; மீண்டும் வருஞ் செய்திகட்கு அமைதி காட்டவும், அவற்றை வேறுபடுத்தி உணர்த்தவும், அவை உணர்த்

தும் வேறு பொருள்களை வலியுறுத்தவும்—உரைகாரர்கள் முயன்றுர் கள்.

"செலவினும் வரவினும்......" என்ற நூற்பாவில் வினைச்சொல் முன்றிடத்திற்கும் உரியவாதல் வினையியலுள் பெறப்படுதலின் ஈண்டுக் கூறல் வேண்டா எனின்:- ஆண்டுப் பாலுணர்த்தும் ஈற்றுன் இடத்திற்குரிமை கூறினுர், ஈண்டு ஈற்றுனன்றிச் செலவு முதலாயின முதனிலைதாமே இடங்குறித்து நிற்றல் உடைமையான், இவ் வேறுபாடு ஆண்டுப் பெறப்படாமையின் ஈண்டுக் கூறினுர் என்பது"— என விளக்கந் தருகிருர். இதுபோன்றே 'செப்பே வழீஇயினும்-15' என்ற நூற்பாவிற்கு விளக்கம் உரைப்பார், நூற்பா 29-இல் 'படர்க்கைச் சொல் மயக்கமும் எய்துமால் எனின், அஃது இயலுள் பெறப்படுதலின் ஈண்டுக் கொள்ளப்படாது' என்பதும் காண்க. 43-ஆம் நூற்பாவிலும் இதுபோன்ற விளக்கம் உள்ளது.

4. எடுத்துக்காட்டுவழி உரை கோடல்: உரைகாரர்கள் இலக்கண உரை செய்யும்போது இலக்கண நூற்புலமையன்றி இலக்கிய அறிவும், உலகவழக்கு அறிவும், பிற உரைகாரர்களின் கருத்தும் உணர்ந்திருத்தல் வேண்டும். சில நூற்பாக்கட்கு அந்நூற்பாவைக் கொண்டு பொருள் உணர்த்த-அல்லது பொருள் முடிவுசெய்ய இலக்கிய வழக்காறுகளைப் பார்க்க வேண்டியுள்ளது. இலக்கிய வழக்கு களைக்கொண்டு-நூற்பாவின் பொருளைத் திட்டப் படுத்தவும், வகை செய்யவும் முயல்கிருர்கள்.

"அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்"–36.

என்ற நூற்பா வழக்கில் மயங்காது வரும் என்பதையும், செய்யுளில் மயங்கிவரும் என்பதையும் உணர்த்தவில்லை. கிடைக்கின்ற இலக்கிய வழக்குகளைத் திரட்டிப் பார்க்கிருர்கள். அவற்றுள் பெரும்பாலான அடைசினை, முதல் என முறையாக வராது மயங்கியே வந்துள்ளன என்பதைக் கண்டறிந்து-எடுத்துக்காட்டுகளைக் கொண்டு-இந்நூற்பா வழக்கில் வரும் என்பதையும் செய்யுளில் வராது என்பதையும் உணர்த்துகின்றது எனத் தெளிவுறுத்துவர். சில நூற்பாக்களுக்கு எடுத்துக்காட்டு கிடைப்பதில்லை. அத்தகு வாய்ப்புகளில் உரைகாரர்கள் 'வந்துழிக் கண்டுகொள்க' என்றும் 'உளவேல் கண்டு கொள்க' (நூ-50) என்றும் உரைத்தலைக் காண்கிறோம்.

www.thamizham.net - Free E book No 7423

5. வகைப்படுத்திப் பொருள் கோடல்: எல்லா நூற்பாக்களும் எல்லாச் செய்திகளையும் வகைப்படுத்தி உணர்த்துவதில்லை. அவ்வாறு வகைப்படுத்தப்படாதபோது உரைகாரர்கள் அதனை வகைப்படுத்த முயன்றுள்ளனர். இந்த முயற்சி கருத்துவேறுபாடுகளைத் தந்திருக்கலாம். எனினும் இருக்கின்ற ஒன்றை இருந்த அளவில் பார்ப்பதன்றி அதனை எண்ணி ஆராயும் பகுப்பாய்வுத்திறன் (Analysis) பாராட்டத்தக்கதே.

வினா, விடைபற்றித் தொல்காப்பியத்துள் வகைசெய்யப்பெறவில்லை. உரைகாரர்களே அதனை வகைப்படுத்தி விரிவுபடுத்துகிறார்கள். அதுபோன்றே வழுவமைதிகளும் இத்துணை என்றோ இன்னின்ன என்றோ மூலநூலில் தெளிவாக்கம் பெறவில்லை. உரைகாரர்கள்தாம் அதனை வகை செய்கிறார்கள். இத்தகுமுறை சேனாவரையர் உள்ளிட்ட அனைத்து உரைகாரர்களின் எண்ணத்தையும் தேங்கவிடவில்லை அது மேலும் வளர்கிறது; நீளுகிறது. வற்றாத உயிராறாக ஓடுகிறது என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.

iii சேனாவரையரின் மறுப்பு முறைகள்:

நூல்-காலங்கடந்து பார்க்கப்படுவதாலும், நூலை நோக்கும் இலக்கியப் பார்வை எல்லார்க்கும் ஒத்த இயல்பினதாய் இருக்கவேண்டும் என்ற வரையறை இல்லாமையானும், பரந்த நூலறிவும், அறிந்த பிறமொழியறிவும் தான் எழுதும் நூலைத்தாக்குவது இயற்கை என்பதானும், இலக்கியம் ஒரு பொருள் உடையதன்று, பல பொருள் உடையது (Canotative) ஆதலானும், சொல்வன சொல்வதைக் காட்டிலும் புதியன சொல்லல் வேண்டும் என்ற அவாவினானும்- கருத்து வேறுபாடுகள் தோற்றம் எடுக்கின்றன. இலக்கியம் அல்லது இலக்கணம், உரைகாரர்களால் தொட்டனைத்தூறும் மணற்கேணியாக்கப் பட்டிருப்பது-நமக்கு மூலம் என்ற ஒரு சொத்தை மட்டும் அல்லாது உரை என்ற மறு சொத்தையும் வாரி வழங்கியுள்ளது.

எதிரான இரண்டு மோதும்போது புதிய ஒளி பிறத்தல் இலக்கிய, தருக்க அளவினும் உண்மையே. ஆனால் இத்தகு கருத்து மோதல்களுக்கு அவரவர் கொள்ளும் வழி முறைகள் வெவ்வேறாகலாம்.

1. சிலர் மாற்றுரைத் தூசெனக் கருதி மறுக்கலாம்.

2. சிலர் மாற்றுரை மதித்து மறுக்கலாம்.

www.thamizham.net - Free E book No 7423

3. சிலர் மறுப்பது கருத்தை அன்று, மாற்றுரைத்தான் எனப் பொருள் தாண்டிப் போய்விடலாம்.
4. சிலர் கருத்தையே மறுக்கலாம்.
5. சிலர் எதனையும் சுட்டி மறுக்காது புதியது ஒன்று கூறுவதன் மூலமே மறுக்கலாம்.

1, 3—ஆம் முறைகள் தவிர்க்கத் தக்கன [இது பிற்காலத்துச் சிவஞான முனிவர்; அரசஞ் சண்முகனார் இலக்கணக் கொத்துரையாசிரியர்-ஆகியோரிடத்திலிருந்தது]

2, 4—ஆம் முறைகள் கொள்ளத்தக்கன. [சேனாவரையர் பரிமேலழகர், நச்சினார்க்கினியர்]

5—ஆம் முறை மதிக்கத்தக்கது [தெய்வச்சிலையார் கிளவியாக்கத்தைப் பொறுத்தவரை] மற்ற உரைகாரர்களைக் காட்டிலும் மிகுதியும் வேறுபாடு உடையவர் இவர்தான். மற்றவர் கூறாத சில அரிய செய்திகளையும், புதிய எண்ணங்களையும் இவர் செய்துள்ளார். ஓர் இடத்திலாவது பிறரை இழித்தோ, பழித்தோ பேசவில்லை. எத்துணை அரிய பண்பு!]

மேற்கண்ட முறைகளுள்-அவரவர் கொண்ட முறைக்கு இலக்கியங்களையும், வழக்காறுகளையும், தொல்காப்பிய நூற்பாக்களையும் ஆதாரமாகக்கொண்டு பிறர் உரைகளை மறுத்தனர். சேனாவரையரும் ஏறக்குறைய இந்தப் பின்னணி உடையவராயினும்-அவருடைய மறுப்புகளின் தருக்கத்திறன் (Argument Power) பளிச்சிடுகிறது.

செறிவான உரைநடை, அளவான இலக்கிய மேற்கோள், ஆழ்ந்தகன்ற முழுநூற்புலமை, வடமொழிஅறிவு இவை அவர் மறுப்புகளில் பின்னலிடுகின்றன. அவர் மறுத்த இடங்கள் பெரும்பாலான உரையாசிரியரை மறுத்தவையே! கிளவியாக்கத்தில்-நூற்பா 1, 4, 5, 13, 17, 24, 26, 29, 35, 40, 45, 50, 51, 54, 60 ஆகிய 15 இடங்களில் மறுத்துரைக்கிறார்.

சேனாவரையரின்—உரையாசிரியர் உரை மறுப்பை

1. தொல்காப்பிய நெறிகாட்டி மறுத்தல்.
2. இலக்கிய வழக்காறு கொண்டு மறுத்தல்.
3. அவர் உரையைக் கொண்டே மறுத்தல்.
4. தம் தருக்கத் திறமையால் மறுத்தல்.

என வகைப்படுத்தி ஒவ்வொன்றுக்கும் காட்டும் பார்ப்போம்.

(தொடரும்)

www.thamizham.net - Free E book No 7423

குறிப்பு,- கீழ்வரும் இக்கட்டுரைப் பகுதியை, இவ்விதழில் வெளி வந்துள்ள இக்கட்டுரைத் தொடரின் தொடக்கத்தில் உள்ள "சேனாவரையர் பொருள்கோள் முறைகள்" என்னும் தலைப்பிற்கு முன்னும், சென்ற இதழ்த் தொடர்ச்சியின் பின்னும் இணைத்துப் படிக்க.

2. 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்' எனத்திணைவிராய் வந்து முன்னிலை வினை கோடல் முதலான செய்யுள் முடிபுகள் அதிகாரப் புறனடையால் கொள்ளப்பெறும் (நூ-45) எனக் கூறுகிறார். இது போன்ற செய்திகளை எல்லாம் இயல்புறனடைகளிலும், அதிகாரப்புறனடைகளிலும் அடக்கிக்கொள்வது-இலக்கணம் நெகிழ்ச்சி உடையது என்பதையும் இலக்கண ஆசிரியன் வருங்காலக் கண்ணோட்டத்துடன்தான் நூல் செய்கிறான் என்பதையும் எடுத்துணர்த்துகின்றன.

3. இலக்கண ஆசிரியன் படைத்துக்கொண்ட உத்திமுறை-ஓர் அரிய படைப்பு என்பதில் ஐயமில்லை. நூற்சுவைப்புக்கும், நூற்சுருக்கத்திற்கும் பெருகினவற்றை அடக்குவதற்கும் இவை பெரிதும் பயனாகின்றன. நூலாசிரியனை 32 வகைகளில் அவன் சொல்லுமாற்றை அடக்கி வகைப்படுத்திக் காட்டுகிறது இவ்வுத்திமுறை.

மிகைச்சொல், புறனடை, உத்தி ஆகிய இவ்வழிகளன்றி உரைகாரர், பிறவும் (56, 57, 61) என்ற நூற்பாவில் வரும் சொல்லைக் கண்டு பலவற்றை இணைத்துக் கொள்ளலைப் பார்க்கிறோம்.

பிறவும்-என்ற சொல்லை முதல்நூலார் ஏன் பெய்தார்?

1. அவர் கிடைத்த எல்லாச் சொற்களையும் சொல்ல விரும்பாது இருக்கலாம்.

2. இவை போன்ற சொற்கள் பிற்காலத்துப் பெருக வாய்ப்பு உண்டு எனக்கருதி இருக்கலாம்.

3. எல்லாச் சொற்களையும் திரட்டி நிரப்பல், நூற்சுருக்கத்திற்கு எதிரானதாக அவர் எண்ணி இருக்கலாம்.

8. பொதுவான சில கூறுகள்: தொல்காப்பியர் சுருங்கிய வாய்ப்பாட்டால்தான் கூறுவார் (நூ-4); அகப்படச் சூத்திரஞ் செய்யார் (36); வறிதே சொற்களைப் பெய்யமாட்டார் (10, 21); நுண்ணுணர்வு உடையார்க்கன்றி அஃதில்லாதார்க்கும் நூல் செய்தார் (16, 21), நிரல்படவே நூற்பா அமைப்பார் (7); ஒரு சூத்திரத்தை ஒரு பொருள் கருதியே செய்வார் (1, 21); கூறியது கூறலும் வேறுபயன் விளைக்கும் (10); இவை சேனாவரையரின் பொது எண்ணங்களாகத் தோற்றுகின்றன.

www.thamizham.net - Free E book No 7423



[ம-80) அண்ணு இல்லாத தமிழா?

அன்புடையீர், வணக்கம். சென்ற தென்மொழியில் வெளியாகியுள்ள "உலகத் தமிழ்க் கழகக் கொள்கை" என்ற பாவாணரின் கட்டுரையைக் கண்ணுற்றேன். உண்மையில் அஃது கொள்கை விளக்கமா அல்லது கொள்கைக் குழப்பமா, என்பதே விளங்கவில்லை. இறுதியாகவும் உறுதியாகவும் ஒருகுறளைத்தான் அந்தக்கட்டுரை எனக்கு நினைவூட்டியது. "குன்றின் அனையரும் குன்றுவர் குன்றுவ குன்றியனைய செயின்" என்ற குறள்தான் அது. எந்தக் காழ்ப்புணர்ச்சியின் காரணியமாக இவற்றையெல்லாம் பாவாணர் அவர்கள் எழுதுகிருர்கள் என்பதை என்ஞல் புரிந்துகொள்ள முடிகிறது.

தமிழின் மறுமலர்ச்சிக்காகக் கட்சியையும் மறந்து உ த க. வில் பங்குகொண்ட என்போன்ருேர் எல்லாரும் தற்போது பாவாணர் கண்களுக்குக் காமாலைக் கண்ணர்களாகக் காட்சியளிக்கின்ருேம். எம் தலைவனைத் தாக்கியபோதும், புன்மொழிகளை அவர்கள் மீது வீசிய பொழுதும், கொள்கை அற்றவர்கள் நாங்கள் என்று 'பகடி' பேசிய போதும் அவற்றை எல்லாம் என்போன்றவர்கள் தாங்கிக்கொண்டோம், தமிழ் மலரவேண்டும், ஒளிரவேண்டும் என்பதற்காக. ஆஞல் இன்று நேரடித் தாக்குதல்களில் பாவாணர் அவர்கள் ஈடுபட்டிருப்பது கண்டு நான் கண்ணீர் வடிக்கின்றேன். பாவாணர் தாக்குகின்ருரே என்பதற்காக அன்று நான் கண்ணீர் சிந்துவது; பால் பொங்கி வரும் நேரத்தில் பானையை உடைப்பது போன்ற செயலில் பாவாணர் ஈடுபட்டிருக்கின்ருரே என்றுதான் கண்ணீர் சிந்துகின்றேன்.

கட்சிக்காரர்கள் கட்சியை மறந்து தமிழுக்காகப் பாடுபடமாட்டார்கள் என்ற பாவாணரின் கருத்தை நாங்கள் மறுக்கின்ருேம். எடுத்துக்காட்டாக நான் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தி. மு. க. வில் உறுப்பினஞக இருப்பவன். தென்மொழியின் வளர்ச்சிக்காக உண்மையில் பணியாற்றியவர்களுள் நானும் ஒருவன். தென்மொழியை எடுத்துச்சென்று எத்தனை ஆசிரியர்கள், மாணவர்களிடம்

www.thamizham.net - Free E book No 7423

"ஐயா, இந்த இதழைப் படித்துப் பாருங்கள்; கருத்தைச் சீர் தூக்கிப் பாருங்கள்; மனத்திற்குப் பட்டால் எடுத்துக்கொள்ளுங்கள்; இல்லையேல் என்னை மன்னித்துத் தள்ளிவிடுங்கள்" என்று நான் சொல்லியிருப்பேன் என்பதை நான்தான் அறிவேன். நீங்களோ பாவாணரோ உறுதியாக அந்த நிகழ்ச்சிகளை அறியமுடியாது. தென்மொழி இதழை என் மூலம் வாங்கிப் படித்து அதன் தனித்தன்மையை உணர்ந்து கொண்டவர்கள் பலர் இன்று உ. த. க. கிளையின் முன்மைப் பதவிகளில் இருந்து செயல்பட்டு வருகின்றனர் என்பதையும் நீங்கள் அறியமுடியாதுதான். இவற்றையெல்லாம் நான் இங்கே குறிப்பிடுவது. நாங்கள் கட்சியை மறந்து தமிழ்ப் பணிக்கு இயன்ற அளவு உழைத்தோம் என்பதை நீங்களும் பாவாணரும் உணராவிட்டாலும் தென்மொழி அன்பர்கள் உணரவேண்டும் என்பதற்காகத் தான்.

தென்மொழி செய்த அத்தனைத் தவறுகளையும் நான் அண்ணா வழி நின்று மன்னித்தேன்; மறந்தேன். ஆனால் இன்று மொழித் துறையில் நமக்கு வழிகாட்டியாக-தலைவராக விளங்குகின்ற பாவாணரே, தம் தலைமைக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் முன்னுக்குப்பின் முரணாக, அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை எங்கள் மீது சுமத்துகின்றார் என்றால் அதை எவ்வாறு எங்களால் ஏற்கமுடியும்?

ஊர்ப்பெயர்கள் தூய தமிழ்ச்சொற்களில் எழுதப்பட வேண்டும் என்ற கொள்கை விளக்கத்தைத் தருகின்ற பாவாணர், அதற்காகத் தண்டவாளத்தில் தலையை வைப்பது சிறுவருஞ் செய்யக்கூடிய சிறு செயல் என்று எழுதித் தம்முடைய கொள்கைக் குழப்பத்தைக் காட்டியிருக்கின்றார் என்றால் அது மிகையாகாது. தண்டவாளத்தில் தலையைவைப்பதுமட்டும் தமிழ்ப்பற்றையோ, தலைமைத்தகுதியையோ காட்டிவிடாது என்றால், பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தின் முன்பு மறைமலை அடிகள் படிமத்தை வைப்பது மட்டும் தமிழ்ப்பற்றைக் காட்டிவிடுமா? அல்லது தலைமைத் தகுதியைக் கொடுத்துவிடுமா? என்று எங்களால் ஏன் திருப்பிக் கேட்க இயலாது? இவற்றையெல்லாம் நேரடியாகப் பாவாணருக்கே எழுதமுடியும் என்றாலும், என் தலைவன் கற்றுத்தந்த கண்ணியத்தின் வழிநின்று, எவர் மனத்தையும், எந்தச் சூழ்நிலையிலும் புண்படுத்தக்கூடாது என்பதற்காகத்தான் இம்மடலை நான் உங்களுக்கு வரைகிறேன்.

www.thamizham.net - Free E book No 7423

ஒன்றை நீங்கள் உறுதியாக உணரவேண்டும். அண்ணாவின் தமிழ் உணர்ச்சிக்கும், கருத்துகளுக்கும் மதிப்பளிக்காத யார் தலைமையிலும் தமிழ் மக்கள் ஒன்றுசேர அணியமாக இல்லை என்பதை மட்டும் நீங்களும் பாவாணரும் உணரவேண்டும். அறிஞர் அண்ணாவின் கருத்துகளைக் கேட்டு, அறிஞர் அண்ணாவின் முழக்கங்களைச் செவிமடுத்து, அவற்றின் வாயிலாகத்தான் தமிழ்நாட்டு மக்கள் தங்கள் தாழ்ந்த தமிழகத்தின் நிலையினை உணர்ந்து கொண்டார்கள். பேரறிஞர் அண்ணாவின் பேருரைகளைக் கேட்டுத்தான், தீந்தமிழுக்குக் கேடு விளைக்கின்ற எல்லா நூல்களுக்கும் தீயிடவேண்டும் என்ற உணர்வை மக்கள் பெற்றார்கள். அண்ணாவின் ஆய்வுகளுக்குப் பின்னர்தான் ஆரியமாயையின் தன்மையைத் தமிழ்மக்கள் உணர்ந்து கொண்டார்கள். மொத்தத்தில் அண்ணாவின் வாயிலாகத்தான் தமிழ் மக்கள் தமிழ் உணர்வைப் பெற்றார்கள், தமிழின் மேன்மையை உணர்ந்தார்கள் என்றால் அது மிகையாகாது.

தென்மொழியைப் படித்தோ அல்லது பாவாணரின் நூல்களைப் படித்தோ தமிழ்மக்கள் மேற்கண்ட உணர்வுகளைப் பெற்றார்களல்லர் என்பதை நீங்கள் உறுதியாக உணரவேண்டும். இன்னும் சொல்வதென்றால் அண்ணா அவர்கள் ஊட்டாத ஒரு தமிழ் உணர்ச்சியைப் பாவாணர் அவர்கள் ஊட்டிவிடப் போவதில்லை. அண்ணா அவர்கள் காட்டாத ஒரு நல்வழியைத் தென்மொழி காட்டிவிடப் போவதில்லை. அண்ணாவின் கருத்துகளை, உணர்ச்சிகளை மதிக்காமல், தமிழை வளர்க்கப் புறப்படுவது அடிப்படையின்றிக் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பாகும். சுவரின்றிச் சித்திரம் வரைய முற்படுவதற்கு நேராகும். இவையெல்லாம் மூடர்களின் செயல்களாகத்தான் இருக்க முடியுமே அன்றி, முதிர்ந்த தமிழறிஞர்களின் செயல்களாக இருக்க முடியாது.

எனவே, நான் என்னுடைய தன்மதிப்பைக் காத்துக்கொள்ளும் முகத்தான் உ. த. க. வில் நான் ஏற்றுள்ள அத்தனைப் பொறுப்புகளினின்றும், உறுப்பினர் பதவியினின்றும் விலகிக் கொள்கிறேன் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க அண்ணாவின் புகழ்! வளர்க தமிழ்!

அன்பன், இரா. பாண்டியன், திருச்சி.

www.thamizham.net - Free E book No 7423

(ம-81) பண்பாடு தெரிந்து கொள்ளுங்கள்.

ஐயா, தனித்தமிழ் வளர்க்கிறேன், போற்றுகிறேனென்று தனி மாந்தரைத் தாக்கியெழுதும் தனித்தமிழ்ப் பாவலர்க்கும், மொழி ஞாயிறு பாவாணர் பண்புக்கும் நன்றி.

தனக்கு ஒருவன் உதவவில்லை யென்றால் அவனைப் பழிப்பதும், தமிழனில்லை யென்பதும் தங்களுடைய பண்பாடு போலும்! உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டுடையது. ஆனால் அந்த உயர்ந்தோர் செய்யும் செய்கையைச் சிறுமகார்போல் பழித்தும், தூற்றியும் "எவ்வ துறைவ துலக முலகத்தோ டவ்வ துறைவ தறிவு" என்பதையும் விடுத்து, "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங் கல்லா ரறிவிலா தார்" என்ற நிலையில் பாவாணருடைய கருத்து இருக்கின்றது. தங்களுடைய அமைப்பில் பண்பாடு ஏற்பட வேண்டு மானால், பாவாணர் வழிநின்றே கூறுகிறேன். பாவாணர் கூற்றுக் கொப்ப தி. க. விலிருந்து தி. மு. க. தோன்றியதுபோல் தி. மு. க. விலிருந்து த. த. க. தோன்றுவதுபோல் உ. த. க. விலிருந்து உ. த. மு. க. (உலகத் தமிழ் முன்னேற்றக்கழகம்) உண்டாகும். அன்றே பண்பாடு போற்றத் தெரிந்து கொள்வீர்கள். வறட்டுக் கொள்கைகளாலும் பசையற்ற கருத்துகளாலும் நீங்கள் உ. த. க வை, வளர்க்கமுடியாது.

—கோ. தமிழிறைவன், நெய்வேலி-3.

(ம-82) இவரா அவர்....?

அன்புடையீர்! வணக்கம். கடந்த தென்மொழி இதழில் இ. மறைமலை அவர்களின் மடலைக்கண்டு நாணினேன்-காரணம் "இன்னும் ஓராண்டில் தெ. பொ. மீ. யை மதுரைப் பல்கலைக் கழகத்தின் கண்காணகர் பதவியிலிருந்து விரட்டிவிடுவேன்" என வீறாப்பு பேசிய அந்த மறவனு இன்னொருவர் காலடியில் போய் வீழ்ந்து பதவியைப்பெற நினைப்பது? இவர்கள் எல்லாரும் உண்மையில் தமிழ் வாழ, தமிழன் வாழ, உழைப்பவர்கள்தாமா, அல்லது தாம் உயரும் வரை தமிழை உயரவைப்பதைப்போல் நடிக்கும் கூட்டமா?

அண்ணாவின் தம்பி என்று சொல்லிக்கொண்டு பெருமைப்படும் கலைஞரையே அண்ணாவின் ஆசிரியராக்கி அதைக்கொண்டு, பதவி பெற்றுத் தம்மை வளர்த்துக் கொண்டு, இவர்கள் பெறப்போவ தென்ன? பேடிகள், அடிமைகள் என்ற பெயர்களையே!

—அறவாழி, வெங்காளூர், கருநாடகம்.

[ம-83] அன்று பேசியது என்ன?

'உ. த. க. வுக்குக் கொள்கை உண்டா' என்ற இ. மறைமலையின் மடலுக்கு விடுத்த மடல் படி:-

"ஐயா, வணக்கம். உ. த. க வுக்குக் கொள்கை உண்டா? என வினவும் நீவிர் முதற்கண் திருச்சியில் நடந்த உ. த. க. அமைப்பு மாநாட்டில் பேசியது என்ன என்பதை எண்ணிப்பாருங்கள். அந்த

www.thamizham.net - Free E book No 7423

மறந்து இப்போழ்து கலைஞர் ஆட்சிக்கு மாறுபட்ட இயக்கத்தில் யானும் என் தந்தையாரும் இம்மியும் பங்குகொள்ள மாட்டோம் என்று புலம்புவது என்னை?

நம் தமிழ்நாட்டில் இதுபோழ்து நும்போன்ற தன்மானமற்ற வர்களே மிகுதி. அதாவது நூற்றுக்குத் தொண்ணூற்றைன்பதே முக்காலே மூன்று வீசம் பெயர் என்பதறிக. எனவே நீர் உ. த. க. வில் இருப்பதைவிட விலகி இருப்பதே சாலச் சிறந்தது!

ஆனால் நும் தந்தையாரைப்பற்றிக் கருத்தறிவிக்க நீர் யார்? "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல்லெனும் சொல்" என்ற மறைமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கவேண்டிய நீர் "மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என்கரிசு செய்தானென் சொல்" என்று புதுக் குறள் புனையும் அளவிற்குத் தந்தையார் பெயருக்குக் களங்கம் விளைவிக்காதீர்!

—பழங்கரைவேள், பழங்கரை, அவிநாசிவட்டம்.

[ம-84] "கேட்போர் நெஞ்சில் தமிழ் உண்டா?

அன்புகெழுமிய ஐயா, வணக்கங்கள். "உ. த. க. வுக்குக் கொள்கை உண்டா" எனும் முடங்கல் கண்டோம். முடங்கல் மட்டுமா கண்டோம்... இல்லை இல்லை... முடங்கிக்கிடக்கும் ஒரிரு தமிழரின் நிலைகண்டோம். "நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு" என்று தமிழ்த்தாயிடம் மன்றாடினார் பாவேந்தர், அன்று. இன்றோ "நன்னிலை உனக்கெனில் எனக்குந்தானே" என்று "கட்சி"யின்முன் மண்டியிடுகின்றனர் தமிழர் சில்லோர். தமிழைவிடக் "கட்சி" பெரிதாகப் போய்விட்டது அம்மடல் விடுத்த அன்பர்க்கு. 'கட்சி', அன்பரின் கண்களுக்குத் திரைபோடுகிறது. தமிழின் வளமும், தமிழன் நலமும் கருதி, அரசியல் தொடர்பின்றித், துவக்கப் பெற்றிருக்கும் உலகத் தமிழ்க் கழகத்திற்கு, ஒருமித்த உளத்தினராய்த் தமிழர் அனைவரும் துணைநிற்பதை விடுத்து, 'இது எங்கள் கலைஞர்க்கு மாறுபட்ட பாதையில் செல்லும் இயக்கம்' என்று ஒதுக்கித் தள்ளினால், தமிழர் எங்குத்தான் ஒன்றுபடுவது?

"மாற்றான்மேல் குறை காணுதலாலேயே தாங்கள் வளர்த்துவிடலாம் உ. த. க. வை, என்பது சிலரின் எண்ணம்" என்பது அன்பரின் குற்றச்சாட்டு. குறைகண்ட விடத்துச் சோம்பி இருத்தல் தமிழர் மரபன்று. எப்போதும் குறைகாணுகிறான் என்றால் எவ்விடத்தும் ஓட்டை இருக்கிறது என்பதுதானே பொருள். பிறர்மேல் குறைகாணுதல் இந்தப் பெருங்கழகத்தின் நோக்கமில்லை. முறை பிறழுங்கால் குறை சுட்டலே தமிழர் பண்பு. "இத்துணை இன்னல்களுக்கும் எதிர்ப்புகளுக்கு மிடையில் வாழவும் உதவாது, வளரவும் விடாது வாட்டுகின்ற இத்தமிழகத்தில், ஒரு தமிழன் எவ்வளவு துணிவோடு ஒரு தமிழன் ஆட்சியிலும் பிறவற்றிலும் குறைகண்டவிடத்துச் சுட்டிக்காட்டுகிறான்; இன்னும் அற்றை நக்கீரர் பரம்பரை நசித்துப் போய்விடவில்லை" என்று இறும்பூதெய்தி, எடுத்துக் கூறிய குறை

www.thamizham.net - Free E book No 7423

யைத் திருத்திக் கொள்ளாமல், "எடுத்ததற்கெல்லாம் இவன் குறை காணுகிறான்" என்று முறையிடுகின்றனர். தமிழக முதல்வரைத் தமிழ்ப்பெயர் தாங்கும்படி வேண்டிக்கொண்டதில் என்ன தவறு கண்டார் அன்பர்? தமக்கு வரும் வாய்ப்பு வளங்களையெல்லாம் விடுத்து இவ்வளவு துணிவோடு கூறுகின்றவரைப்பார்த்து, "உங்கள் உண்மைத் தமிழ்ப்பற்றை மெச்சுகிறோம்; ஆவன செய்வோம்" என்று ஒரு சொல்கூறக் காணோம். "இவர் யார் இதைக் கேட்பதற்கு" என்ற கேள்விதான் எழுப்புகின்றனர். ஆங்காங்குள்ள குறைகளைச் சுட்டிக் காட்டினால், அஃது ஆட்சிக்கு மாறுபட்ட இயக்கமன்று. எனவே, நல்லிளம் ஏறுகளுக்கு எனது வேண்டுகோள்; கட்சிக்குள் அடைபடாமல் தமிழ்ப்பணி புரிக. கட்சியினும் மேலாகக் கன்னித் தமிழைப் போற்றிடுக.

தமிழர் நிலைகண்டு கவல்வோன்,

—மெ. சு. இளங்கோ, அழகப்பா கலைக்கல்லூரி, காரைக்குடி.

[ம-85] அறிவுறுத்துவது பகையாகுமா?

மறைமலைக்கு விடுத்த மடற்படி:

பேரன்புடையீர்! வணக்கம். கடந்த 'தென்மொழி' யிதழில் தங்களின் விளமடல் கண்டோம்; பெருமகிழ்வு கொண்டோம், நனிநன்றி! வெட்டவெளியில் என்ன பேச்சு? சட்டமன்றத்திற்குவா!—என்று திரு. காமராசர் வினவியதன் விளைவே, தி. மு. க. வின் இற்றை வளர்ச்சியும் ஆட்சியுமாகும். அதேபோன்று உ. த. க. விற்குக் கொள்கையுண்டா? என்று விளித்து அதன் நோக்கையும்-போக்கையும் அனைவரும் தெளிவுபெற வாய்ப்பளித்த தங்கள் செயலுக்கே நன்றிநவின்றோம். ஆனால்... தங்கள் மடலை மேலும் தொடர்கின்றபோது பொதுவாக உ. த. க. விடமும், குறிப்பாகவும், சிறப்பாகவும் பாவலர். திரு பெருஞ்சித்திரனார் அவர்களுடைய ஆசிரியவுரைகளிலும் குறை காண்கின்றீர்கள் என்று கண்டோம். தங்களின் மாறுபட்ட சூழலும், வேறுபட்ட எண்ணமும் குறைகூறும் உளநிலைக்குக் கரணியமாக இருக்குமேயன்றிப் பாவலர். திரு. பெருஞ்சித்திரனார் அவர்களின் போக்கு கரணியமாக இராதென்றே கருதுகின்றோம். ஒருகால், மாறுபட்ட நோக்கும்—போக்கும் இருக்கக் கூடுமென்றால் அதுவும் தமிழ்மீதும், தமிழினத்தின் மீதுங்கொண்ட ஆழ்ந்த பற்றின் கரணியமாகவே இருக்குமேயன்றித் தாங்கள் குறிப்பிடுவது போன்று சொந்தக் கரணியங்களின் பொருட்டாக இராதென்பது உண்மையாகும்.

தமிழுக்காக வாழ்வோரின் செயலையும், தமிழால் வாழ்வோரின் செயலையும் ஒன்றுபடுத்திக் குழம்பவோ குழப்பவோ வேண்டாவென அன்புடன் வேண்டுகின்றோம். "அரசியலாளன் அடுத்த தேர்தலைப் பார்ப்பான், அறிஞன் அடுத்த தலைமுறையைப்பார்ப்பான்"-என்ற இலக்கணத்தை யொட்டி நோக்குங்கால், வேறுபாடு தெளிவாகுமென்று கருதுகின்றோம்.

அறிவுரை—தூற்றுமொழி இவ்விரண்டையும் பகுத்துப்பார்த்தல் வேண்டற்பாலது. மேலும் பிறரைத் தூற்றுவதாலேயே, தாங்கள்

www.thamizham.net - Free E book No 7423

உயரவேண்டுமென்று கருதுவோர் அரசியலாளரேயன்றி, அறிஞர் அல்லர். மாண்புமிகு. கலைஞர் கருணாநிதி அவர்களை 'அருட்செல்வம்' எனத் தூயதமிழில் பெயரை மாற்றிக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தது—அறியாமையின் பாற்பட்டதெனக் குறிப்பிடுகின்றீர்கள். தமிழுக்காகத் தம்முயிரையும் பொருட்படுத்தாது, தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்த, 'தமிழ்ச்செம்மல்' தம் பெயரையும் தூயதமிழில் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கூறியதில் என்ன தவறிருக்கமுடியும்? நாராயணசாமி நெடுஞ்செழியனுகவும், சோமசுந்தரம் மதியழகனுகவும். இராமையன் அன்பழகனுகவும், கோதண்டபாணி தில்லைவில்லாளனுகவும், சின்னராசு சிற்றரசாகவும் மாற்றப்பட்டனவெல்லாம் எதன்பொருட்டு? தம் தமிழுணர்வைப் புறவுலகும் உணரவேண்டும்; அதேபோன்று பலரும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்ற விழைவின் பொருட்டுத்தானே! தங்கள் கூற்றின்படி நோக்கின், அவர்களனைவரின் செயலும் அறியாமையின் பாற்பட்டதா? மற்ருென்றையும் தாங்கள் நோக்கவேண்டும். கலைஞர் அவர்கள் தமிழக அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோதுதான் பெயரை மாற்றிக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதேயன்றி, கழகத்தவராக மட்டும் இருந்தபோது விடுக்கப்படவில்லை. ஏனெனில் 'மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி' என்பதையொப்ப, குடியரசு நாட்டில் அமைச்சர் நல்வழிச் செல்லுதலே மக்களை அவ்வழிச் செலுத்துவதாகும். மேலும் கலைஞர். திரு. கருணாநிதி போன்ருேரைப் பெயர் மாற்றிக்கொள்ள வேண்டாது. தமிழ்ப்பகைவரான பக்தவத்சலம் போன்ருேரையா வேண்டுதல் வேண்டுமென்று தாங்கள் கருதுகின்றீர்கள்?

திரு. கருணாநிதி அவர்களின் திறமைக்குச் சான்று காட்டியிருக்கின்றீர்கள். அத்திறமையும், ஆற்றலும் நந்தமிழ் ஏற்றத்திற்கும், நந்தமிழர் மேன்மைக்கும் பயன்பட வேண்டுமென்பதே பாவலர் அவர்களின் விழைவும், நம்போன்ருேர் விருப்பமுமாகும்.

—மு. இளம்பரிதி, உ. த. க. உரத்தநாடு.

(ம-86) உண்மைத் தமிழ் அறிஞர்களுக்கு அரசு செய்ததென்ன?

மறைமலைக்கு விடுத்த மடற்படி இது:

அன்புள்ள நண்பர் மறைமலைக்கு வணக்கம். கும்பம், மீனம் தென்மொழியில் தாங்கள் எழுதிய கட்டுரைக் கருத்தினைக்கண்டு சிரிப்பதா அல்லது அழுவதா? என்று புரியாமல் இருக்கின்றேன். திருச்சி அமைப்பு மாநாட்டில் தி. பி. 1999-கன்னி 19, 20, (5, 6-10-68) மேடை ஏறி உலகத் தமிழ்க் கழகம் இப்படித்தான் இருக்க வேண்டும்; இப்படி, இப்படிப் போகவேண்டுமென்று கொள்கை விளக்கம் கூறிய தாங்களா இன்று உ. த. க வுக்குக் கொள்கை விளக்கம் இருக்கிறதா என்று வினு எழுப்பியிருப்பவர்? வேடிக்கையாகவும் இருக்கின்றது.

www.thamizham.net - Free E book No 7423

அடுத்து, "ஓர் ஊரின் பெயர் தமிழ்ப் பெயராக இருக்கவேண்டும் என விரும்பி அதற்காகத் தம் தலையையும் பணயம் வைக்க வந்தவர் தமிழ்ப்பெயர் தாங்கினவர்தாமா? அது தேவை இல்லை என்றால் இப்போராட்டமும் தேவையற்றதுதானே!

அரசியல் துறையில் திரு. கலைஞர் மேதையாக இருக்கலாம். ஆனால் தமிழ் அறிஞர் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. கலைஞர் ஆட்சியைப்பற்றி முரசுகொட்டும் உங்களைப் பார்க்க இரக்கமாக இருக்கின்றது! பிற துறைகளைப்பற்றி நான் இங்குக் கூற விரும்பவில்லை. அது நமக்கு தேவை இல்லாத ஒன்று. தமிழ் என்று எடுத்துக்கொண்டால் தமிழுக்குத் தமிழர் ஆட்சியில் மலர்ந்த மறுமலர்ச்சி என்ன? எத்தனை அறிஞர்களின் புத்தகங்கள் வெளிவந்தன? தமிழர் வரலாறு எத்தனை அறிஞர்களைக் கொண்டு செப்பம் செய்யப்பட்டது? சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலி தப்பும் தவறுமாக இருக்கின்றதே, அதை இந்த அரசு தக்காரைக்கொண்டு செப்பம் செய்ததா? தமிழகத்தின் தவப்பயனாக, இனிஎன்றும் பெறமுடியாதவரும் ஆனால் இப்போது பெற்றிருக்கின்றவரும் ஆகிய மொழிஞாயிறு பாவாணருக்கு இந்த அரசு செய்த நன்மை என்ன? அவர் புத்தகங்கள் எத்தனைக் கல்லூரிகளில், உயர்நிலைப் பள்ளிகளில் பாட நூலாக உள்ளன? உண்மைத்தமிழ் அறிஞர்களுக்கு இந்த அரசு ஊக்கம் கொடுத்து ஆக்கப் பணியில் ஈடுபடுத்தியது உண்டா? சென்ற உலகத்தமிழ் மாநாட்டில் பாவாணரை மறந்த அரசு இந்த ஆண்டு பாரிசு உலகத்தமிழ் மாநாட்டிற்காகிலும் அவரை அனுப்பி வைக்க ஆவன செய்ததா? உலகத்தமிழ் மாநாட்டிற்குத் தகுதியும் புலமையும் மிக்க எத்தனை அறிஞர்களை இந்த அரசு அனுப்பிவைத்துள்ளது? தென்மொழி போன்ற உயர்ந்த நோக்கம் கொண்ட இலக்கியத் திங்களிதழ்களை இந்த அரசு போற்றியது உண்டா? நூலகங்களில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு போன்றவை இடம்பெற்று இருக்கின்றனவா? கலைஞர் அவர்களின் ஆட்சியை எவரும் குறைகூற வில்லை. காலம் நன்மைசெய்ய நமக்கு ஒரு வாய்ப்பை உண்டாக்கி இருக்கின்றது. காற்று எப்போதும் ஒரே பக்கம் அடிப்பதில்லை. காலம் மாறும், அதற்குமுன் நாம் நம்மை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நமக்கு இனி வரலாறே இல்லாமல் போய்விடும் பக்தவத்சலம் ஆட்சிக்கும். இன்றைத் தமிழன் ஆட்சிக்கும் மாறுபாடு இல்லாமல் போய்விடும். தாங்கள் இக்குறைகளை எல்லாம் போக்க ஒரு வழி கூறுங்கள். அல்லது இந்த அரசுக்கு இவற்றை எடுத்துக்கூறி நாம் போராடுவோம், பாவாணரையும், தென்மொழியையும், உள்ள தமிழ் அறிஞர்களையும் உலகுக்குக் காட்டுவோம். அப்போராட்டத்தில் நான் என் உடலின் எந்த உறுப்பை வேண்டுமானாலும் படையல் ஆக்குகின்றேன். என் உயிரே வேண்டுமானாலும் தருகின்றேன். என்னைப்போல் ஆயிரம், இரண்டாயிரம் தமிழர்கள் துடித்துக்கொண்டிருக்கின்றனர். இந்த அறப்போராட்டத்தைத் தொடங்க அணியமாக முடியுமா? முடிந்தால் செய்யுங்கள். உங்கள் திறமைக்கும், ஆற்றலுக்கும் இ∴து ஒரு வாய்ப்பு. தென்மொழி ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரன் அவர்களைப்பற்றியும் தாங்கள் தவறான

www.thamizham.net - Free E book No 7423

கருத்துக்கொண்டிருக்கின்றீர்கள். திரு. பெருஞ்சித்திரன் ஒரு தனிப் பட்ட மாந்தர் அல்லர்; உண்மைத் தமிழ்த்தொண்டர்களின் பொதுச் சொத்து அவர். வாழ்க பாவாணர்! வெல்க தென்மொழி! வளர்கதமிழ்!

—க. க. ஆறுமுகம், கருக்கம்பாளையம், சேயூர், கோவை. மா.வ.

(ம.87) தமிழ்ப்பற்றா? கருணாநிதிப்பற்றா?

தொண்டுசால் ஐயா, வணக்கங்கள். சென்ற இதழ் கண்டோம். 'நிறைதெரிந்தவர்க்கே குறைதெரியும்' என்பது அறிஞர் முடிவு. திரு. இ. மறைமலையவர்கள் உ. த க. வில் குறைகள் இருப்பதாகக் கூறுவது எவ்வாறு அறிவுடைமையாகும்? மதுரையில் உண்மைத் தமிழ்ப் பற்றுளர்களை உருவாக்கும் வாய்ப்புக் கிடைத்தும் அவ்வாய்ப் பைக் கைவிட்டமைக்குக் கவலுறாமல் மகிழ்ச்சியடைவதால் திரு. இ. மறைமலை அவர்களது 'உண்மைத் தொண்டு' ஐயுற வேண்டியதா கின்றது. தமிழுக்காகத் தொண்டு செய்வதாற் கிடைக்கக்கூடிய மகிழ்ச்சியைக் காட்டிலும் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கக் கூடியது எதுவோ, அது (எவரிடமிருந்தேனும்) அவருக்குக்கிடைத்திருக்குமோ என ஐயுறுகிறோம். அவ்வாறு இருந்தால்தானே "நல்ல வேளையாக" என்ற சொற்றொடர் வெளிப்படும்?

மெய்யான தமிழ், தமிழர், தமிழாட்சி என்பனவற்றை உ. த. க. அறிந்திருத்தல் வேண்டும். அறிந்திருக்கையில் ஆட்சியால்-கட்சி யால்–தனி மாந்தரால் மெய்யான தமிழுக்கு ஆக்கம் அளிக்காமல் கேடு சூழும் வகையில் எழும் பேச்சு, எழுத்து, செயல் முதலியவற் றைக் கண்டிக்கவேண்டிய இடத்தில் கண்டித்து, அறிவுரைகூறு வது உ. த. க. வின் கடமையாகும். அவ்வாறு கடமையாற்று வதைத் தவறெனக் கூறுவது இ. மறைமலை அவர்களுடைய தமிழ்ப் பற்றைக் காட்டாமல் கட்சிப்பற்றையும் கருணாநிதிப்பற்றையுமே காட்டுகிறது. இப்போது நடப்பது தமிழாட்சி–தமிழராட்சி யென்றால் 1967-க்கு முன்னே நடந்ததும் தமிழாட்சியே–தமிழராட்சியே!

குறை கூறுவதற்கும் குறையே கூறுவதற்கும் வேறுபாடு உண்டு. குறைகூறுவது குறையைத் திருத்திக்கொள்ளவே. குறை கூறுவதே பகைமை பாராட்டல் என்றுணர்தல் தவறு. அவ்வாறு உணர்வது உணர்வோர் குற்றமேயல்லாமல் கூறுவோர் குற்ற மாகாது.

தமிழ்நலம் தமிழர்நலம் போன்றவை யெல்லாம் உடல்போன் றவை. அந்நலன்களுக்காகப் பாடுபடும், தலைமை, கட்சி (உ. த. க. உள்பட) அமைப்புகள் ஆடை போன்றவை உடலைவிட ஆடை சிறந் தது என்று உணர்தல் தவறு. சட்டை பழுதடைந்தால் மாற்றப்பட வேண்டும். 'கலைஞர் ஆட்சியைச் சார்ந்து' போனால்தான் உ. த. க. வில் தமிழன்பர்கள் பங்கேற்பார்களென்றால் அவர்களுடைய தமிழ்ப் பற்றை ஐயுறுகிறோம். அவ்வாறு ஐயுறும் வகையில் திரு. இ. மறை மலை அவர்களது மடல் வெளிவந்தமைக்கு மிகமிக வருந்துகிறோம்.

www.thamizham.net - Free E book No 7423

இவ்வாறு நாங்கள் திரு. இ. மறைமலையவர்களது மடலை மறுத்து எழுதியதால் நாங்கள் அவர்களுடைய பகைவர் என எண்ண வேண்டா. பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்களுடைய எழுத்திலும் திரு. இ. மறைமலை அவர்களுடைய எழுத்திலும் பெருமதிப்புக்கொண்டவர்கள் நாங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

என்றும் உண்மைத் தமிழன்பர்கள்;

—செ. மதிவாணன், நா. இறையரசன், க. இறையன்பன், இராமநாதபுரம், கோவை-18.

(ம-88) கொள்கைக்கே குரல்கொடுப்போம்!

ஐயா, தனித்தமிழ் ஐயனே! வணக்கம். தென்மொழி சுவடி 8. ஓலை 1, 2. இதழில் உலகத்தமிழ்க்கழகத்தின் கொள்கைபற்றி மொழிப்பேரறிஞரும், கொள்கை உண்டா என்பதுபற்றி இ. மறைமலை அவர்களும் எழுதிய விளக்கங்கள் கண்டேன். அவைபற்றிச் சில குறிப்பிட விரும்புகின்றேன்.

இன்றைய அரசுக் கட்டிலில் அமர்ந்திருப்பவர்கள் அல்லது நேற்று அமர்ந்திருந்தவர்கள்தாம் அறிஞர்கள் என்று யாராலும் குறிப்பிட முடியாது. எத்தனையோ அறிவுச் செம்மல்கள் தூண்டா விளக்காக-பழகா இல்லமாகப் பாழாகி இருக்கிறார்கள். காரணம் கை கொடுப்போர், காப்பாற்றுவோர் இல்லாததே. இதே நிலைதான் இப்பொழுது உ. த. க. வுக்கு ஏற்பட்டுள்ளது. நல்ல கொள்கை; நடத்தக் காசு இல்லை. உயர்ந்த உள்ளங்கள், குறைந்த பணவலி; பரந்த அறிவு, குறைந்த பரிவு. இன்றை அரசோ, தமிழில் நாட்டம் இல்லாதது என்று குறைகூறிட முடியாமல் ஆளுகிறது. நாம் எதிர்பார்ப்பது எல்லாவற்றையும் செய்யவில்லை என்றாலும், சில செய்கிறது; செய்தது என்பது என்னவோ உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. ஆகவே அவர்கள் செய்த பெரிய தவறுகளையும் மன்னித்து, அவர்கள் செய்யும் நல்ல செயல்களைப் பெரிதாகப்பேசி உ. த. க. கொள்கைகளை உலவ விடுங்கள். இப்படி ஒத்துழைத்தும் உருப்படியானவற்றை உருவாக்கவில்லையெனில், உதைத்துப் பெறுவோம். கொள்கைக்குக்குரல் கொடுப்போம். இங்ஙன், தமிழ்த்தாயின் சவலைப்பிள்ளை,

—சங்கு. ச. சபாபதி, அம்பாசமுத்திரம்.

[ம-89] பொருட்படுத்தவேண்டிய ஒன்றன்று!

பெருமதிப்பிற்குரிய, பொதுச்செயலாளர் அவர்களே, பணிவான கைகூப்பு.

தென்மொழி-இதழில் வந்துள்ள நண்பர் மறைமலையின் மடல் கண்டோம். பொறுப்பும், பொருத்தமும் இல்லா அம்மடல், பொருட்படுத்தவேண்டிய ஒன்றன்று. எனினும், தாங்கள் அம்மடங்கலை வெளியிட்ட காரணியத்தாலும், மதுரை மாவட்ட அமைப்பாளனாகவும், உலகத் தமிழ்க் கழகத்தில் உறுதியான தொண்டனாகவும் உள்ளயாம், கடமையென்று கருதியதாலும் இம்மடலை விடுகிறோம். மறை

www.thamizham.net - Free E book No 7423

மலை மாபெரும் சொல்லேருழவர்தாமா என்றும், அவர் அருந்தமிழ் நாடெங்கும் சுற்றித், தம் நாவன்மையால், மக்களை உ. த. க வுக்குக் கொணரும் வல்லமையுள்ளவர் தாமா என்றும் யாரிடம் உசாவினீர்கள்? உ. த. க. மாவட்ட அமைப்பாளர் ஒவ்வொருவரும் 5 வெண் பொற் காசுகளை ஆண்டுக்கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும் என்று கழக நெறிமுறைச் சுவடியில் காணப்படுகிறதே, அதைக்கூட கண்டு கொள்ளாமல் ஏன் விரைந்து மதுரை மாவட்ட உ. த. க அமைப்பாள ரானார்? மதுரை மாவட்ட உ. த. க. அமைப்பாளராக ஆன மறைமலை ஏறக்குறைய ஓராண்டுப் பொறுப்பிலிருந்தார். அவர் தோற்றுவித்த கிளைகள் எத்தனை?

உ. த. க. வின் குறைபாடுகளால் கிளைகள் தோற்றுவிக்கப்படத் தம்மால் இயலவில்லை என்று சொல்லும் மறைமலை, முகவை மாவட் டத்தைச் சார்ந்த, அரசபாளைய (இராசபாளையம்) த்திலிருந்து வந்து கேட்ட நண்பரொருவரை முகவை மாவட்ட அமைப்பாளரிடம் அனுப் பாது, தம்மிடமிருந்த மதுரை மாவட்டத்திற்குரிய உறுப்பினர் சேர்ப் புப்படிவங்களையும். கழக நெறிமுறைச் சுவடிகளையும், உறுப்பினர் கட்டண மற்றும் நன்கொடைப் பற்றுமுறிச்சீட்டுப் பொத்தகங்களை யும் கொடுத்து அனுப்பிய செயல், நிறையுடையதா? குறையுடையதா?

குறைபாடுடையவர்களை, குறைபாடுடையவர்கள் என்று கூறு வது தவறன்று. பண்டாரகர். சி. இலக்குவனார் அவர்களே மதுரை யில் ஒரு பொதுக்கூட்டத்தில் உரைநிகழ்த்தும்போது, 'அமைச்சர்கள் என்றால் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பவர்களா? இல்லை. அவர்களுக்கும் தெரியாமல் அல்லது அவர்களறியாமலே கூட தவறுசெய்யக் கூடும்; நாம் அதை எடுத்துச் சொல்லவேண்டும்' என்று குறிப்பிட் டார். ஏன் இதை ஈண்டுச் சுட்டுகின்றேமெனில், தி மு. க. வானாலும் வேறெந்த அமைப்பானாலும் தவறுபுரியுங்கால் உ. த. க. கண்டனக் குரல் எழுப்பத்தான் எழுப்பும். அதை ஏற்றுத் திருத்திக்கொள்ளும் நல்ல மனமின்றி, மக்களாட்சிப் பண்பின்றி, காழ்ப்புணர்ச்சியோடு உ. த. க. வைக் கண்டிப்போரைக்கண்டு நாம் இரங்குவதைத்தவிர வேறென்ன செய்ய இயலும்?

தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார் ஆள்வோரைக் கண் டிக்கிறார் என்றால் அஃது அவரின் உரிமை, கடமை. இதற்கும் உ. த. க. விற்கும் தொடர்பில்லை. உ. த. க. வின் பொதுச்செயலாளர் என்ற முறையில் பெருஞ்சித்திரனார், யாரையும் கண்டித்து அல்லது வரவேற்று எழுதுவாரேயாயின், உ. த. க. வில் உள்ள ஒவ்வோர் உறுப்பினரும் அக்கருத்துகளைத் தங்கள் கருத்துகளாகக் கொள்ளும் கட்டுப்பாடுடையவர்கள். உ. த. க. வின் பொதுச்செயலாளர் எனும் பொறுப்பில், பெருஞ்சித்திரனார் எழுதும் கருத்துகளில் எம்போன்ற உ. த. க. வைச் சார்ந்தோர் மாறுபடின். அவருக்கு எழுதுவோம். கழக ஆட்சிக் குழுவில் அதுபற்றிக் கேட்போம். ஆனால், உ. த. க வின் கொள்கையே புரியாமல், ஓராண்டு மாவட்ட அமைப்பாளர்

www.thamizham.net - Free E book No 7423

பொறுப்பிலிருந்துவிட்டு, ஒரு செயலும் செய்யாவிட்டாலும் நன்றுயிருந்திருக்கும்; தவறுகப் பலவற்றைச் செய்துவிட்டு விலகிவிட்ட மறைமலை, உ. த. க. வின் எதிர்காலம் குறித்துக் கவலையுற்று எச்சரிப்பது எற்றுக்கு?

நடுவணரசின் கல்வி அமைச்சர், இராவ் என்பார், 'கருணாநிதிக்குத் தமிழ்ப்பற்று இருக்குமாயின் தம் பெயரைச் சமற்கிருதத்திலிருந்து தமிழுக்கு மாற்றிக்கொள்ள வேண்டும்' என்று சின்னாட்களுக்குமுன் வெங்காலூரில் சொன்னார். "என் பெயர் சமற்கிருதமொழியில்தான் அமைந்துள்ளது. இதைத் தமிழில் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேனெனினும், இப்பொழுது மாற்றினால் பெரும் தொல்லைகள் ஏற்படும் என்பதால் மாற்றுமலிருக்கிறேன். என் பெயராவது சமற்கிருதத்தில் அமைந்துள்ளது. ஆனால், இராவ் அவர்களுடைய பெயரையே காணேமே. சாதிப்பெயரன்றோ அவர் பெயராக இருக்கிறது' என்று முதலமைச்சர் நடுவணரசின் கல்வி அமைச்சருக்கு விடைகூறி யிருந்ததைபும் கண்டோம்.

இராவ் எள்ளலாகக் கேட்கலாம், பெருஞ்சித்திரனார் கேட்கக்கூடாதா? பா. இலக்குவனார், பாவாணர், பா. மெ. அழகனார், பெருஞ்சித்திரனார் போன்ற தமிழ்ப் பெரியார்கள் தம் மக்கட்குத் தமிழ்ப்பெயர் சூட்டியிருப்பதுபோல், 'கல்லக்குடி கொண்டான், காவிரித்தமிழ்கொண்டான்' என்றெல்லாம் பட்டங்களைச் சூட்டிக்கொள்ளும் முதலமைச்சர் தம் மக்களுக்கு என்ன மொழிப்பெயர் வைத்துள்ளார் என்று எம்மைப்போன்றோர் கேட்டால், அது தவறு? மக்கள் திலகம், நடிகர் திலகம் என்றெல்லாம் பட்டம் சூட்டிக்கொண்டுள்ளவர்களையா நாம் கேட்கின்றோம்? மறைமலைக்குச் சினம் வருவானேன்?

1960-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் மதுரை மாவட்ட உலகத் தமிழ்க்கழக அமைப்பாளராக அமர்த்தம்பெற்றயாம் நான்குமாதங்கட்குள் மதுரை நகரில் ஆறு உ. த. க. கிளைகளையும், அவற்றை இணைத்த வட்டக் கிளையையும், பழனிக்கருகிலுள்ள சத்திரப்பட்டியில் ஒரு கிளையையும் அமைத்துள்ளோம். இருபத்தைந்துக்கு மேற்பட்டப் பேராசிரியர்களும், புலவர்களும் மேற்சொன்ன கிளைகளிலே உறுப்பாண்மை பெற்றுள்ளனர். இவர்கள் எம்மால் மயக்கப்பட்டு உறுப்பினர்களானார்களா? அல்லது, உ. த. க. வின் கொள்கைளைப் புரிந்து கொண்டபின் உறுப்பினர்களானார்களா?

தமிழரின் எதிர்காலத்தை வரையறை செய்யக்கூடிய இயக்கமாம் உ. த. க. வை, பொறுப்பு வாய்ந்த பலர் பாடாற்றும் உ. த. க. வை, பரந்த மனமின்றி, தெளிவின்றி, நண்பர் மறைமலை குறைகூறத் தொடங்கியது அவருக்கு நன்றன்று என்று சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

உலகத் தமிழ்க் கழகத்தின் வளர்ச்சியை, செயல்திறனை, பொறுத்திருந்து பார்க்கவேண்டும். தி. மு. க. வளர்ந்ததுபோல்,

www.thamizham.net - Free E book No 7423

உ. த. க. வளராமைக்குள்ள காரணியங்கள் தெரிந்தவையே. தி. மு. க. அரசியல் அமைப்பு; உ. த. க. மொழி இயக்கம்; தி. மு. க. வில் இலக்கக்கணக்கில் வருவாய்பெறும் நடிகர் உளர்! உ. த. க. வில் பணம் படைத்தவரெவருமில்லை. பற்பல ஏந்துகளால், வாய்ப்புகளால் தி. மு. க காட்டுத்தீ போல் காட்சியளிக்கின்றது. ஏந்துகள் ஏதுமற்ற உ. த. க. வீட்டுத்தீ போல் விளங்குகிறது.

தி. மு. க. போல் உ. த. க. வளர வேண்டும் என்பதற்காக தி. மு. க. வைத் தாக்குவோர் உ. த. க. வில் ஒருவருமிலர்: உ. த. க. வை எதிர்க்க வேண்டும் என்று எண்ணுவோர் தி. மு. க. விலும் இருப்பதாகத் தெரியவுமில்லை. எனவே, மறைமலையின் கருத்துகள் முற்றிலும் தி. மு. க. வின் கருத்துகள் என்று உ. த. க. வில் உள்ள எவரும் எண்ண வேண்டா. மாணவராயிருக்குங்கால் தி. மு. க. வை மதிக்கத் தொடங்கியவர் மறைமலை. யாம் தி. மு. க. வின் முழுநேரத்தொண்டராக அன்றும் இன்றும் இருக்கின்றோம் ஆதலின் மறைமலையினும் தி. மு. க. வை நன்கறிவோம். தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகட்காக இயக்கங்களைக் குறைகூறுவது குறுகிய நோக்கமாகும் என்று மறைமலைக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க உ. த. க. வளர்க உ. த. க. வெல்க உ. த. க.

தங்களுண்மையுள்ள, கா. வையைநம்பி, அமைப்பாளர்,
உ. த. க. மதுரை.

[ம-90] உண்மைக்கதை இதுதான்…!

அன்புகெழுமிய ஐயா அவர்கட்கு அன்பு வணக்கங்கள். திரு. மறைமலை அவர்கள் தம்மை ஆழ்ந்த தி. மு. க. பற்றுளர் எனத் காட்டிக்கொள்வதினும் கருணாநிதிப் பித்தர் எனக் காட்டிக் கொள்வதில் முனைப்புக் காட்டியுள்ளார். இஃதொன்றும் வியப்பன்று. சாட்டை யெடுத்து அறிக்கைவிடத் தாளொன்று அற்றதுவே என வருந்திய மறைமலையார் தி. மு. க. ஏடுகளையும் அப்படித்தான் மதிப்பிட்டிருக்க வேண்டும். அப்படி மதிப்பீடு செய்த மறைமலையார் இப்படியொரு மடல் எழுதியிருப்பது வியப்பிற்குரியதில்லை—அவர் எழுதிய மடல் தேவையே இல்லாமல் வெளியிடப்பெற்றுள்ளது என்பதுதான் வியப்பிற்குரியது. அதுவும் தென்மொழியில் என்றெண்ணும் பொழுது வியப்பு இரட்டிப்பாகின்றது. மறைமலையார் மடலை அவ்விடத்தே பதிப்பித்து இடத்தை வீணடித்ததோடு அவர்க்குக் காசில்லா விளம்பரமும் தேடிக்கொடுத்திருக்க வேண்டியதில்லை என்பது மட்டுமன்றி, மறைமலையாரையும் அவர் தந்தையாரையும் ஒப்புதல் கேட்காது உ, த. க. வினது பேச்சாளர் என அறிவித்தது தவறு என்பதும் அடியேனின் கருத்து.

மதுரை மாவட்ட அமைப்பாளர் பொறுப்பை அவரிடம் ஒப்படைப்பது என்பது அவரது ஒப்புதலின் பெயரிலேயேயாம். அப்படியிருக்க அவர் விலகும்வரையிருந்த காலத்திலாவது தம்மை உ. த. க. உறுப்பினர் என்று தாம் சொல்லியிருந்திருக்க வேண்டும். மேலும் அவர் காலத்தில் தான் மதுரை நகரக்கிளை துவக்கப்பட்டது. அப்படியிருக்க அவர் தம்மை ஓர் அடிப்படை உறுப்பினராகக்கூட ஆக்கிக்கொள்ளவில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும். அவர் உ. த. க. வினது குறைபாடுகளாகக் குறிப்பிடுவனவற்றுள் அடிப்படை உறுப்பினரல்லாத ஒரு

www.thamizham.net - Free E book No 7423

வரிடம் அமைப்பாளர் பொறுப்பை ஒப்படைக்கும் உ. த. க. மேலிடத்தாரது கவனமில்லாமையும் ஒன்றாக இருக்கலாமோ என்பது எனது ஐயம். இஃதொருபுறமிருக்க மறைமலையாரும் அவர் தந்தையாரும் அடிப்படை உறுப்பினர்கூட ஆகவில்லை என்பதை மறைமலையார் சுட்டிக்காட்டிய பின்னரும் அவர்களது பெயர் இன்னும் பேச்சாளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிப்பு வராமலிருப்பது வருந்துதற்குரியது மட்டுமன்று; சற்று கடுமையாகச் சொல்லப்போனால் கண்டிப்பதற்கும் உரியதாகும்.

இனி, மறைமலை 13-4-70-இல் உங்கட்கு மடல் எழுதியுள்ளார். அவரை யான் 19-4-70-ல் அன்பர் பொன். வளவன் அவர்களுடன் சென்று கண்டு உரையாடினேன்; திருநகரில், அவரது இல்லத்திலேயே! அப்பொழுது அவர் கூறியவற்றைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகின்றேன். "மாநாட்டில் (மாநிலமாநாட்டில்) திருக்குறளுக்கு உரை எழுதியவர்களை வைத்துக்கொண்டே திருக்குறள் தமிழ்மரபுரையைப் போன்று இதுவரை எவரும் எழுதவில்லை; இனியும் எழுத இயலாது. இனிமேல் எழுதப்படின் அது பாவாணரினும் விஞ்சிய அறிவு படைத்தோரால் எழுதப்பெறல் வேண்டும் எனக் கூறியது அவ்வளவு சரியன்று." என்பது அவர் கூற்று

இலக்குவனார் மட்டும் திருக்குறளுக்கு உரை எழுதாது இருந்திருப்பின் மறைமலை இவ்வாறு கூறியிருந்திருக்க மாட்டார். இதனை வெளிப்படுத்தித் தமக்கு இழிவைத் தேடிக்கொள்ள விரும்பாத மறைமலையார் சிண்டுமுடியும் வேலையைத் துவங்கியுள்ளார், புலவர். குழந்தையைக் குழந்தைப் புலவர் எனக் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி!

ஆக தமது தந்தையாராகிய இலக்குவனார் பாவாணரினும், அறிவிற் சிறியாராய் ஆண்டுச் சொல்லப்பட்டமைக்காக மறைமலையார் வருந்தி யிருக்கலாம் என்றாலும் அடுத்துயான் கூறப்போகும் செய்தி, 'உண்மை அஃதன்று; மறைமலையார் பழிக்குப்பழி வாங்கத் துணிந்துவிட்டார்' என்பதையே காட்டும்.

"உ. த. க. துணைத் தலைவர் பதவியினின்று நீக்கப்பட்ட மெ. அழகனார் அவர்கள் கருணாநிதியாரிடம் பாவாணர்க்கு உதவியளித்தில் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டபொழுது, 'பாவாணர் பெருஞ்சித்திரனாருக்கும் அவரது தென்மொழிக்கும் தமக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என ஓர் அறிக்கை விட்டும்; செய்கிறேன்' எனக் கருணாநிதியார் கூறியதாக மெ. அழகனார் எம்மிடம் தெரிவித்தார்."-இப்படிக் கூறியவர் உடனிருந்த திருவேங்கடம்; மறைமலையார் தம்பி.

"உ. த. க தலைவரும் பேரறிஞருமாகிய பாவாணர் புரக்கப்பட வேண்டுமோயின் பெருஞ்சித்திரனார் பொதுச் செயலாளர் பொறுப்பினின்று விலகவோ விலக்கப்படவோ வேண்டுமென்பது உறுதி. அவ்வாறு செய்யவேண்டிக் கிளைக் கழகங்கள் தீர்மானம் நிறைவேற்றி வைக்குமேயாயின் யான் கரந்தையில் உ. த. க. அமைக்க உதவிபுரிவேன்"-இவ்வாறு கூறியவரும் திருவேங்கடமே. இதன் பொருள் என்ன? பெருஞ்சித்திரனாரை விரும்பாத மறைமலையும் மற்றவரும் அவரைப் பொதுச் செயலாளராக்கியிருக்கும் கழகத்தையும் தலைவரையும் விரும்பவில்லை. இவ்வளவுதான் கதை. இதைப்போய் உ. த. க. உறுப்பினர் உள்ளம் மயங்குதற்கிடந்தரும் வகையில் பெரிதுபடுத்தியிருப்பது

www.thamizham.net - Free E book No 7423

நமது கழக வளர்ச்சியைக் கெடுக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து. —சி. அறிவுறுவோன், அம்மையகரம், வாகூர்.

[ம-91] இப்படிப்பட்டவன் நான் என மெய்ப்பித்துள்ளார்.

அன்புள்ள ஐயா, வணங்கி மகிழ்கின்றேன். சுவடி: 8 ஓலை: 1, 2. தென்மொழியைக் கண்டவுடன் உள்ளம் மகிழ்வெய்தியது. தீந்தமிழ்ப் பாக்களையும், பாவாணர் ஐயாவின் கொள்கை விளக்கத்தையும், தங்களின் நூராசிரியத்தையும் படித்ததுமே என் உள்ளம் முழுநிறைவு பெற்றது. "மக்களவை"க்குப் பிறகு தாங்கள் வெளியிட்டுள்ள மடலைக்கண்டதும், உள்ளம் மிகவும் வருத்த முற்றது. நண்பர் திரு. இ. மறைமலை அவர்கள் இவ்வளவிற்கு மடல் வரைவார் என நான் கனவிலும் நினைத்திலேன். இன்றுள்ள ஆட்சியாளரின் நன்மதிப்பை பெற. அவர்களின் வாழ்த்துகளுக்குத் தாம் ஒருபொருட்டாக இருக்கவேண்டுமென்ற அவா வினால். ஒரு சிறிதும் அறியாப் பேதையைப்போல் தம் உள்ளத்திற்குத் தோன்றியதெல்லாம் எழுதியிருக்கின்றார். மிகவும் படித்த ஒருவர் எனப் பலர் எண்ணிக்கொண்டிருக்கும் வேளையில், தாம் ஓரளவிற்குப் படித்தவர் மட்டுமல்லர்; காலநேரங்களில் மிகச்சிறப்பாக மாறக்கூடியவர் என்பதையும் மெய்ப்பித்திருக்கின்றார். எத்தனை இலக்கியங்கள் படித்தென்ன? பட்டங்கள் பெற்றென்ன? தம் மக்களுக்காக, மொழிக்காக உண்மையாக, தூய்மையாக யார் உழைக்கின்றார்? தம் கட்சி, தம் மனைவி, மக்களுக்காக உழைக்கின்ற தலைவர்களை; இனம் கண்டு கொள்ளமுடியாத, ஒருவேளை கண்டு கொண்டாலும், அவர்களால் தமக்கு வரப்போகும் பதவிகளையும், பணத்தையும் எண்ணிக்கொண்டு உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் மிக வருந்துமாறு எழுதியிருக்கின்ற நண்பரைப்பற்றி நாம் என்ன கூறிவிட முடியும்? ஆரியர்கள் எத்துணை அளவிற்கு நம் மக்களைத் தம்பால் இழுத்துக்கொள்கின்றார்கள் என்பதை நினைத்துச் சினம் கொள்வதா அல்லது படித்துப் பட்டம்பெற்று, நானும் தனித்தமிழ் உணர்வுடையவன்தான், மொழிப் போராட்டங்களில் பங்கு பெற்றவன்தான், என் உள்ளம் தூய்மை நிறைந்ததுதான் எனக் கூறிக்கொள்வாரும், ஆரியவலையில் விழுகின்றனரே அதை எண்ணி வருத்தமுறுவதா என்றே புரியவில்லைகாலம் மாறிக்கொண்டு தான் இருக்கின்றது. இத்தகைய நண்பர்களின் உண்மையான உருவம் இன்றைக்காகிலும் தெரிந்ததே என மகிழ்ச்சியடைவோம். எத்தனை நாட்கள் இத்தகையவர்கள் மக்களை ஏமாற்றி வாழ்ந்துவிட முடியும்? எங்கள் உள்ளங்களிலெல்லாம் தனித்தமிழ்ப் பற்றுடையவர், நல்லவர், கொள்கையில் நாட்டமுடையவர் என்று எண்ணிக் கொண்டிருந்த நிலையில், "நீங்கள் நினைப்பது தவறு; நான் இந்த ஆட்சியாளருக்கு—குறிப்பாகக் கலைஞருக்கு அடிவருடியாக வாழ்பவன்; என்னைப்பற்றி இத்தகைய அளவிற்கு நினைத்துக் கொண்டிருப்பது தவறு" என்பதை மெய்ப்பித்திருக்கின்றார். போகின்றவர்கள் போகட்டும்; அவர்கள் என் றிருந்தாலும் போகின்றவர்களே! உண்மையை, தூய்மையை, அன்பை இந்த ஞாலம் ஒருநாள் (அந்த நாள் விரைவில் வரும்) உணரும். அப்பொழுது தங்களையும், இயக்கத்தையும் இந்த நாடு வாழ்த்தும்! நல்லுள்ளங்கள் வாழ்த்தும்; நம் தமிழ்த்தாய் வாழ்த்துவாள். என்னைப் போன்ற ஆயிரமாயிரம் உள்ளங்கள் தங்களைத் தொடர்ந்துவரும். வாழ்க தனித்தமிழ்! வளர்க உ. த. க!

அன்பன், பொற்செழியன், பெங்களூர்-1.

www.thamizham.net - Free E book No 7423

கெடுபிடிகளிலிருந்து விடுபடவும், அன்னாரின் அடிதாங்கும் படிக்கற்களாக இருப்பாரை விடுவிப்பதற்கும், நம்மொழி, இனம், நாடு உயர்வு பெறவும், தனித்தமிழில் செய்தித்தாள்களும். கிழமை, திங்கள் இதழ்களும் பல்கிப் பெருக வேண்டும். தமிழர் இல்லந்தோறும் தமிழ்மணம் பரவும் வழிசெய்யும் தங்கள் ஆர்வத்திற்குத் தமிழன்பர்கள் துணை நிற்க வேண்டுகின்றேன். —பொன். மாந்தனரிமா, பெங்களூர்-21.

0 195: தமிழ்த்தாளைத் தலைவர்க்கு! தென்மொழி இதழில் அறிவியல் கட்டுரைகள், அறிவியற் சொற்பட்டி, கற்பனை ஊற்றுக் கட்டுரைகள், மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள் போன்றவை எல்லா இதழிலும் இடம்பெற வேண்டும். விரைவில் பாவியமும், பாரதிதாசன் பாத்திறமும் தொடங்குக. இதழின் வளர்ச்சிக்கு இவை இன்றியமையாதவை. இவற்றை எதிர்நோக்கி மிக்க ஆவலாய் உள்ளோம்.

—கோ. திருநாவுக்கரசு, காரைக்குடி-3.

0 196: தென்மொழிக் காவல, வணங்கி மகிழ்கின்றேன். தங்களின் பெரு முயற்சியால் வரும் "தென்மொழி"த் தாளிகையைச் சில திங்கள்களாகப் படிக்கும் பேறு பெற்றேன். தூய்மையான தனித்தமிழ் நடையில் தாங்கள் எழுதும் ஆசிரியவுரைகளும், பாக்களும் என்னை மிகவும் கவர்ந்தன. எத்தனையோ தாளிகைகள் தமிழகத்தில் தமிழைச் சீர்குலைத்துப் பணத்திற்காக எதையெதையோ எழுதிவரும் இந்நாளில், தங்களின் தாளிகை (தமிழரின் தாளிகை) எத்துணைச் சிறப்பு வாய்ந்தது என்பதை என்னால் உணர முடிகின்றது. தென்மொழியை என்னால் முதலிலிருந்தே படிக்க முடியாமல் போனதே என எண்ணி என் உள்ளம் மிகவும் வருந்தியது. 'தென்மொழி' தோன்றியதிலிருந்து, இந்நாள்வரை வெளிவந்த அத்தனையிதழ்களையும் நான் படிக்க விரும்புகின்றேன். ஆனாலும் என் பொருளியல் சூழ்நிலையில் அனைத்தையும் ஒரு நேரத்தில் வாங்க இயலாததாய் இருக்கின்றது. ஆதலால் ஒவ்வொரு திங்களுக்கும் ஒவ்வொரு சுவடியை வாங்கிப் படித்துப் பயன் பெறமுடியும். என் வாழ்க்கையில் நான் செய்யும் வினைகளில் இதுவே சிறந்ததென்று நினைக்கிறேன்.

—வே. நா. ரேணுகோபால்(பொற்செழியன்), பெங்களூர்-1

0 197: தூங்கும் தமிழனைத் துயிலெழுப்பும் தூயவனே! துன்புறுத்தும் வஞ்சகராம் வடவரை வென்று, வாகைசூடி வரும் வண்ணத் தமிழனே! தனித்தமிழை ஆண்டுவரும் தமிழரசே! தன்னிகரில்லாத தமிழ்; தண்டமிழ்; செந்தமிழ்; என இத்தரையினில் முழங்கி வரும் தமிழ்த்தாயின் தலைமகனே! நீ வாழ்க! நின் கழகம் வாழ்க! தமிழ் வாழ்க! அண்ணா! ஆணையிடுங்கள். "முத்தமிழை முரசொலிக்க முழுமூச்சாய் உழைத்திடுவேன். "உயிர் தமிழுக்கு! உடல் மண்ணுக்கு!" என ஓயாது உரைத்திடுவேன். குருதி உள்ளவரை தங்கள் வழி நடப்பேன். தமிழைக் காப்பேன்; தருக்கரை ஒழிப்பேன்; உறுதி உண்டு.

அண்டம் நடுங்க ஆரியனை விரட்டியடிப்பேன். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனை நினைவூட்டுவேன். ஓராயிரம் ஆரியனை ஒழித்திடுவேன். அப்பொழுது உணரட்டும் தமிழ்ப் பண்பை ஆரியர்!

—ஒ. பிச்சை, தெற்குத்தெரு, மேலூர்வட்டம்.

(அடுத்தபக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7423

0 198: மாண்புமிகு ஐயா அவர்களுக்கு, வணக்கம். உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து நான் அறிவுத்தெளிவு பெற்ற நாளிலிருந்து இற்றைய நாள்வரை தென்மொழியினைத் தவறாது கற்று வருகின்றேன். தங்களுடைய சொல்லாற்றலும், எழுத்துத் திறனும் தமிழ்க் குமுகாயத்தை அமைத்தே தீரும் எனும் நம்பிக்கை எனக்கிருக்கிறது.

–சே. போசு (தென்னவன்) மதுரை-3.

0 199: அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். அறிவியலை, அரசியலை. மருத்துவத்தை, கருத்துச் செறிவுடனே இலக்கியத்தை, இலக்கணத்தை, அணுவியலை, பொருளியலை, கலையியலை-நல்ல பண்புடனே, துணிவுடனே, தெளிவுடனே, மலரினிலே சுரக்கின்ற தேனமுதை-இந்த உலகினுக்கே அளிக்கின்ற தேனீப்போல் மொழிகளிலே இனிக்கின்ற தமிழாலே-செந்தமிழனுக்கே அளிப்பதுவும் தென்மொழியே! –சு. முத்தையா, பழங்காநத்தம், மதுரை-3.

0 200: ஐயா, ஒல்லும் வகையெல்லாம் தென்மொழி நடத்தி வருவதனையும் அதனால் ஏற்படுகின்ற இடர்ப்பாட்டினையும் யான் நன்கு அறிவேன். அதுவும் ஒரு நல்ல தனித்தமிழ்த் தாளிகையாக நடத்துவதென்றால்...! தென்மொழியில் தாங்களே இதன் நிலையை உணர்த்தியபோது கண்ணீர் உகுத்தேன்.

இதன் நிலையை அறிந்து ஊக்குவிக்கவும் தென்மொழி வளர்ச்சிக்கும் கையொப்ப உறுப்பினர்களைச் சேர்த்துள்ளேன்.

–வைரி-தரளம். சாத்தப்பாடி.

0 201: தண்டமிழ் காக்கும் செம்மல் ஏறே! வணக்கம். உம்முடைய பழைய ஏடுகள் கண்டேன், அவற்றில், தாங்கள் முகப்புத் தாள்களில் தீட்டியுள்ள உரைகளே போதுமே, தமிழர்களின் தனித் தமிழ் எழுச்சிக்கு, தன்மான வளர்ச்சிக்கு! வாழ்க நும் தொண்டு!

–செ. அறிவொளிமாறன், தலைவர். பகுத்தறிவுமன்றம், தேவக்கோட்டை.

0 202: ஐயா, வணக்கம். பிரான்சுநாட்டின் தலைநகரான பாரிசு மாநகரில் நடைபெறவிருக்கும் மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தமிழகத்திலிருந்து தமிழ்நாட்டின் சார்பாக அமைச்சர் மதியழகன் தலைமையில் செல்கின்ற தமிழர்களைக் கண்டேன். தமிழ்மணம் பரப்பும் தமிழ்த்திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் அழைக்கப் படாததுகண்டு மனத்துயரமுற்றேன்.

இந்தக்குழுவில் ஐயா அவர்கள் செல்வார்கள்; திக்கெட்டும் புகழ் மணக்க, தீஞ்சுவைத் தமிழ்ப்பேச்சால் பண்பட்ட தமிழ் வளத்தைப் பார்போற்ற பறைசாற்றுவார்கள்; தமிழின் எல்லா வளத்தையும் எடுத்துரைப்பார்கள் என எதிர்பார்த்தேன். இன்று ஏமாற்றப்பட்ட என் நெஞ்சம் குமுறுகிறது! தமிழன் எனச்சொல்லத் துணிவு இல்லாத தகுதியுடையோர்களும் சென்றுள்ளார்.

–சிவகெங்கை மு. ச. அழகேசன், சென்னை-17

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.
www.thamizham.net - Free E book No 7423